Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU





முரசு – 02 | திருவள்ளுவர் ஆண்டு 2043 | ஆனி 18 திங்கட்கிழமை (02.07.2012) | பக்கங்கள் 20 | ஓசை – 275


மரணத்தில் மர்மம் 05


அமுத சுரபிக்கு விருது 07


விலை அதிகரிப்பு 13


தவில் கண்ட மாற்றங்கள் 12


மாணவர்களால் கடத்தல் 18

# வடக்கு தமிழர்களில் கரிசனம் வேண்டும்

## கூறுகிறது அமெரிக்கா



வடக்கில் உள்ள தமிழர்கள் மீது பாகுபாடு காட்டப்படுவதாக குற்றம்சாட்டியுள்ள அமெரிக்கா, அவர்களையும் அரவணைத்து நடக்க வேண்டும் என்று அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

இலங்கை உள்ளிட்ட உலகம் முழுவதிலும் உள்ள நாடுகளின் செய்தியாளர்களுடன் காணொளி மூலம் நேரலையாக நடத்தப்பட்ட கலந்துரையாடலின்போது அமெரிக்காவின் ஜனநாயகம், மனித உரிமைகள் மற்றும் தொழிலாளர் விவகா ரங்களுக்கான உதவி இராஜாங்கச் செயலர் மைக்கல் போஸ்னர் இவ்வாறு கூறியுள்ளார்.

இலங்கையில் மிகப்பெரிய செயற்திட்டம் ஒன்று முடிக்கப்படாமல் உள்ளது குறித்து அமெரிக்கா முடிந்தளவு கரிசனை காட்டி வருகிறது. இலங்கை அரசாங்கத்துடன் நாம் அந்த விவகாரங்கள் குறித்து தொடர்ந்து கேள்வி எழுப்பு வோம்

(19)ஆம் பக்கம் பார்க்க

## தொடர்கதையாகும் அகதிகள் படையெடுப்பு

(சிட்னி)


இலங்கை அகதிகளைக் கொண்ட மற்றுமொரு படகு நேற்றைய தினம் அவுஸ்ரேலியாவின் கிறிஸ்மஸ்தீவை சென்றடைந்துள்ளது.

இந்தப்படகில் இலங்கையைச் சேர்ந்த 50இற்கும் மேற்பட்டவர்கள் ஒரு படகின் மூலமாக கிறிஸ்மஸ் தீவைச் சென்றடைந்துள்ளனர்.

இவர்கள் குறைந்தது மூன்று வாரங்கள் பயணம் செய்து கிறிஸ்மஸ் தீவைச் சென்றடைந்துள்ளதாக அவுஸ்ரேலிய

(19)ஆம் பக்கம் பார்க்க

## நாகபூஷணிக்கு இன்று தேர்



## சனத்தொகைப் பரம்பலில் மாற்றம் வடக்கில் ஏற்படுத்த முயற்சி

### குற்றஞ்சாட்டுகிறது கூட்டமைப்பு



(கொழும்பு)

வடக்கில் சனத்தொகைப் பரம்பலில் மாற்றத்தை ஏற்படுத்த முயற்சிக்கப்படுவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

வடக்கு சனத்தொகைப் பரம்பலில் மாற்றத்தைஏற்படுத்த அரசாங்கம் முயற்சித்து வருவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

வெலிஓயா, முல்லைத்தீவு மாவட்டத்தின்கீழ் காணப்பட்டதாகவும், இருபது ஆண்டுகளுக்கு முன்னர் வெலிஓயாப் பிரதேசம் அனுராதபுர மாவட்டத் துடன் இணைக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். வெலி

(19)ஆம் பக்கம் பார்க்க

## விருந்தினர்களுக்காக காத்திருக்கும் ஆசிரியர் விடுதி திறப்பு நிகழ்வு


(கிளிநொச்சி)

கிளிநொச்சி கல்வி வலயத்திற்கு உட்பட்ட விசுவமடு - பிரமந்தனாறு மகா வித்தியாலயத்தில் ஆசிரியர் விடுதி வேலைகள் பூர்த்தியடைந்து இரு மாதத்திற்கு மேலாகியும் திறக்க முடியாத நிலையில் உள்ளது.

இவ் ஆசிரியர் விடுதி அரச சார்பற்ற நிறுவனமொன்றால் அமைத்துக் கொடுக்கப்பட்ட போதும், சில அதிகாரிகள் திறந்து வைப்பதற்காக இன்னமும்

(19)ஆம் பக்கம் பார்க்க

## கறுப்புப் பட்டியலில் இலங்கை; எச்சரிக்கிறது ஐ.தே.க.



(கொழும்பு)

சர்வதேச அரங்கில் இலங்கை கறுப்புப் பட்டியலில் இடப்படக் கூடிய அபாயம் காணப்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது. ஊடக சுதந்திரம், தகவல் சுதந்திரமற்ற நாடுகளின் வரிசையில் இலங்கை பட்டியலிடப்படக் கூடிய அபாயம் நிலவுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித்தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா மிரர் மற்றும் லங்கா எக்ஸ் நியூஸ் ஆகிய இணையத் தளங்கள் முடக்கப்பட்டு, பணியாளர்கள் கைது செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கரு ஜயசூரிய கண்டனம் வெளியிட்டுள்ளார். அரசாங்கத்தின் நடவடிக்கைகள் அதிருப்தி அளிக்கும் வகையில் அமைந்துள்ளதாக அவர்

(19)ஆம் பக்கம் பார்க்க

## துண்டுப் பிரசுர நடவழக்கை அரச மருத்துவ சங்கம் முழவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்திய சாலைப் புற்றுநோய் வைத்திய நிபுணர் ந.ஜெயக்குமாரின் வீடு தாக் கப்பட்டதும், யாழ்.போதனா வைத்தியசாலையில் இடம் பெற்ற ஊழல் விவகாரம் தொடர்பாகவும் தீர்க்கமான முடிவு கிடைக்காவிடத்து அடையாளப் போராட்டம் அல்லாத துண்டுப் பிரசுர நடவடிக்கை மேற்கொள்ளப்பட வுள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலை அரச மருத்துவ சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

எதிர்வரும் 8ஆம் திகதி வடக்கு, கிழக்கு ஆகிய இரு மருத்துவ சங்கத்தினர் மற்றும் வைத்தியர்கள் ஒன்றிணைந்து துண்டுப் பிரசுர நடவடிக்கை மேற் கொள்ளவுள்ளதாகத் தெரிவித்துள்ளனர். இவ் ஆரம்ப க நடவடிக்கையில் திருப்திகரமா விசாரணை நடைபெற்று

(19)ஆம் பக்கம் பார்க்க

## போதனா வைத்தியசாலை அறிக்கை சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்டது

யாழ்.போதனா வைத்தியசாலையில் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படும் ஊழல்கள் தொடர்பான விசாரணை அறிக்கையின் பிரதிகள் நீதிமன்றத்தின் ஊடாக சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சிறிகுகனேசன் தெரிவித்துள்ளார்.

யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நடைபெற்ற வார்ந்த ஊடகவியலாளர் சந்திப் பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன் வைத்திய நிபுணர் ஜெயக்குமாரின் வீட்டின் மீது தாக்குதல் நடத்தியவர்கள் தொடர்பான விசாரணை தற்போது நடைபெற்று வருகின்றது. இதுவரை இது தொடர்பாக எவரும் கைது செய்யப்படாத நிலையில் வைத்தியர்கள் போராட்டத்தை நடத்த உள்ளதாகத் தெரிவித்தி ருக்கின்றார்கள். இதனால் பாதிக் கப்படப் போவது மக்கள் என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். அத்துடன் வைத்தியசாலையில் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படும்

(19)ஆம் பக்கம் பார்க்க

## இணையத்தள நடவடிக்கை; ஐரோப்பிய ஒன்றியம் கவலை

(கொழும்பு)

ஸ்ரீலங்கா மிரர் மற்றும் லங்கா நியூஸ் இணையத் தளங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுக்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதரகங்களின் தலைவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

ஜனநாயக சமூகத்தில் ஊடக சுதந்திரம் மிக முக்கியமான தென்பதுடன், அச்சுறுத்தல் மற் றும் துன்புறுத்தல்களின்றி ஊடகவியலாளர்கள் தங்களது நியாயமான பணியை முன்னெடுக்க முடியுமாக இருக்க வேண்டுமெனவும் ஐரோப்பிய ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

(19)ஆம் பக்கம் பார்க்க

# பாடசாலைக் கட்டடங்கள் கிருஸ்ணபுரத்தில் அமைப்பு



ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமாரின் கோரிக்கைக்கமைவாக துரித மீள் எழுச்சித்திட்டத்தினூடாக கிருஸ்னபுரத்தில் பாடசாலைக்கட்டடங்களை அமைக்கும் பொறுப்பை ஏற்கின்றோம். அத்தோடு அவர் மக்கள் மீது கொண்டிருக்கும் அதிகரிசனையின் காரணமாக இப்பகுதியில் அமைந்துள்ள பிரதான வீதியை குறுக்கறுத்துப் பாயும் ஆற்றினூடாகப் பயணிக்கக் கூடிய வகையில் பாரிய பாலம் ஒன்றினையும் அமைத்துத்தருமாறு எம்மைப் பணித்துள்ளார். அச்செயற்பாட்டையும் நாம் விரைவில் ஆரம்பிக்கவுள்ளோம். மேலும் விபுலானந்தர் விளையாட்டு மைதானத்தினையும் புனரமைக்க நிதி ஒதுகீடு செய்துள்ளோம் என பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மீள் எழுச்சித்திட்டம் வடக்கிற்கான துரித மீள்ச்சித்திட்டம் மற்றும் கெமிதிரிய ஆகிய திட்டங்களின் பணிப்பாளர் லியனகே தெரிவித்துள்ளார். நேற்று கிருஸ்ணபுரத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமாரின் அழைபிற்கமைவாக அப்பகுதிக்குச் சென்று செயற்படுத்தவுள்ள குறித்த திட்டங்களை நேரில் பார்வையிட்டு அவற்றுக்கான நிதிஒதுக்கீடுகளை மேற்கொள்ள நடவடிக்கைகளையும் மேற்கொண்டபின் மக்களை சந்தித்து கலந்துரையாடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு மேலும் உரையாற்றுகையில்,

இப்பகுதியில் வாழ்கின்ற பலர் தமது பிள்ளைகளை வெளி நாடுகளுக்கு அனுப்பி கல்விகற்பித்துக் கொண்டிருக்கின்ற நிலையில் இவ்வாறு பின்தங்கிய மக்களின் பிள்ளைகள் கல்விகற்க பாடசாலை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்பதில் மிகுந்த கரிசனையுடன் செயற்படுபவர் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் இவரின் பணி பாராட்டுக்குரியது. எனது வயது அனுபவம் என்பனவற்றைக் கொண்டு நோக்குகையில் இந்நாட்டில் செயறபடுகின்ற நாடாளுமன்ற உறுப்பினர்களில் எந்நேரமும் மக்களைப்பற்றியே சிந்தித்து செயலாற்றிக் கொண்டிருக்கின்ற ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் இவர் எண்பதில் ஐயமில்லை. ஏனெனில எங்களோடு உரையாடக்கிடைக்கின்றபோதெல்லாம் ஏதோ ஒரு பகுதியில் செயற்பாட்டை மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தே பேசுவார் அத்தோடு எமது திட்டங்களில் நிதி முடிவடையும் தருவாயில் உள்ளபோதும் நாடாளுமன்ற உறுப்பினரின் கோரிக்கைக்கமைவாகவே இத் திட்டங்களுக்கு நிதிகளை ஒதுக்கீடு செய்துள்ளோம் எனவும் இவ்வாறான ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் இம் மக்களுக்கு கிடைத்ருக்கின்ற நிலையில் மக்கள் தாம் தனித்து விடப்பட்டவர்களாக எண்ணத் தேவையில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை பரந்தன் குடியிருப்புப் பகுதிக்கும் இவர்கள் விஜயம் செய்து அங்கு இயங்கி வரும் ஆனையிறவு அ.த.க பாடசாலைக்குரிய கட்டடங்களை அமைப்பது தொடர்பாகவும் ஆய்வினை மேற்கொண்டனர். அத்தோடு அங்கு வெள்ளப்பெருக்கை தடுப்பதற்கான கால்வாய்களை அமைப்பது தொடர்பாகவும் ஆராய்ந்தனர் மேலும் அப்பகுதி மக்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதற்கான சாதகமான வழிகள் சாத்தியப்பாடான தொழில வாய்ப்புக்கள் தொடர்பாகவும் ஆய்வு செய்து அதற்காக மக்களுக்கு வாழ்வாதாரக்கடன் தொகைகளினை அதிகமாக வழங்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

வடக்கிற்கான அபிவிருத்தித் திட்டங்களின் இவ் உயர்மட்டக் குழுவில் மீள் எழுச்சித் திட்டத்தின் மேலதிகத் திட்டப்பணிப்பாளர் வினோதராஜ் கிளிநொச்சி மாவட்ட பிரதித்திட்டப் பணிப்பாளர் விஜயகிருஸ்ணன் ஆகியோரும் உள்ளடங்கியிருந்தனர். இவாகளுடன் ஈ.பி.டி.பி.யின் கிளிநெச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன். மற்றும் பிரதேச சபை உறுப்பினர் கிருஸ்ணசாமி ஆகியோரும் சென்றிருந்தனர். இங்கு பல நூற்றுக்கணக்கான பொது மக்களும், மக்கள் அமைப்புக்களின் பிரதிநிதிகளும் வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஊளங்குளிர வரமளிப்பாய்!



அன்பெனு மருள் சுரந்து; நிதம்
அகிலாளும் உமை யவளாய்
உன்னடி வருவோர்க்கு; அவர்
உளம் குளிர வரமீளும்
இன்னலிருள் இடர் போக்கி; தேரில்
எழுந்தருளி வருபவளே!
என்னிரு கரம் கூப்பி; தாயே!
என்றுமுனை வணங் கிடுவேன்.

அன்பரசி – மயிலிட்டி.

## இரதோற்சவம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை வீரமாகாளி அம்மன் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா இன்று திங்கட்கிழமை காலை வசந்தமண்டபப் பூசையைத் தொடர்ந்து இடம்பெறவுள்ளது. அம்பாள் தேரில் ஆரோகணிக்கும் அற்புதக் காட்சி இடம் பெறவுள்ளதுடன், நாளை செவ்வாய்க்கிழமை தீர்த்தோற்சவமும் நாளை மறுதினம் புதன்கிழமை பூங்காவனத் திருவிழாவும் இடம் பெறவுள்ளது.

## தேர்த்திருவிழாவிற்கு திரண்ட மக்கள்

நயினை நாகபூசணி அம்மனின் இன்றைய இரதோற்சவத் திருவிழாவிற்கு நேற்று மட்டும் 20 ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் குறிகாட்டுவான் பாதையூடாகப் பயணித்ததாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், பொலிஸ் மற்றும் கடற்படையினரின் ஒத்துழைப்புடன் மிகப் பாதுகாப்பாகப் பக்தர்களின பயணங்கள் ஏற்பாடு செயயப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

40 இற்கும் அதிகமான இலங்கைப் போக்குவரத்துப் பஸ்கள், அதே எண்ணிக்கையான தனியார் பஸ்களும் சேவையில் ஈடுபட்டுள்ள அதேவேளை, பெருமளவான பக்தர்கள் தமது சொந்த வாகனத்திலும் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05,85)

## ஆதிகாளி அம்பாள் மஹோற்சவம்

தாவடி தெற்கு கொக்குவில் ஸ்ரீ ஆதிகாளி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் நாளை மறுதினம் 11.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 நாட்கள் நடைபெறவுள்ளது. தினமும் காலை 9.00 மணிக்கு அபிஷேகம ஆரம்பமாகி பகல் திருவிழா நண பகல் 1.00 மணிக்கு நிறைவுபெறும் மாலை 4.00 மணிக்கு ஆரம்பமாகும் சாயரட்சைப் பூசைகளுடன் இரவுத் திருவிழா 9.00 மணிக்கு நிறைவுபெறும் என பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (26)

## மகா கும்பாபிஷேகம்

(பூநகரி)

பூநகரி - மட்டுவில் நாடு சோபாலப்பிட்டி ஸ்ரீ சித்திவிநாயகர் மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 5 ஆம் திகதி காலை 10.00 மணியளவில் இடம்பெறவுள்ளது. எண்ணெய்க்காப்புச் சாத்தும் நிகழ்வு 4 ஆம் திகதி காலை தொடக்கம் மாலை 5.00 மணிவரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. சிவஸ்ரீ அர்த்தநாரீஸ்வரக் குருக்கள் தலைமையில் கும்பாபிஷேகக் கிரியைகள் நடைபெறவுள்ளன. (112)

## ஆளுநருடன் சந்திப்பு

வடமாகாண பாடசாலைகளிற்கு நியமிக்கப்பட்டுள்ள தேசிய கல்வியற் கல்லூரி ஆசிரியர்கள், தகவல் தொழில்நுட்ப ஆசிரியர்கள் ஆகியோரை நாளை மறு தினம் புதன்கிழமை காலை 9.00 மணியளவில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி சந்திக்கவுள்ளார்.

சகல ஆசிரியர்களும் தவறாது வருகை தருவதுடன், புதிய பாடசாலையில் பதிவு மேற்கொள்வதற்கான பிரதிகளையும் எடுத்து வருமாறு வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் அறிவித்துள்ளார்.

## மந்திகையில் இலங்கை வங்கிக்கிளை

(வடமராட்சி)

இலங்கை வங்கி கணினி வலைப்பின்னல் சேவையுடன் இணைந்த மந்திகை விரிவாக்கற் கிளை திறப்புவிழா நாளை மறுதினம் புதன்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் இலங்கை வங்கி கிள்ள தலைவர் கலாநிதி காமினி விக்கிரமசிங்க பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு கிளையைத் திறந்து வைக்கவுள்ளார்.

இந்நிகழ்வில் கௌரவ விருந்தினர்களாக வடமராட்சி வடக்குப் பிரதேச செயலர் ஆர்.ரி.ஜெயசீலன், மருதங்கேணி ஆதார வைத்தியசாலை வைத்திய அதிகாரி டாக்டர் டி.வினோதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (116)

## சாவகச்சேரி சிவன் கோயிலில் முறையற்ற விதத்தில் மலசலகூடம்


(யாழ்ப்பாணம்)

தென்மராட்சியில் பிரசித்தி பெற்ற சாவகச்சேரி சிவன் ஆலயத்தின் விநாயகர் பீடத்துடன் அண்டியும், ஆலயத் தீர்த்தக் கேணிக்கு அருகாமையிலும் முறையற்ற வகையில் மலசலகூடம் அமைக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆலயத்திற்கும் அருகில் உள்ள ஆலயத்திற்கும் இடையிலான ஒற்றுமை இன்மையாலேயே மேற்படி மலசலகூடம் அவசியம் இல்லாத நிலையில் அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இது குறித்து பொதுமக்கள் ஏற்படுத்திய பிரச்சினையை அடுத்து, தென்மராட்சிப் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர்கள் இதற்குச் சாவகச்சேரி நகர சபையே பதிலளிக்க வேண்டும் எனத் தெரிவித்தனர்.

மேற்படி விடயம் தொடர்பாக நகரசபை செயலாளரை அணுகிய போது குறித்த மலசலகூடம் அனுமதி இன்றியே கட்டப்பட்டது. அது அகற்றப்படும் என்றும் கடந்த வாரம் உறுதியளித்த நிலையில் நகரசபையின் அனுமதியற்றுக் கட்டப்பட்ட மலசலகூடத்தைக குறித்த இடத்தில் இருந்து அகற்றுமாறு இந்து இளைஞர் மன்றம் நகரசபையைக் கேட்டுக்கொண்டுள்ளது. (153)



அச்சுவேலி நாவலம்பதி காட்டுமலை கந்தன் மீது பாடப்பெற்ற "அழகன் முருகன்" இறுவட்டினை முன்னாள் துணை வேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் வெளியீட்டு வைப்பதனையும், பாடலாசிரியர் பொ.சகலகலாநிதி ஏற்புரை நிகழ்த்துவதையும் காணலாம். (03)

# கலை விழாக்கள் மூலமாகவே மாணவர்களின் ஆளுமை வெளிப்படுகிறது

## – யாழ். வலய உதவிக்கல்விப்பணிப்பாளர் –

(யாழ்.நிருபர்)

மொழித்திறன் விருத்தியுள்ள மாணவன் எல்லாவிதமான ஆளுமையும் நிறைந்தவனாக விளங்குவான். எனவே மாணவர்களை மொழித்திறன் மிக்கவராக உருவாக்குவதற்கு எல்லாப பாட ஆசிரியர்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். என யாழ்.வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் மீரா அருள்நேசன் தெரிவித்துள்ளார்.

கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற தமிழ்மொழித்தின விழாவில் பிரதம விருந்தினராகக்கலந்து கொண்டு உரை நிகழ்த்திய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், எமது தமிழர் பண்பாட்டுப் பாரம்பரியங்களை எடுத்துக்காட்டும் வகையில் மாணவர்களின் அழகான கிராமிய வரவேற்பு நடனம் நாதஸ்வர தவில் வாத்தியங்கள் முழங்க விருந்தினர்களை அழைத்து வந்தமை பாராட்டுக்குரியது.

இங்கு மாணவர்களின் தமிழ் மொழிப் பேச்சு சிறப்பாக இருந்தது. மெய்ப்பாட்டு உணர்வினை வெளிப்படுத்தும் வகையில் மாணவர்கள் மேடையில் பேச வேண்டும். பேச்சுத்திறன் உள்ள பிள்ளைகள் எதிர்காலத்தில் சிறப்பாக துலங்குவார்கள்.

மனித உணர்வுகளை மதிப்பதற்கும், அவற்றை அரங்கில் வெளிப்படுத்தி மக்களை மகிழ்விப்பதற்கும் நாடகம் உதவுகிறது. இயல், இசை, நாடகம் என்ற மூன்று கலைகளையும் இணைதது முத்தமிழ் விழாவாக இவ்விழாவைச் சிறப்பாக ஒழுங்கு செய்துள்ள தமிழ் மன்றத்தினர் பாராட்டுக்குரியவர்கள். கலை விழாககளின் மூலம் மாணவர்களின் ஆளுமை வெளிப்படுவதோடு அவாகளுடைய அனுபவப் பகிர்வுகளுக்கும் சந்தர்ப்பம் கிடைக்கிறது.

தமிழ்மொழி வாழவேண்டிய மொழி ஆள வேண்டிய மொழி, வரலாற்றுப் பெருமைமிக்க தொன மொழியாம் தமிழ் எங்கள் வாழ்வை வளப்படுத்த உதவுகிறது. ஆனால் இன்று சில பாடசாலைகளில் எழுத வாசிக்கத் தெரியாத மாணவர்கள் இருப்பது இதயத்தில் இரத்தக்கண்ணீரை வரவழைக்கிறது. எல்லா மாணவர்களையும் எழுத வாசிக்கத் தெரிந்தவர்களாக உருவாக்குவதற்கு அனைத்து ஆசிரியர்களும் எம்முடன் கைகோர்க்க வேண்டுமென்வும் கேட்டுக் கொண்டார். (10)

# அச்சுவேலி பொலிஸாரின் இலவச நடமாடும் சேவை

(அச்சுவேலி)

அச்சுவேலி பொலிஸ் பிரிவும், யா/இடைக்காடு மகாவித்தியாலமும் இணைந்து நடத்திய நடமாடும் சேவையின் மூலம் நூற்றுக்கணக்கான பாடசாலை மாணவர்களும், பொதுமக்களும பெரும் பயன் அடைந்துள்ளனர்.

இந்த நடமாடும் சேவையில் யாழ்.மாவட்டத்தில் உள்ள பல்வேறு அரசநிறுவனங்களும், யாழ் போதனாவைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர்கள் பலரும் கலந்து கொண்டு பொது மக்களுக்கான பல்வேறு சேவைகளை வழங்கியுள்ளனர்.

இதில் கண், காது, பல், சருமம தொடர்பான நோய்களுக்கான விசேட சிகிச்சைகளும், வழங்கப்பட்டதுடன் லயன்ஸ் கழகத்தினரால் இலவச மூக்குக் கண்ணாடிகளும் வழங்கப்பட்டன.

மேலும் தற்போதைய சிறுவர் துஷ்பிரயோகங்கள் மற்றும் அவற்றை தடுப்பது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவது தொடர்பான பல்வேறு கருத்துரைகளும் வழங்கப் பட்டதன் மூலம் மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் பெரும் பயன் பெற்றுள்ளனர். (03)

# நியமனம்

(வடமராட்சி)

கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியின் அதிபராக வடமராட்சிகிழக்கு மணற்காடு றோமன கத்தோலிக்க தமிழ்கலவன் பாடசாலை அதிபர் எம் கனகலிங்கம் வடக்கு மாகாணக்கல்வி அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

வடமராட்சி வலயக்கல்வி அலுவலக பருத்தித்துறை கோட்டக்கல்வி உத்தியோகத்தராக கரவெட்டி ஞானசாரியார் கல்லூரி அதிபர் எஸ். ஸ்ரீஇராமச்சந்திரனும் வடக்கு மாகாணக்கல்வியமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார். (01)

# தும்பளை, தம்பசிட்டி வீதிகளை புனரமைக்குமாறு கோரிக்கை

(தும்பளை)

பருத்தித்துறை நகரையும் தும்பளையையும் இணைக்கும் தும்பளை வீதி மிகமோசமாக சேதமடைந்த நிலையில் உள்ளது.

இதனால் இவ்வீதியால் பயணம்செய்வோர் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர். இவ்வீதியைக் கடந்தே தொழில் செய்வோர், பாடசாலை மாணவர்கள், இ.போ.ச பேருந்துகளில் பயணிப்போர் என பலதரப்பட்டோர் பயணம் செய்கின்றனர். இது போல தம்பசிட்டி பிரதான வீதியும் குன்றுங்குழியுமான நிலையில் பல வருடங்களாக செப்பனிடப் படாமல் உள்ளது.

உரிய அதிகாரிகளிடம் முறையிட்டும் இது வரை எந்தவித பலனும் கிடைக்கவில்லை என பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். மக்கள் நாளாந்தம் போக்குவரத்தை மேற்கொள்ளும் மேற்படி வீதிகளை சம்பந்தப்பட்டவர்கள் புனரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.(62)

# நேரடி ஒலிபரப்பு

(திருநெல்வேலி)

நயினாதீவு ஸ்ரீநாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா நிகழ்வுகள் இனறு காலை 9.00மணிக்கு பக்திபூர்வமாக இடம்பெறவுள்ளது.

இத்தேர்த்திருவிழா நிகழ்வுகள் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன யாழ்.F.M அலைவரிசையில் காலை 9.00 மணி தொடக்கம் ஒலிபரப்பப் படவுள்ளது. இதில் நேர்முக வர்ணணையை காரை எம்.பி அருளானாந்தம் வழங்கவுள்ளார். (60)

# கட்டாக்காலி கால்நடைகளால் தொல்லை மந்திகைசந்தை வியாபாரிகள் விசனம்

(வடமராட்சி)

மந்திகை சந்தை பல மாதங்களாக பாதுகாப்பு இல்லாத நிலையில் கட்டாக்காலி கால் நடைகள் இரவு நேரத்தில் உள் புகுந்து அங்கு பாதுகாப்பான முறையில் கட்டி தொங்கவிடப் பட்டிருக்கும் வாழைப் பழங்களையும் கட்டிவைக்கப்பட்டிருக்கும் மரக்கறி வகைகளையும் சாப்பிட்டு எச்சங்களையும் போட்டு விட்டு செல்வதாகவும் அங்கு இருக்கும் மலசலகூடமும் சுகாதாரமற்ற நிலையில் காணப் படுவதாகவும் வியாபாரிகளால் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.


பருத்தித்துறை பிரதேச சபையின் மந்திகை சந்தையானது நீண்டகாலமாக ஓர்தனியான கட்டடம் இல்லாத பட்சத்தில் சீரற்ற கொட்டகையில் இயங்கி வந்தது.

இதனால் வியாபாரிகள் மற்றும் அங்கு வரும் பொதுமக்கள் எனப்பலர் மழைக்காலத்திலும் பாரிய சிரமங்களை எதிர்கொண்டு வந்த நிலையில், சீரானமுறையில் கட்டட வேலைகள் பூர்த்தி செய்யப் படாது தற்காலிகமாக அச்சந்தை கட்டத் தொகுதியில் இயங்கி வருவதுடன், அங்குள்ள கதவினை இடித்து விழுத்தி விட்டு கட்டாக்காலி கால் நடைகள் நாளாந்தம் பாதுகாப் பாக கட்டி தொங்கவிடப்பட்டிருக்கும் ப்ழவகைகள் மரக்கறிவகைகள போன்றவற்றை சாப்பிடுகின்றன.

அத்துடன் இச்சந்தைக்கான மலசலகூடமும் உரியவகையில் பயன்படுத்துவதில்லை. இதனால சுகாதரமற்று தூர்நாற்றம் வீசுவதாகவும் பிறிதொரு சந்தர்ப்பத்தில் பயன்படுத்த முடியாத நிலை ஏற்படுவதாகவும் தெரிவிக கப்படுகின்றது.

மேற்படி பிரச்சினை தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் தெரிவித்தும் இதுவரை எவ்வித ஆக்க பூர்வமான நடவடிக்கைகளும் எடுக்கப்பட வில்லை என பாதிக்கப்பட்ட வியாபாரிகள் தெரிவிக்கின்றன. எனவே வியாபாரிகள் எதிர் நோக்கிவரும் பிரச்சினை தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனத்தில் எடுக்கும் படி வியாபாரிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (116)

# தேரேறி வருகின்றாள் வீரமாகாளி!



வண்ணையிலே வீரமாகாளி தேரேறிவருகிறாள்
வளமான வாழ்வுக்கு வழிகாட்ட தேரேறிவருகிறாள்
எண்ணியன தருகின்ற வீரசக்தி தேரேறிவருகிறாள்
ஏற்றதோர் தீர்வு தந்து எம்மையாள தேரேறிவருகிறாள்
மன்னர்கள் வழிபட்டவீரசக்தி தேரேறிவருகிறாள்
மாற்றங்கள் மண்ணில்தந்தருள தேரேறிவருகிறாள்
பத்திரகாளி துர்க்கை பராசக்தியாக தேரேறிவருகிறாள்
பக்தர்கள் வடம்பிடித்து வாழ்வு கேட்க தேரேறிவருகிறாள்

– மதுரகவி காரை எம்.பி.அருளானந்தம் –

(வண்ணை வீரமாகாளி அம்மாளுக்கு இன்று இரதோற்சவம்)

# தேர் ஏறி வந்துன் அடியாரை தேடி வந்து காத்திடையா



வடமராட்சி புகழ்பாடிய அருணகிரிநாதனே-கல்யாணவேலவன்
தனியாச்சி செய்திட அழைத்தவனே
அரோகரா என்றபக்தர் ஓசையுடனே-ஆறுமுகன்
ஆரோகணிக்கும் தேர் அழகுடனே
அழித்தல் தொழிலை செய்திட வருபவனே-முருகன்
அகங்காரம் கொள்சூரனை அழித்தவனே
பழம் பெரும் தேரில்வரும் ஆறுமுகனே-பொலிகை
தலம்மேவும் வன்னிமர நாதனே
தும்பிக்கைமுகம் கொண்டதம்பி ஆறுமுகா-உன்னில்
நம்பிக்கை வைத்து தொழுகின்றோமே
சூரர்குலம் அழித்த வேலவனே-குமரன்
தேவர் குலம் காத்தவள்ளலனே
பார்பேற்றும் கந்தவனப்பதியிலே-ஆறுமுகா
தேர் ஏறி வந்துன் அடியாரைக் காத்திடையா!

பொலிகையூர் விசிந்தன்

(பொலிகண்டி கந்தவன கல்யாண வேலவ சுவாமி மஹோற்சவம்: இன்று தேர்த் திருவிழா)

# சக்கரம் மலருக்கு ஆக்கங்கள் கோரல்

(தும்பளை)

அருள்மிகு வல்லிபுர ஆழ்வார் ஆலயச்சூழலில் அமைந்துள்ள பெரியாழ்வார் ஆச்சிரமம் பக்தர்களின் பசிப்பிணியை போககுகின்ற பணியோடு மட்டும் நின்றுவிடாமல் பிற ஆன்மீகப் பணிகளையும் முன்னெடுத்து வருகின்றது.

அந்தவகையில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்படுகின்றன. மேலும் 'சக்கரம்' எனும கலை இலக்கிய ஆன்மீக சிந்திப்பு ஏடு ஒன்றினையும் வெளியிட்டு வருகின்றனர். 'சக்கரம்' இதழின் முதலாம் ஆண்டு நிறைவினை முன்னிட்டு படைப்பாளிகளிடம் இருந்து சிறப்பு மலருக்கான ஆக்கங்கள் கோரப் பட்டுள்ளன.

சமர்ப்பிக்க விரும்புவோர் ஆடி மாத நடுப்பகுதிக்கு முன்பாக ஆக்கங்களை அனுப பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (62)

# கணிதப்பாட செயலமர்வு

(அச்சுவேலி)

யாழ்ப்பாணம் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கணிதபாடம் கற்பிற்கும் ஆசிரியர்களுக்கான விசேட செயலமர்வு நாளை செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இச் செயலமர்விற்கு பங்குபற்ற வரும் போது ஆசிரியர்கள் தேவையான கைநூல்கள் மற்றும் பாடப்புத்தகங்களுடன் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொளளப்பட்டுள்ளதுடன், இச் செயலமர்வின் போது எதிர்காலத்தில் க.போ.த(சா/த) பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களின் பெறுபேற்றை உயர்த்துவது தொடர்பான பல்வேறு செயற்றிட்டங்கள தொடர்பாகவும் கலந்துரையாடப் படவுள்ளதால் அனைத்து ஆசிரியர்களையும் அன்றைய தினம் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்ப்பாண வலய கணிதப்பிரிவினரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (03)

சட்டம் ஒரு சிலந்திக்கூடு. வண்டுகள் அதை அறுத்துக்கொண்டு அப்பால் போகின்றன. ஆனால், பூச்சிகள். அதில் சிக்கிக் கொள்கின்றன.

- செக்கோஸ்லோவேகியா

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
விளம்பரப் பணிமனை: 0212220188
thinamurasu@live.com

## தீயவை அறிந்து விலக்காமல் தீர்வில்லை!

தங்களுக்கு நன்மை பயக்கப் போவதில்லை என்று தெரிந்தும் உணர்ச்சிவசப்பட்ட கருத்துக்களின் பின்னால் மனிதர்கள் செல்வது ஏன்? மக்களைக் காக்கக் கூடிய தர்மம் எதுவோ அதை எப்போதும் சூது கவ்வியபடி இருப்பதும், முடிவில் தர்மம் வெல்லும் என்ற எதிர்பார்ப்பும் இலேசில் நடைபெறாதிருப்பதும் எதனால்? கெட்டவற்றைப் போற்றும் மனோபாவமும் நல்லவற்றை உதாசீனம் செய்யும் போக்கும் அறியாமையினால் வருவதா? அல்லது நம் இயல்பில் உள்ள ஒன்றா?

இதுபற்றிய ஒரு ஆய்வு பிரபல அமெரிக்கப் பல்கலைக் கழகத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. காலங்காலமாகச் சரித்திரத்தில் நல்ல சக்திகள், தீய சக்திகள் இடையே போராட்டம் நிகழ்ந்துள்ளன. நாடுகள் இடையே இனம், சாதி, மொழி, மதம், நிறம், பொருளாதாரம் போன்ற காரணங்களுக்காகப் போராட்டங்கள் வெடித்துள்ளன.

அந்த அமெரிக்கப் பல்கலைக்கழக ஆய்வில், கெட்ட நிகழ்வுகள் நம்மை அதிகம் பாதிக்கிறது. ஆனால், நல்லவற்றை அவ்வளவு நாம் ஆதரிப்பதில்லை என்று தெரியவந்துள்ளது. நன்மைகள் நடக்கின்றன. அவை நல்லவற்றைப் போற்றுபவர்களுக்கு மட்டும் ஆறுதலளிக்கிறது. ஆனால் தீயவை, நல்லவர்கள் கொடியவர்கள் எல்லோரையும் பாதிக்கிறது. "தீயவை தீய பயத்தலால் தீயவை தீயினும் அஞ்சப்படும்" என்பது வள்ளுவர் காலத்திலேயே அறியப்பட்டதுதான்!

ஒரு தீய குணம் படைத்த, லஞ்சத்தில் உழலும் அதிகாரியால் அந்த நிர்வாகமே குலையும். எவ்வாறு ஒரு பழக் கூடையில் ஓர் அழுகின பழம் ஒட்டுமொத்தமாக எல்லாவற்றையும் கெடுத்துவிடுமோ அதுபோல, நிர்வாகச் சீர்கேட்டிற்கு அந்த ஒரேயொரு ஊழல் அதிகாரி போதும். கெட்டுப்போன பழத்தை உடனே தூக்கி எறிவதுபோல திறமையற்றவர்கள், சுயநலவாதிகளை உடனே களையெடுத்தால்தான் நிர்வாகம் சீராக இயங்கும் என்று அந்த ஆய்வு முடிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எந்த ஒரு நபர் தன்னை முதலில் இருத்தி சக ஊழியர்களைப் புறக்கணிக்கிறாரோ, எவர் சுயநலத்துக்காகத் துறையின் நன்மையையும் வளர்ச்சியையும் அவமதிக்கிறாரோ அத்தகையவரை உடனே நீக்க வேண்டும். எவ்வளவு நல்ல திறமைசாலிகள் இருந்தாலும் ஒரு சுயநலக்காரர் நிறைவான பணிச் சூழலைக் கெடுத்துவிடுவார். இத்தகைய களையெடுப்பைத் திறம்படச் செய்த ஓர் அமெரிக்க நிறுவனம், திறமையாளர்கள் பிரகாசிக்கும் சூழலை உருவாக்கியதற்கான பரிசைப் பெற்றது என்றும் தெரியவருகிறது.

குறிப்பாக அரசியலில் ஈடுபடுவோர் சுயநலத்தை முதலில் வைத்தும், சாதாரண மக்களின் கஷ்டங்களை தங்களுக்கு மூலதனமாக்கிக் கொண்டும் செயற்படுவார்களானால், அந்த நாடே மீளமுடியாப் படுகுழிக்குள்தான் வீழ்ந்துகிடக்க நேரிடும்.

தமக்குக் கிடைக்கப்போகும் அரசியல் லாபத்துக்காக, மக்கள் அவலங்களைத் தொடர்ந்தும் சந்திக்க வேண்டும் என்றும், மக்களின் தேவைகள் எவையும் பூர்த்தியாகி விடக்கூடாது என்றும், அரசியல் தீர்வின்றி அவர்கள் தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்றும் விரும்புகின்ற ஒருசாரார் இருப்பது ஒட்டுமொத்த சமூகத்தையும் எந்த நிலையில் மீளவிடாமல் அழுந்த வைத்திருக்கும் என்பதை நாம் பல வருடங்களாகப் பார்த்து வருகிறோம்.

இவர்களை மக்கள் புரிந்துகொண்டு விலக்காமல், இந்த நாட்டில் நல்லதொரு சூழலுக்குள் சுபிட்ச வாழ்விற்குள் எமது மக்கள் காலடி எடுத்துவைக்க முடியாது. தீயதை அறிந்து விலக்காமல் தீமைகளிலிருந்து தவிர்ந்து கொள்வது சாத்தியமில்லை.

- ஆசிரியர்

# கிழக்குத் தேர்தலில் முஸ்லிம் கட்சிகள் கூட்டு


கிழக்கு தேர்தலில் முஸ்லிம் கட்சிகள் கூட்டாக இணைந்து போட்டியிடத் திட்டமிட்டுள்ளன. ஒரே சின்னத்தின் கீழ் அனைத்து முஸ்லிம் கட்சிகளும் போட்டியிடுவது குறித்து பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

முஸ்லிம் கட்சிகளின் கூட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்துவதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங் கிரஸ் முயற்சி மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இம்முறை மாகாணசபைத் தேர்தலில் முஸ்லிம் பிரதிநிதி ஒருவருக்கு முதலமைச்சர் பதவி வழங்கப்பட வேண்டும் என்பதே அனைத்து கட்சிகளின் விருப்பமாக அமைந்துள்ளது.

ஒரு சின்னத்தின் கீழ் அனைத்து முஸ்லிம் கட்சிகளையும் ஒன்றிணைக்கும் பேச்சுவார்த்தைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்துடன் இணைந்து போட்டியிட்டால் உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட வேண்டுமென முஸ்லிம் கட்சிகள் வலியுறுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# வரட்சிக் கால நிலையால் விவசாயிகளுக்கு பாதிப்பு இல்லை



(கொழும்பு)

தற்போது நிலவும் வரட்சியான காலநிலை காரணமாக விவசாய நடவடிக்கைகளுக்கு பாரிய அளவிலான பாதிப்புக்கள் ஏற்படாது என நீர் வள முகாமைத்துவத் துறை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

வரட்சி காரணமாக சில பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள், மாற்று உப பயிர்ச் செய்கைகளை ஆரம்பித்துள்ளனர்.

சோளம் மற்றும் ஏனைய உப பயிர்ச் செய்கைகள் மூலம் இந்த முறை அதிக விளைச்சலை தரும்.

ஆகவே வீண் அச்சம் கொள்ளத் தேவையில்லை. பண்டகசாலைகளில் போதிய அளவிலான நெல் சேகரித்து வைக்கப்பட்டுள்ளது. இரண்டு மூன்று வருடங்களுக்கு முன்னர் விவசாயிகளிடம் இருந்து கொள்வனவு செய்த நெல்கூட களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது.

கல்லோயா, மொனராகல, காத்தான்குடி போன்ற விவசாய உற்பத்திகள் அதிகளவில் மேற்கொள்ளப்படும் பிரதேசங்களில் நீர்ப்பாசன பிரச்சினை இல்லை எனவும் அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# மலேரியா நோயைத் தடுப்பதற்காக வெளிநாட்டிலிருந்து வருவோரும் பரிசோதனை

மலேரியா பரவியுள்ள நாடுகளில் இருந்து இலங்கைக்கு வருகை தரும் அனைவரையும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டுமென மலேரியா ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

விமான நிலையத்தின் மருத்துவப் பிரிவின் ஊடாக இந்த திட்டத்தை முன்னெடுக்க முடியும் என மலேரியா ஒழிப்பு பிரிவின் பணிப்பாளர் டாக்டர் சரத் தெனியகே குறிப்பிட்டார்.

இதன்மூலம் நாட்டினுள் மலேரியா பரவுவதை தடுப்பதற்கு பாரிய பங்களிப்பு வழங்கப்படும்.

சில சந்தர்ப்பங்களில் பெரும் எண்ணிக்கையில் நாடு திரும்புகின்ற புகலிடக் கோரிக்கையாளர்கள் இராணுவத்தினர் ஆகியோர் விமான நிலையத்திலுள்ள மருத்துவப் பிரிவின் ஊடாக பரிசோதனைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்க முடியும்.

மலேரியா காய்ச்சல் பரவியுள்ள நாடுகளில் இருந்து பலர் ஒரே சந்தர்ப்பத்தில் நாட்டிற்குள் வருகின்ற போது மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு தமது செயற்குழுவினரின் ஒத்துழைப்பை வழங்க முடியும்.

இந்த தற்காப்பு நடவடிக்கையை கிரமமாக முன்னெடுக்கின்ற பட்சத்தில் 2015 ஆம் ஆண்டில் நாட்டில் மலேரியாவை ஒழிக்கும் திட்டத்தை வெற்றிகரமாக மாற்ற முடியும் எனவும் தேசிய மலேரியா ஒழிப்பு பிரிவின் பணிப்பாளர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# சில இணையத் தளங்கள் கண்காணிக்கப்பட்டு வருகின்றன

(கொழும்பு)

சில இணையத் தளங்கள் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. ஊடக அமைச்சு சில இணையத் தளங்கள் தொடர்பில் கண்காணிப்புபணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ஊடக அமைச்சு தகவல் வெளியிட்டுள்ளது.

4 முதல் 5 இணைய தளங்கள் தொடர்பில் கண்காணிக்கப்பட்டு வருவதாக ஊடக அமைச்சின் செயலாளர் டபிள்யூ.ஜீ. கனேகல தெரிவித்துள்ளார்.

ஊடக அமைச்சில் பதிவு செய்யாது வதந்திகள் மற்றும் கிசு கிசுக்களை பிரதானமான செய்திகளாக வெளியிட்டு வரும் இணையத் தளங்களே இவ்வாறு கண்காணிக்கப்படவுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறெனினும், நாட்டில் இதுவரையில் 45 இணையத்தளங்கள் மட்டுமே அரசாங்கத் தகவல் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.

'பதிவு செய்யப்படாத பல இணையத் தளங்கள் ஊடக ஒழுக்கவிதிகளுக்கு புறம்பாகவே செயற்பட்டு வருகின்றன.

பதிவு செய்யாமல், வதந்திகளைப் பரப்பி வரும்இணையத் தளங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## நிர்வாகத் தெரிவு

(வடமராட்சி))

நெல்லியடி வணிகர் கழக புதிய நிர்வாகத் தெரிவும் கூட்டமும் அண்மையில் மேற்படி வணிகர் கழக நிலையத்தில் இடம்பெற்றது.

இதன்போது தலைவராக சிவக்கொழுந்து அகிலதாஸ் மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

உபதலைவராக முருகேசு சுந்தரலிங்கம், செயலாளராக தெய்வேந்திரம் சுதன், உபசெயலாளராக சின்னத்தம்பி தங்கராசா, பொருளாளராக சண்முக சுந்தரம் பிரேம்குமார் ஆகியோரும் நிர்வாக சபை உறுப்பினர்களாக 7 பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (116)

## கொற்றாவத்தை ஞானவைரவருக்கு மகா கும்பாபிஷேக விழா

(வடமராட்சி)

வடமராட்சி கொற்றாவத்தை ஆண்டாவளவு திருவருள் மிகு ஸ்ரீ ஞானவைரவர் பெருமான் திருக்கோயில் புனராவர்த்தன அஷ்டபந்தன பஞ்ச குண்ட மகா கும்பாபிஷேகப் பெருஞ்சாந்தி விழா எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.08 மணிமுதல் 10.44 மணிவரையுள்ள சுபநேரத்தில் நடைபெறவுள்ளது.

7 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.00 மணி முதல் மாலை 4.00 மணிவரையும் எண்ணைக் காப்பு சாத்தும் வைபவம் நடைபெறும். அதனைத் தொடர்ந்து மறுநாள் விநாயகர் வழிபாடு விசேட சாந்தி, பிம்பசுக்தி, ஐந்தாம் காலையாக பூசை, பஞ்சமுக அர்ச்சனை, வேதஸ் தோத்திர திருமுறை பாராயணம் என்பனவும் கும்பாபிஷேக தினத்தன்று காலை 6 மணிக்கு ஆறுகாலப்பூசையும் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து மாலை 7 மணிக்கு வசந்த மண்டப பூசைகளுடன் நாய் வாகனத்தில் வைரவப் பெருமான் திருவீதியுலா வரும் காட்சியும் இடம்பெறுவதுடன் மகா கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 12 தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெறவுள்ளது. (116)

# ஹிட்லரின் மரணத்தில் இருந்த மர்மம்

**ட்ருமன், சேர்ச்சில் ஆகியோரைச் சந்தித்த ஒரு விழாவில் பகிரங்கமாக "ஹிட்லர் சாகவில்லை. ஸ்பெயினுக்கோ, ஆர்ஜென்டீனாவுக்கோ நீர்மூழ்கிக் கப்பலில் தப்பிவிட்டார்" என்று கூறினார் ஸ்டாலின். அது மட்டுமில்லாமல், ஹிட்லரின் இறப்பு சம்பந்தமாக ரஷ்யா தயாரித்த கோப்பை "ஒபரேசன் மித்" என்று பெயரிட்டு அதை ஆராயும்படி கட்டளையும் இட்டிருந்தார். ஹிட்லர் இறக்கவில்லை என்னும் சந்தேகத் துளி இங்கிருந்துதான் முதலில் தூவப்பட்டது.**

**1945** இல் உலக வரலாற்றையே தலைகீழாகத் திருப்பிப் போட்டவன் அடோல்.்.ப் ஹிட்லர் (Adolf Hitler). இரண்டாம் உலக யுத்தத்தின் முடிவில் ஹிட்லரும், அவனது மனைவியான ஏ.்.பா பிரௌனும் தற்கொலை செய்து இறந்தது மட்டுமல்லாமல், அவர்கள் உடல்கள் எதிரிகளின் கைகளில் கிடைக்கக் கூடாது என்பதால் பெட்ரோல் ஊற்றிக் கொளுத்தப்பட்டார்கள் என்பதுதான் நாம் இதுவரை அறிந்த வரலாறு.

ஹிட்லரின் இறப்பு இப்படித்தான் நடந்தது என்று ஒரு வடிவம் நம்மால் நம்பப்பட்டுக் கொண்டிருக்கையில், ஹிட்லர் இறக்கவில்லை, அவன் தன் மனைவியுடன் தப்பிச் சென்றிருக்கிறான் என்னும் செய்தி 66 வருடங்களுக்குப் பின்னர் கிடைத்திருக்கிறது.

ஹிட்லரின் மரணம் என்னும் சம்பவத்தை அடிப்படையாக வைத்து இதுதான் நடந்தது என்று உலகமே நம்பும் விடயங்களை முதலில் பார்ப்போம்.

இரண்டாம் உலகப் போரின் உச்சத்தில் ஜேர்மனியின் ஆக்ரோசமான சக்தியைத் தனித்தனியாக எதிர்கொள்ள முடியாத நாடுகள், 'நேச நாடுகள்' என்னும் பெயரில் ஒன்று சேர்ந்து ஜெர்மனியைத் தாக்கின.

அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் என்பன ஒரு பக்கத்தில் அணி சேர்ந்து தாக்க மறுபக்கத்தில் சோவியத் ரஷ்யா தாக்கத் தொடங்கியது. இந்த நான்கு நாடுகளின் ஒன்று சேர்ந்த தாக்குதலுக்குத் தாக்குப் பிடிக்க முடியாமல் 30.04.1945 இல் ஜேர்மனி தனது தோல்வியைத் தழுவிக் கொண்டது. இறுதிக் கட்டப் போரின் போது ஹிட்லர் பெர்லின் நகரில் அமைந்த அரசுத் தலைவரின் கட்டடத்துக்கு கீழே இருந்த ஒரு நிலக்கீழ் சுரங்கத்திலேயே இருந்தான். எதிரி நாடுகளின் குறிப்பாக ரஷ்யாவின் விமானக்குண்டுத் தாக்குதலில் இருந்து தப்பிக் கொள்ள அங்கேயே பதுங்கியிருக்க வேண்டிய சூழ்நிலைஇருந்தது.அதுவே அவனின் இறப்புக்கான கடைசி இடமாகவும் மாறியது என்றும் சொல்லப்பட்டது.

ஹிட்லரின் இறுதி நாளில் என்ன செய்தான், எப்படி இறந்தான் என்பதை உலகிற்கே வெளிக் கொண்டு வந்தவர், 95 வயதாகியும் இன்றும் உயிருடன் இருக்கும் ஹிட்லரின் மெய்ப்பாதுகாப்பாளராக இருந்த 'ரோஹு"ஸ் மிஷ (Rochus Misch) என்பவர்தான். இந்த ரோஹு"ஸ் மிஷ் பிறந்தது 29.07.1917-இல். தனது 28ஆவது வயதில் அவர் ஹிட்லருடன் கடைசியாக இருந்திருக்கிறார். அவர் ஹிட்லரின் இறுதி நாள் பற்றி என்ன சொல்கிறார் என்பதைப் பாருங்கள்.....!

'ஏப்ரல் 30 திகதி, பங்கரில் உள்ள அனைவரையும் ஹிட்லர் அழைத்து எல்லாம் முடிந்து விட்டது. அவரவர் விரும்பிய இடங்களுக்குச் செல்லலாம். தேவையானவர்கள் மட்டும் இங்கு இருந்து கொள்ளட்டும். இப்படி அவர் சொன்னதால் அங்கு இருக்க வேண்டியவர்களில் நானும் ஒருவனானேன். ஹிட்லரும், ஏ.்.பாவும் தற்கொலை செய்வது என்னும் முடிவும் அப்போது எடுக்கப்பட்டது. புரொபசர் ஹாஸெ (Dr. Werner Hasse) ஹிட்லரிடம் சொன்னார்.

'முதலில் சயனைட் மாத்திரைகளை விழுங்கி விட்டு, துப்பாக்கியால் சுட்டுக் கொள்வது நல்லது' இதைக் கேட்ட பின்னர் ஹிட்லரும், ஏ.்.பாவும் தங்கள் அறையை நோக்கிச் சென்று கதவைச் சாத்திக் கொண்டார்கள். நெடு நேரம் எந்த அசைவுகளும் இல்லை. பிறகு ஹிட்லரின் அறையைத் திறப்பது என்ற முடிவுக்கு வந்தோம்.

திறந்த போது நான் மெல்ல எட்டிப் பார்த்தேன். நான் கண்ட காட்சி, ஹிட்லர் பெரிய சோபாவில் இரத்தக் கறையுடன் இறந்து கிடக்க, அருகில் இருந்த சிறிய சோபாவில் ஏ.்.பா பிரௌன் தலை சாய்ந்து விழுந்து கிடந்தார். பின்னர் சிலர் அவர்கள் இருவரையும் தூக்கிச் சென்று பங்கருக்கு வெளியே இருந்த இடத்தில் வைத்து பெட்ரோல் ஊற்றிக் கொளுத்தினார்கள்'.

ஹிட்லரின் இறப்பைப் பற்றி முழுமையானதொரு அறிக்கையைக் கொடுத்த ஒரே நபரும், ஹிட்லருடன் இருந்து தப்பியஒரே நபருமாக இருந்தவர் இந்த ரோஹு"ஸ் மிஷ்தான். ஹிட்லர் இறப்பதற்கு இரண்டு நாட்களின் முன்னர்தான் ஹிட்லரின் நண்பரும், இத்தாலியின் தலைவருமான முஸோலினியும் அவரது மனைவியும் கொல்லப்பட்டு, ஒரு பெட்ரோல் நிலையத்தில் அவர்களது உடல்கள் தலைகீழாகத் தொங்க விடப்பட்டு அவமரியாதை செய்யப்பட்டிருந்ததை ஹிட்லர் அறிந்திருந்தார். அதனால்தான் எதிரிகளிடம் தனதும், ஏ.்.பாவுடையதும் உடல்கள் அகப்படக் கூடாது என்று ஹிட்லர் முடிவு செய்து, அதனால் எரிக்கப்பட்டது என்றும் சொல்லப்பட்டது.



மே 1 ஆம் திகதி ஜேர்மனிய வானொலி, 'ஹிட்லர் இறந்துவிட்டார்' என்ற செய்தியை அறிவித்தது. அதற்கு அடுத்த தினம் அதாவது 02.05.1945 இல் ஹிட்லர் இருந்ததாகச் சொன்ன பங்கரை ரஷ்யா கைப்பற்றியது.

அத்தோடு ஹிட்லர் சம்பந்தமாகத் தங்களுக்கு எந்த ஆதாரமும் கிடைக்கவில்லை என்று அறிக்கையும் கொடுத்தது. ஆனால் சில மணி நேரங்களில் அவர்களுக்கு ஹிட்லரின் முழுமையான உடல் கிடைத்ததாகச் சொல்லி, அந்த உடலுடன் நின்று படங்களை எடுத்து ரஷ்யா வெளியிட்டது.

ஆனால் அடுத்த நாட்களிலேயே அது ஹிட்லரின் உடலல்ல என்றும், ஹிட்லர் தனக்னெ வைத்திருந்த 'டூப்' என்றும் அறிவித்தது ரஷ்யா. அந்த ஹிட்லரின் டூப்பாக இருந்த நபர், எதிரிகளின் இராணுவத்தை, ஹிட்லர் இறந்துவிட்டார் என்று நம்ப வைப்பதற்காக ஹிட்லரின், பாதுகாப்புப் படையினராலேயே கொல்லப்பட்டு அங்கு போடப்பட்டிருந்தார்.

ஹிட்லர் தனக்கென டூப்பை வைத்திருந்ததற்கும் ஒரு காரணம் இருந்தது. ஹிட்லரைக் கொல்வதற்கு ஜேர்மனியிலேயே சிலரால் ஒரு சதித்திட்டம் தீட்டப்பட்டது. அந்த சதித்திட்டத்தில் ஜுலை மாதம் 1944 இல் ஹிட்லர் வீதியில் ஊர்வலமாக வரும்போது கொல்லப்பட வேண்டும் என முடிவாகியது. அதற்கு 'ஒபரேசன் வோல்கிரீ' என்று பெயரும் இடப்பட்டிருந்தது.

ஆனால் அது படுதோல்வியில் முடிவடைந்தது. அந்தச் சதியில்' ஈடுபட்டார்கள் என்று 300க்கும் அதிகமானவர்கள் சரமாரியாகக் கொல்லப்பட்டனர். அன்றிலிருந்து ஹிட்லர் மக்கள் அதிகம் நடமாடும் இடங்களில் தனக்கென ஒரு டூப்பை அனுப்பி வைப்பார். அப்படி மொத்தமாக ஹிட்லருக்கு ஆறு டூப்கள் இருந்ததாகச் சொல்வார்கள். அதில் ஒருவன்தான் இறந்து காணப்பட்டான்.

இதன் பின்னர் ஹிட்லரும் ஏ.்.பாவும் தற்கொலை செய்து அவர்கள் இருவரது உடல்களும் எரிந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டது என்று ரஷ்யாவினால் அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது. உலகமும் அதை ஏற்று நிம்மதி பெருமூச்சு விட்டது.

ரஷ்யா விட்ட அறிக்கைகள் இத்துடன் முடிந்துவிடவில்லை.

இறுதியாக 1993 இல் ஹிட்லரின் இறப்புடன் சம்பந்தமான கடைசி அறிக்கையையும் ரஷ்யா வெளியிட்டது.

அந்த அறிக்கை, 'ஹிட்லர் இறந்த போது, எந்த சோபாவில் இருந்து கொண்டு தன்னைச் சுட்டுத் தற்கொலை செய்தாரோ, அந்த இரத்தம் தோய்ந்த சோபாவையும் ஹிட்லர் இறந்ததாகச் சொல்லப்பட்ட இடத்தில் எரிந்த நிலையில் துப்பாக்கிக் குண்டு ஒன்று துளைத்த அடையாளத் துடன் கூடிய அவரின் மண்டையோட்டையும் மட்டும் எடுத்துப் பாதுகாத்து வைத்திருக்கிறோம்' என்று இருந்தது.



ஹிட்லரின் மரணம் சம்பந்தமாக உலகமே நம்பியிருக்கும் சம்பவங்கள் இவைதான்.

இவையெல்லாவற்றிலும் இறுதியாக எஞ்சும் முடிவுகள் என்னவோ ஹிட்லரும் ஏ.்.பாவும் இறந்து விட்டார்கள் என்பதுதான். ஆனால்இவையெல்லாமே பொய்யென்று நிரூபணமாகி, ஹிட்லரும் ஏ.்.பாவும் உயிருடன் தப்பினார்கள் என்னும் செய்தி இப்போது நம்மை அதிர வைக்கிறது.

ஹிட்லர் இறந்து விட்டான் என்று உலகமே சொல்லிக் கொண்டிருக்க ஒருவர் மட்டும் திட்டவட்டமாக ஹிட்லர் தப்பிவிட்டான் என்று ஜுலை 1945லேயே சொன்னார். சொன்னவர் சாதாரணமானவர் அல்ல. அந்தக் காலத்தில் 'இரும்பு மனிதர்' என்று அழைக்கப்பட்டவரும், சோவியத் ரஷ்யாவின் தலைவருமான ஜோசப் ஸ்டாலினேதான்.

அதுவும் முக்கிய தலைவர்களான ட்ருமன், சேர்ச்சில் ஆகியோரைச் சந்தித்த ஒரு விழாவில் பகிரங்கமாக 'ஹிட்லர் சாகவில்லை. ஸ்பெயினுக்கோ, ஆர்ஜென்டீனாவுக்கோ நீர்மூழ்கிக் கப்பலில் தப்பிவிட்டார்' என்று கூறினார். அது மட்டுமில்லாமல், ஹிட்லரின் இறப்பு சம்பந்தமாக ரஷ்யா தயாரித்த கோப்பை 'ஒபரேசன் மித்' என்று பெயரிட்டு அதை ஆராயும்படி கட்டளையும் இட்டிருந்தார் ஸ்டாலின். ஹிட்லர் இறக்கவில்லை என்னும் சந்தேகத்துளி இங்கிருந்துதான் முதலில் தூவப்பட்டது.

உலகிலேயே மிகவும் பலமான உளவுப்படை ரஷ்யாவின் உளவுப் படையான கேஜிபி (Konmitet Gesudarstvennoy Bezopasnosti). அப்படி ஒரு படையையே வைத்துக்கொண்டிருக்கும் ஸ்டாலின், எதற்கு ஹிட்லர் தப்பிவிட்டார் என்று சொல்ல வேண்டும்? ஹிட்லர் சார்ந்த கோப்பிற்கு ஏன் அலவா என்று பெயர் வைக்க வேண்டும்? ஹிட்லர் நீர்மூழ்கிக் கப்ப லில்தான் தப்பினார் என்று எப்படி அவர் அடித்துச்சொன்னார்?ஸ்டாலின்அப்போதே எதையோ அறிந் திருக்க வேண்டும். அதற்கான சாட்சியங்கள் இல்லாததால் அவரால் வெளிப்படையாகச் சொல்ல முடியாமல் இருந்திருக்க வேண்டும்.

இதன் தொடர்ச்சியாக நடந்த பல சம்பவங்கள் ஹிட்லர் ஆர்ஜென்டீனாவுக்கு நீர்மூழ்கிக் கப்பலின் மூலம் தப்பிவிட்டார் என்பதைப் பலமாக உறுதி செய்தன. இறுதியில் அமெரிக்காவின் FPA ஹிட்லர் தப்பியது உண்மைதான் என்பதை உறுதி செய்தது. அதை அடிப்படையாக வைத்து, ஆதாரங்களுடன் 700 பக்க அறிக்கையை FPA வெளியிட்டது. நடந்தது இதுதான் (என்று சொல்லப்படுகிறது).

30.04.1945 அன்று ஹிட்லரும் ஏ.்.பாவும் இறந்தது போல இரண்டு பிணங்கள் தயார் செய்யப்பட்டுக் கொளுத்தப்பட்டன. ஆனால் ஹிட்லரும், மனைவியும் அவர்கள் மறைந்திருந்த பங்கரின் இன்னுமொரு இரகசிய வழியாக வெளியே வந்து நோர்வே நாட்டுக்குச் சென்றிருக்கிறார்கள்.

நோர்வேயில் ஹிட்லருக்காகவே காத்திருந்த நீர்மூழ்கிக் கப்பலில் ஆர்ஜென்டீனா நோக்கிப் பிரயாணம்செய்திருக்கிறார்கள். 2ம் உலகப் போரின் இறுதிக் கட்டங்களில் ஹிட்லரின் படையில் இருந்த, மிக முக்கியமான, போர்க் கைதிகள் என வர்ணிக்கப்படும், பல நாஸித் (NAZI) தலைவர் கள் ஏற்கனவே ஆர்ஜென்டீனாவுக்குச் சென்றிருந்தார்கள்.

(17ஆம் பக்கம் பார்க்க)

# 5 இலட்சம் தனவந்தர்களுக்கே நாட்டின் வருமானம் பகிரப்படுகிறது

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)

பொதுமக்களுக்கு நிவாரணம் கிடைக்க வேண்டும் எனின் ஆட்சியில் உள்ள அதிகார வர்க்கத்தை மாற்ற வேண்டும் என்று ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

மொனராகலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்ட கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக இவ்வாறு குறிப்பிட்டார். தனவந்த வர்க்கத்தினர் 5 இலட்சம் பேருக்கு மாத்திரமே நாட்டின் வருமானம் பகிரப்படுகின்றது.

இது முழுமையான தனவந்தர்கள் முறைமையாகும். நாங்கள் வாக்குகளை அளித்தது எதற்காக ஒரு சிலரை தனவந்தர்களாக மாற்றுவதற்காகவா, இன்று நாட்டில் 5 இலட்சம் தனவந்தர்கள் உள்ளனர்.

இவர்களிடமே நாட்டின் வருமானம் பகிரப்படுகின்றன. இதற்கு அதிகார வர்க்கத்தில் உள்ளவர்கள் கைகளில் இருந்து மற்றையவர் கைக்கு ஆட்சி மாறவேண்டும். அப்போதுதான் பொது மக்களுக்கு நிவாரணம் கிடைக்கும் என்றார்.

# தொழில் துறை ஆய்வு நிறைவு



(கொழும்பு)

அமெரிக்காவின் ஜீ.எஸ்.பி. வரிசலுகையை இலங்கைக்கு பெறறுக்கொடுப்பதன் பொருட்டு நடத்தப்பட்ட, நாட்டின் தொழில்துறை தொடர்பான ஆய்வுகள் நிறைவுறுத்தப்பட்டுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

ஐக்கிய அமெரிக்காவின் வர்த்தக பிரதி ரொன் கர்க் இதுகுறித்து கருத்து வெளியிடுகையில், இலங்கை யில் தொழிலாளர் உரிமைகளை பாதுகாப்பது தொடர்பில் குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக குறிப்பிட்டார்.

இதன்காரணமாக அமெரிக்காவின் ஜீ.எஸ்.பி வரிச் சலுகை மாற்றங்கள் இன்றி தொடர்ந்து கிடைப்பதற்கான வழிவகை மேற்கொள்ளப்படும் என அவர் தெரிவித்தார். இலங்கையின் சில தொழிற்சங்கங்கள் முன்வைத்த முறைப்பாடுகளின் அடிப்படையிலேயே அமெரிக்காவின் வர்த்தக நடவடிக்கைகளுக்கு பொறுப்பான திணைக்களம் ஆய்வுகளை மேற்கொண்டிருந்தது.

# மேல் மாகாணத்தில் மட்டும் 1400 பேருந்துகள் இடைநிறுத்தம்

(கொழும்பு)

மேல் மாகாணத்தில் மட்டும் சுமார் ஆயிரத்து 400 பேருந்துக்கள் சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதாக, அகில இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் செயலாளர் அஞ்சன பிரயன்ஜித் தெரிவித்துள்ளார்.


ஒழுங்கற்ற நேர சூசி மற்றும் அனாவசிய தண்டப்பணம் அறவிடுதல் காரணமாக உரிமையாளர்கள் இந்த நிலையை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேல் மாகாணத்தில் ஆயிரத்து 400 பேருந்துகளும், சுமார் ஆயிரம் பேருந்து உரிமையாளர்களும் நீங்கியுள்ளனர். எதிர்வரும் காலங்களிலும் இது போல பலர் நீங்கவுள்ளனர்.

கடந்த நான்கு ஐந்து வருட காலப்பகுதியினிலேயே இந்த முடிவிற்கு அவர்கள் வந்துள்ளனர். இதற்கான முக்கிய காரணம் முறையான ஒன்றிணைந்த நேர சூசி அமுல்படுத்தாமை, பேருந்து ஊழியர்களுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்க முடியாமையே. இந்த பிரச்சினைகளுக்கு போக்குவரத்து அமைச்சினால் தீர்வு ஒன்றை எட்ட முடியும் என்ற போதிலும், அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட அமைச்சு தவறிவிட்டது.



# சோஷலிச முற்போக்குக் கட்சி தேர்தலில் போட்டியிடாது




(கொழும்பு)

சப்ரகமுவ, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாண சபைகளுக்கான தேர்தலில் சோஷலிச முற்போக்குக் கட்சி போட்டியிடாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தேர்தல்களில் போட்டியிடாவிட்டாலும் தமது கட்சி மக்களுடனேயே இருக்கும் என்று சோஷலிச முற்போக்குக் கட்சியின் பிரதான செயலாளர் சேனாதீர குணதிலக்க தெரிவித்துள்ளார். கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த மாகாண சபைத் தேர்தல்களில் போட்டியிடும் எண்ணம் சரத்பொன்சேகாவின் தலைமையிலான ஜனநாயக தேசிய கூட்டமைப்பிற்கு இல்லை என்று கட்சியின் நாடாளுமணற உறுப்பினர் திரான் அலஸ் தெரிவித்தார்.

# வரட்சி நிவாரணத்திற்குப் பதிலாக அரசாங்கம் தேர்தலை வழங்கியுள்ளது

## ஐ.தே.க. குற்றச்சாட்டு



(கொழும்பு)

வரட்சியால் பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குவதற்குப் பதிலாக அரசாங்கம் தேர்தலை வழங்குவதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

கண்டி குண்டசாலையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்ட கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வரட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்காது தேர்தலை அரசாங்கம் கொடுத்துள்ளது. இது விவசாயிகளுக்கு மாத்திரம் அல்ல சாதாரண மக்களுக்கும் பாதகமானது இன்று பொருட்களும் விலை உயர்வைப் பெற்றுள்ளன. மக்கள் பட்டினியில் இருக்கின்றார்கள்.

வேட்புமனு தாக்கல் செய்யும் தினத்தில் முதலமைச்சு வேட்பாளர்களின் பெயர்ப் பட்டியில் வெளியிடப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பொன்சேகா புத்தளத்திற்கு விஜயம்




(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகா நேற்று முன்தினம் புத்தளம் மாவட்டத்திற்கு விஜயம மேற்கொண்டுள்ளார்.

கருவலகஸ் வெள, முருக்கு வட்டவான் பிரதேசத்தில் அமைந்துள்ள கல் நில் ரஜமகா விகாரையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள பாரிய புத்தர் சிலையின் திறப்பு விழா நிகழ்வில் கலந்துகொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட அவரது விஜயத்தினையொட்டி பல்வேறு இடங்களில் வரவேற்பு வைபவங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார தலைமையில் இந் நிகழ்வுகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# சிறிலங்கா மிரர் ஊடகவியலாளர்கள் பிணையில் விடுவிப்பு



(கொழும்பு)

இலங்கையில் கைது செய்யப்பட்ட சிறிலங்காமிரர் செய்தி இணையதள ஊடகவியலாளர்கள் உட்பட 8 சந்தேக நபர்களுக்கு கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் பிணை வழங்கியது.

வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்ட இவர்கள் நேற்றுமுன்தினம் பகல் கொழும்பு நீதவான் பொலிஸாரால் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இலங்கை அரசாங்கத்துக்கு அபகீர்த்தி ஏற்படுத்தக்கூடிய விதத்தில் இவர்கள் செய்திகளை வெளியிட்டதாக நீதிமன்றத்துக்கு சமர்ப்பித்த அறிக்கையில் பொலிஸ் கூறியுள்ளது.

இலங்கை குற்றவியல் சட்டத்தில் உள்ள தண்டனைச் சட்டக் கோவையின் 115, 118 மற்றும் 120 ஆகிய பிரிவுகளில் பொலிஸ் துறையின் கீழ் சந்தேக நபர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

ஆனால் தண்டனைச் சட்டக்கோவையின் 118 ஆம் பிரிவு, 2002 ஆம் ஆண்டிலேயே இலங்கை குற்றவியல் சட்டத்திலிருந்து நீக் கப்பட்டுவிட்டது என்று சந்தேகநபர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி சாலிய பீரிஸ் சுட்டிக்காட்டுகிறார்.

இலங்கை நாடாளுமன்றத்தால் இரத்து செய்யப்பட்ட சட்டவிதிகளின் கீழ் சந்தேக நபர்களை பொலிஸார் கைதுசெய்திருப்பது செல்லாது என்று சட்டத்தரணி சாலிய பீரிஸ் வாதிட்டார்.

இந்த வாதங்களை ஏற்றுக்கொண்ட நீதவான், சந்தேகநபர்களை பிணையில் செல்ல அனுமதிக்குமாறு உத்தரவிட்டார்.

இந்தக் கைது நடவடிக்கையை மேற்கொண்ட பொலிஸ்துறையினருக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்யவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

# இறப்பர் - அரிசி ஒப்பந்தம் 60 ஆவது ஆண்டு நிறைவு

(கொழும்பு)

இலங்கை மற்றும் சீனாவிற்கு இடையேயான இராஜதந்திர உறவு ஸ்தாபிக்கப்பட்டு 55 ஆவது வருட நிறைவை ஒட்டி பல நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இது தொடர்பில் இலங்கை சீன நட்புறவு சங்கம், இலங்கை சீன சங்கம், இலங்கை சீன சமூக மற்றும் கலாசார ஒததுழைபபு சங்கம் உட்பட பல அமைபபுகள் நிகழ்வுகளை ஏற்பாடு செய்துள்ளன.

இது தவிர இலங்கை சீனாவுக்கு இடையிலான இறப்பர் - அரிசி ஒப்பந்தம் கைசசாத்தாகி 60 வருடங்கள் நிறைவடைந்துள்ளன.

இது குறித்து பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டப வளாகத்தில் உள்ள ஸ்ரீமாவோ பண்டாரநாயக கேட்போர் கூடத்தில் எதிர்வரும் 10 ஆம் திகதி நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பிரதமர் டி எம் ஜயரட்ன தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் முக்கிய உரையினை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் வழங்கவுள்ளார்.

இதேவேளை, இந்த விழாவிற்கு எதிர்கட்சி தலைவர் ரணில் விக்ரமசிங்கவிற்கு விசேட விருந்தினராக அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கால்வாயிலிருந்து சிறுமியின் சடலம் மீட்பு

(கொழும்பு)

கிருலப்பனை பகுதி கால்வாய் ஒன்றி லிருந்து ஏழு வயதான சிறுமி ஒருவரின் சடலம் நேற்று அதிகாலை கண்டெடுக் கப்பட்டுள்ளது.

உயிரிழந்த சிறுமி அதே பகுதியைச் சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். சிறுமி எவ்வாறு உயிரிழந்தார் என்பது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# அடிப்படை வசதிகளின்றி இயங்கும்
# ஆனையிறவு கலவன் பாடசாலை




கிளிநொச்சி ஆனையிறவு சிங்கள தமிழ் கலவன் பாடசாலை தற்போது எந்தவொரு அடிப்படை வசதிகளும் அற்ற நிலையில் மிகவும் சிரமத்தின் மத்தியில் இயங்கிவருகிறது.

பரந்தன் சிவபுரம் பகுதியில் தற்காலிகமாக 126 மாணவர்களுடனும் 06 ஆசிரியர்களுடனும் இயங்கிவரும் இந்த பாடசாலைக்கு ஒரு நிரந்தர,தற்காலிக கட்டடங்களோ இல்லை பாடசாலை அதிபரின் அலுவலகம் கிராமத்தின் பொது நோக்கு மண்டபம் ஒன்றில் இயங்கிவருகிறது. வகுப்பறைகள் கிராமத்தின் பரந்த வெளிகளிலுள்ள மரங்களின் கீழ் வீசுகின்ற காற்றும் அதனோடு சேர்ந்து வருகின்ற புழுதிக்குள்ளும் அருகில் ஆடு மாடுகள் மேய்ந்துகொண்டிருக்க நடைபெறுகிறது.

சில வேளைகளில் மாணவர்கள் வெறும் தரையில் இருந்தும் கற்கவேண்டிய பரிதாப நிலையில் உள்ளார்கள். தற்செயலாக கால நிலை மாற்றத்தால் மழை பெய்தால் சிறிய பொதுநோக்கு மண்டபத்திற்குள் 126 மாணவர்கள் ,ஆசிரியர்கள்,அதிபர் எல்லோரும் தஞ்சம் கோரவேண்டும். கற்பித்தல் செயற்பாடுகள் இல்லாத நிலையில் மிகவும் பின் தங்கிய நிலையிலேயே காணப்படுகிறது.அத்தோடு கிராமத்தில் நடைபெறுகின்ற கூட்டங்கள் நிகழ்வுகளுக்கு மண்டபம் பயன்படுத்தப்படுகின்ற போதும் அன்றும் கல்விச்செயற்பாடுகள் இடம்பெறுவதில்லை.என

வன்னிப்பிரதேசத்தில் அரச அரசசார்பற்ற நிறுவனங்களினால் பல அபிவிருத்திப்பணிகள் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில் இப்பாடசாலையின் கல்விச்செயற்பாடுகள் குறித்து இதுவரை எவரும் கவனம் செலுத்தாமல் உள்ளமை கவலைக்குரிய விடயமாக உள்ளது என பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர். மாணவர்களின் எதிர்கால கல்வி நடவடிக்கைகளை கருத்தில் கொண்டு தற் காலிகமாக இயங்கிவரும் காணியில் தற்காலிக கொட்டை கைகளை அமைத்து சீரான கல்விச்செயற்பாடு இடம்பெற சம்பந்தப்பட்ட உயர்அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என மாணவர்களின் பெற்றோர் கள் கோரிக்கை விடுக்கின்றனர்.(29)

## பரமர் சங்கமம்



“மாதராகத் தோன்றிட மாதவம் செய்திட வேண்டும்” என்று கூறி வைத்தார்கள். எதற்கு அவளை வளைத்துப் போட்டு வேலைச் சமையைச் சுமத்தி விடத்தான்

இவ்விதம் பெண்கள் அறிவு பரிமளிக்காத அந்தக் காலங்களில் ஆண்களின் பசப்பு வார்த்தைக்கு மயங்கி தங்களை இழந்ததும் அல்லாமல் சகல தொடர்பாடல் வளர்ச்சிகளால் அறிவுக் கூர்மையை வளர்த்துக் கொண்டிருக்கும் மில்லேனியம் ஆண்டிலும் தமது தனித்துவத்தை இழந்து கொண்டிருப்பதைக் காண்கின்றோம்.

பொதுவாகப் பெண்கள் புகழ்ச்சிக்கு அடிமையாகி விடுவதால் ஆண்கள் இலகுவில் பெண்களைப் பப்பா மரத்தில் ஏற்றி விட்டு வேடிக்கை பார்க்கின்றார்கள்.

பெண்ணின் முகத்தை மதியென்றும், கண்களைக் கயலென்றும், கூந்தலை மேகமெனவும் கூறி மயக்கித் தன்னுடைய காரியத்தை இலகுவாக முடித்துக் கொள்கிறான்.

அதனால் வரக்கூடிய பின் விளைவுகளால் இந்தச் சமூகத்தால் ஒதுக்கி வைக்கப்படுவதும் அவளாகத்தான் இருக்கின்றாள். திருமண வயதை எட்டிவிட்ட பெண்ணுக்கு திருமணப் பந்தத்தை ஏற்படுத்திக் கொடுக்க தார்மீகப் பொறுப்பாகப் பார்க்கும் மனித குலம் அவள் இளவயதில் தாரமிழந்து இருப்பதால் கவனிப்பாரற்று விட்டு விடுகிறது.

திருமணத்திற்கு முன்பாக இருக்கக்கூடிய ஆசாபாசங்கள் இள வயதில் தாரமிழந்து தனித்து விடும் பெண்களுக்கு இருக்காதா; இருக்கக் கூடாதா?

தாரம் இழந்து விட்ட பெண்ணைத் தாரம் இழந்திருக்கும் ஆண்கள் கூட மறுமணம் செய்து கொள்ளப் பின்னடிக்கின்றார்கள். எனினும் அதிகமான மறுமணங்கள் இருபாலாரிலும் தாரமிழந்துள்ளவர் களிடையே நடைபெற்றிருப்பது என்னவோ உண்டுதான்.

கவிபாரதிக்கு முற்பட்ட காலங்களில் பெண்களைப் போட்டுக் கஞ்சி வடித்த ஆணாதிக்க சமுதாயம் இன்னமும் அதனை அடியொற்றிய ஆதிக்கங்களை வடிவம் மாற்றி செயற்படுத்திக் கொண்டுதான் உள்ளது.

அதற்கு வசதியாகப் பெண்களும் தங்களை இழக்கின்ற வகைக் கலாசாரக் கூறுகளையே பின்பற்றி வருவதும் கண்கூடு. உதாரணத்துக்கு பெண்களை வீட்டு வேலைக்காரிகளாகப் பாவிக்கும் அதே வேளை, தமது சுவாரஸ்யமான கிளுகிளுப்புகளுக்கும் அவளை ஒரு அடிமையாகவே பயன்படுத்தி வருகின்றதைக் கூறலாம்.

ஆண்களுக்கு உரிய உரிமைகள் தமக்கும் இருக்க வேண்டும் என்று துணியும் பெண்கள் ஆண்களைப் போன்று இறுக்கமான உடைகளை அணிந்து மார்பகங்களையும், தொடைகளையும் காட்சிப் பொருளாக்கி தன் நிலையை இழக்கின்றனர்.

புதுமைப் பெண்ணென்றால் பூலான் தேவியாக இருக்க வேண்டுமென்பதில்லை. புடம் போட்ட குடும்பப் பெண்ணாக இருந்து விட்டால் இந்த உலகம் தள்ளியா விட்டுவிடும்? பெண்களின் தலையில் புளியை அரைத்து பப்பா மரத்தில் ஏத்தி விடுகின்ற தந்திரோபாய அனுகுமுறைகளைப் புரிந்து செயலாற்றும் புதுமைப் பெண்ணைப்போ தோன்றுவாள்?

அப்பொழுது தான் பெண்களின் உலகம் மீட்சி பெறும் இல்லையோ பின்ன சொல்லுங்க பாப்பம்...

## கணிதபாட செயற்திட்டம்

(அச்சுவேலி)

யாழ்ப்பாண கல்வி வலய பாடசாலைகளில் எதிர்காலத்தில் கல்விப் பொதுதராதர சுகாதாரப் பரீட்சையிலும் தரம் 9 மாணவர்களுக்கான மாகாண மட்டப் பொதுப் பரீட்சையிலும் சித்தி வீதத்தை உயர்த்தும் வகையில் யாழ்.வலய கணிதப் பிரிவினால் புதிய செயற்றிட்டம் ஒன்று அமுல் படுத்தப்பட்டு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இவ்விசேட செயற்திட்டத்திற்கமைய தரம் 6, தரம் 9, தரம் 10 மாணவர்களிற்கான விசேட வகுப்புக்களை நடத்துவதுடன், மதிப்பீட்டு பரீட்சைகளையும் தொடர்ந்து நடாத்தி மீளாய்வு செய்து மேலும் மேற்கொள்வதற்குமான நடவடிக்கைகளும் முனைப்புடன் இடம்பெற்று வருகின்றது. இதேவேளை தரம் 11 மாணவர்களுக்கான பாடசாலைகளுக்கு முன்னர் காலை வேளை விசேட வகுப்புக்கள் நடத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (03)

# உலக செஞ்சிலுவைச் சங்கங்களின் நிதியில் வடக்கில் 2539 வீடுகள் நிர்மாணிப்பு

(வடமராட்சி கிழக்கு)

உலக நாடுகளிலுள்ள செஞ்சிலுவைச் சங்கங்களின் நிதிப்பங்களிப்புடன் இலங்கைச் செஞ்சிலுவைச்சங்கம் கடந்த காலப் போரினால் பாதிக்கப்பட்ட 2539 குடும்பங்களுக்கு வீடு அமைக்கும் பணிகளைச் செய்து வருகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் ஜேர்மன் செஞ்சிலுவைச் சங்கம் 300 வீடுகளையும், செஞ்சிலுவைச் சங்க சர்வதேச சம்மேளனம் 300 வீடுகளையும் அமைத்து வருகின்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேச சம்மேளனம் 506 வீடுகளையும், காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் 70 வீடுகளையும், முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் 240 வீடுகளையும் அமைத்து வருகின்றது.

ஜப்பானிய செஞ்சிலுவைச் சங்கமும், கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் ஜேர்மன் செஞ்சிலுவைச் சங்கம் 299 வீடுகளையும், மன்னார் மாவட்டத்தில் மடு பிரதேச செயலர் நோர்வேஜியன் யெசஞ்சிலுவைச் சங்கம் 194 வீடுகளையும் அமைத்து வரும் அதே வேளை கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் 326 வீடுகளையும் அமைத்து வருகின்றது.

இதில் வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நான்கு வீடுகள் திருத்த வேலைகளும் நடைபெற்றுவருவதுடன், மொத்தமாக இரண்டாயிரத்து 539 வீடுகளை அமைக்கும் பணிகளை இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் செய்து வருவதாகவும் இதில் அரைவாசி வரையான வீட்டு வேலைகள் பூர்த்தியடைந்துள்ளதாகவும் இலங்கை செஞ்சிலுவை சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (70)

# கோப்பாய் வீதி புனரமைப்பு 2 ஆம் கட்டப் பணிகள்

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியின் கோப்பாய் முதல் வல்வை வரையான பகுதியின் இரண்டாம் கட்ட நிர்மாணப் பணிகளும், காபெற் இடும் பணிகளும் வெகுதுரிதமாக நடைபெற்று வருவதைக் காணக்கூடியதாக உள்ளது.

அகலிப்பு நடவடிக்கைகளின் மூலம் அகலிப்பு செய்யப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட மேற்படி வீதிப் பகுதியில் ஆங்காங்கே ஏற்பட்ட சேதங்கள் மீள்புனர மைப்புச் செய்யப்படுவதுடன் அப்பகுதி காப்பெற் இடும் பணிகளும் இடம்பெற்று வருகின்றது. (03)

# நயினை அமுத சுரபிக்கு யாழ். விருது

யாழ்ப்பாணம் மாநகர சபையினால் தமிழுக்கும் சைவத்திற்கும் சிறந்த பணியற்றுவோருக்கு வழங்கப்படும் யாழ்.விருது இந்த வருடம் நயினாதீவு அமுதசுரபி அன்னதான சபைக்கு வழங்கப் படவுள்ளது.

நயினை நாகபூசணி அம்பாளின் அடியார்களுக்கு அமுதளித்து வருவதுடன் தீவின் பல பகுதிகளில் மட்டுமின்றி ஏனைய இடங்களிலும், சமயத்தை வளர்க்க முன்னின்று உழைத்து வரும் இச் சபையின் செயலைப பாராட்டியே இம்முறை இவ்விருது இச் சபைக்கு வழங்கப்பட்டுள்ளது. (54)

# முரசின் இன்றைய பலன்

(02.07.2012 – திங்கட்கிழமை)


நந்தன வருஷம் ஆனி மாதம் 18 ஆம் திகதி. சதுர்தசி பின்னிரவு 3.04 வரை.
நட்சத்திரம் கேட்டை மாலை 6.21 வரை. சித்தயோகம்.
இராகுகாலம் 7.27 - 8.57 வரை. சுபநேரம் 11.57 - 01.27 வரை.
எமகண்டம் 10.27 - 11.57 வரை. குளிகைகாலம் 1.27 - 2.57 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | முன்தினம் போல் உதவிகள் கிட்டும், நினைத்தது நடக்கும், செலவுகள் அதிகரிக்கும். |
| ரிஷபம் | திருப்தி, நினைத்த காரியம் நிறைவேறும், புத்திரரால் அனுகூலம், எதிர்ப்புகள் மறையும். |
| மிதுனம் | ஸ்தல வழிபாடு, கணவன் மனைவி அதிருப்தி, மருத்துவச் செலவுகள், வேலைப்பளு. |
| கடகம் | வெற்றி, பணியில் அவதானம் தேவை, வாக்குவாதம், தேவையற்ற அலைச்சல். |
| சிம்மம் | ஸ்திரிகளால் நன்மை, பணவரவில் தளம்பல், நிதானத்தைக் கடைப்பிடிக்கவும், குடும்பசிக்கல். |
| கன்னி | கவனம், குடும்பத்தில் பூகம்பம், தடைகளுக்குப் பின் வெற்றி, புத்திரர் வழியில் கவலை. |
| துலாம் | உடல் நலம், எதிர்பாராத இடமாற்றம், பணவரவில் நெருக்கடி, வேலைவாய்ப்பு கிட்டும். |
| விருச்சிகம் | தெளிவு, முன்னெச்சரிக்கை, அவசரம் கூடாது, வேலைப்பளு அதிகரிக்கும். |
| தனுசு | ஆர்வம், சொத்துக்களால் செலவு, பிரயாண இலாபம், போட்டிகளில் வெற்றி. |
| மகரம் | அலைச்சல், வாக்குப்பலிதம், குடும்பத்தில் உறவு நிலை, பெற்றோர் அனுசரணை, இலாபம். |
| கும்பம் | எதிலும் இலாபம், உடல் நலனில் கவனம், சிறு விபத்துக்கு இடமுண்டு, வெளியூர் பயணம். |
| மீனம் | பொருள் விருத்தி, குடும்பத்துடன் பிராயாணம், சகோதரால் பிரச்சினை, நண்பர் உதவி. |

# போராடி வென்ற செரீனா

லண்டனில் நடைபெற்று வரும் விம்பிள்டன் ரென்னிஸ் போட்டியை நேரில் சென்று பார்வையிட்ட இங்கிலாந்து டெஸ்ட் அணித் தலைவர் ஸ்ரோஸ் கையசைப்பதைக் காணலாம்.





விம்பிள்டன் ரென்னிஸ் தொடரின் பெண்கள் ஒற்றையர் 3ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் 4 முறை சம்பியனான அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் நூலிழையில் தோல்வியில் இருந்து தப்பினார். அவர் தன்னை எதிர்த்த சீனாவின் ஜி செங்கை 2 மணி 28 நிமிடங்கள் போராடி 6-7 (5-7), 6-2, 9-7 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று 4ஆவது சுற்றுக்கு முன்னேறினார். சர்வீஸ்களை வீசியது செரீனாவின் வெற்றிக்கு பேருதவியாக இருந்தது. 4ஆவது சுற்றில் செரீனா வில்லியம்ஸ், கஜகஸ்தானின் ஷிவ்டோவாவை சந்திக்கிறார்.

மற்றுமொரு மூன்றாவது சுற்றில் சேர்பியாவின் இவானோவிச், ஜேர்மனியின் ஜூலியா ஜார்ஜசை சந்தித்தார். இதன் முதல் செட்டை ஜார்ஜஸ் 6-3 என எளிதாகக் கைப்பற்றினார். பின் எழுச்சி கண்ட இவானோவிச், இரண்டாவது செட்டை 6-3 என, வென்று பதிலடி கொடுத்தார்.

வெற்றியாளரை நிர்ணயிக்கும் மூன்றாவது மற்றும் கடைசி செட்டில் அசத்தலான ஆட்டத்தை வெளிப்படுத்திய இவானோவிச், 6-4 என தன்வசப்படுத்தினார். முடிவில் 3-6, 6-3, 6-4 என்ற செட்கணக்கில் வெற்றி பெற்றஇவானோவிச், நான்காவது சுற்றுக்கு முன்னேறினார்.

ஒலிம்பிக்கில் சேர்ந்து விளையாட விரும்பிய தங்களை பிரித்து விட்டதாக குற்றம் சாட்டிய இந்தியாவின் மகேஷ் பூபதி-சானியா

மிர்சா இணை விம்பிள்டன் போட்டியில் சாதித்து இந்திய டென்னிஸ் சங்கத்திற்கு நெருக்கடி கொடுக்க திட்டமிட்டது. ஆனால் விம்பிள்டன் கலப்பு இரட்டையரில் அவர்களது பயணம் 2ஆவது சுற்றுடன் முடிவுக்கு வந்தது.

# பயஸின் முடிவுக்கு கங்குலி வரவேற்பு

(கொல்கத்தா)

இந்தியா சார்பாக ஒலிம்பிக் போட்டியில் விஷ்ணுவர்தனுடன் இணைந்து ஆட இந்திய டென்னிஸ் வீரர் லியாண்டர் பயஸ் சம்மதம் தெரிவித்துள்ளதற்கு கிரிக்கெட் வீரர் சௌரவ் கங்குலி வரவேற்பு தெரிவித்துள்ளார்.

கடைசியாக ஒரு நல்ல முடிவை பயஸ் எடுத்துள்ளார். நிச்சயம் பயஸ் ஒலிம்பிக்கில் பங்கேற்க வேண்டும் என்று நான் நினைத்திருந்தேன். அவரது நடவடிக்கை மகிழ்ச்சி அளிக்கிறது என்று கங்குலி தெரிவித்துள்ளார்.

# சுதீந்ராவுக்கு வாழ்நாள் தடை

(மும்பை)

இந்தியன் பிறிமியர் லீக் ருவென்ரி - 20 கிரிக்கெட் தொடரில் ஆட்ட நிர்ணயத்தில் ஈடுபட்டதாக குற்றஞ் சாட்டப்பட்ட வேகப்பந்து வீச்சாளரான ரி பீ சுதீந்ராவுக்கு இந்திய கிரிக்கெட் கடுப்பாட்டுச் சபை வாழ்நாள் போட்டித் தடை விதித்துள்ளது.

அத்துடன் ஏனைய நான்கு வீரர்களுக்கும் ஒரு வருடம் தொடக்கம் 5 வருடங்கள் வரை போட்டிகளில் விளையாடத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.


என்.ஸ்ரீனிவாசன் தலைமையிலான இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் ஒழுக்காற்று குழு இந்த தடைகளை விதித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாண்டு நடைபெற்ற இந்தியன் பிறிமியர் லீக் கிரிக்கெட் தொடரில் டெக்கான் சார்ஜஸ் அணி சார்பாக சூதீந்திரா விளையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையுடன் தொடர்புடைய கிரிக்கெட் சங்கங்களில் எந்தவொரு பதவியையும் அவர் வகிக்க முடியாது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த தடை உத்ததை முன்னாள் வீரர்கள் பலர் வரவேற்றுள்ளனர். இது எதிர்காலத்தில் எல்லோருக்கும் நல்ல படிப்பினையாக அமையும் என ரவி ரஸ்திரி தெரிவித்தார்.

# உள்ளூரில் தோற்கடிக்கப்பட்ட தங்கமகன்



(கிங்ஸ்டன்)

லண்டன் ஒலிம்பிக் போட்டிக்கான ஜமைக்காவின் தடகள அணி தேர்வு போட்டிகள் கிங்ஸ்டனில் நடந்தது. இதில் ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டத்தில் முதலிடத்தை பிடிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்ட உலகின் அதிவேக ஓட்டப்பந்தய வீரரும், ஒலிம்பிக் சம்பியனுமான உசைன் போல்ட்டை (ஜமைக்கா) சக நாட்டு வீரரும், உலக சம்பியனுமான யோஹன் பிளேக் பின்னுக்கு தள்ளி முதலிடத்தைப் பிடித்தார்.

யோஹன் பிளேக் 9.75 வினாடியில் பந்தய தூரத்தை கடந்தார். உசைன் போல்ட் 9.86 வினாடியில் பந்தய தூரத்தை கடந்து 2ஆவது இடம் பிடித்தார். மற்றொரு முன்னாள் உலக சம்பியன் அசபா போவெல் 9.88 வினாடியில் இலக்கை எட்டி 3ஆவது இடம் பெற்றார். மூவரும் லண்டன் ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளனர். தேர்வு போட்டியில் தோல்வி கண்டதன் மூலம் உசைன் போல்ட்டால் ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கத்தை மீண்டும் வெல்ல முடியுமா? என்ற கேள்விக்குறி எழுந்துள்ளது.

தோல்வி மனதளவில் சற்று நெருக்கடியைத் தந்தாலும், லண்டன் ஒலிம்பிக் போட்டியில் தங்கம் வெல்ல கடுமையாக உழைக்கவேண்டும். அந்த இலக்கை அடைவேன் என உசைன் போல்ட் தோல்வியின் பின் தெரிவித்தார்.

# தொடரைக் கைப்பற்றுவோம்



(லண்டன்)

இங்கிலாந்து அணியுடனான ஒரு நாள் தொடரைக் கைப்பற்றுவோம் என அவுஸ்ரேலிய அணிக் கப்டன் மைக்கல் கிளார்க் தெரிவித்தார்.

இங்கிலாந்து, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையில் நடைபெற்று வரும் 5 போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் முதலாவது போட்டியில் தோல்வியடைந்தமை குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், முதலாவது போட்டியில் எதிர்பாராத வகை யில் நாம் தோல்வியடைந்துவிட்டோம். தொடர்ந்து வரும் போட்டிகளில் வெற்றிபெற்று ஒரு நாள் தொடரை நிச்சயம் கைப்பற்றுவோம் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது. சம பலம் கொண்ட அணியாக எமது அணி உள்ளது. தரப்படுத்தலில் தொடர்ந்தும் முதல் நிலையைத் தக்கவைத்திருப்பது மகிழ்ச்சி. அதனை நிரூபிக்கும் வகையில் எமது ஆட்டம் அமையும். எங்களது தற்போதைய இலக்கு டெஸ்ட் போட்டிகளில் மீண்டும்முதலிடம் பிடிக்கவேண்டும் என்பதே. அந்த இலக்கை நாம் நிச்சயம் விரைவில் அடைவோம் என்றார். இங்கிலாந்துடனான முதலாவது போட்டியில் 15 ஓட்டங்களினால் ஆஸி. அணி தோல்வியடைந்தமை குறிப்பிடத்தக்கது.

# கெய்ல், போலாட் அதிரடி வென்றது மே.தீவுகள் அணி

(புளோரிடா)

கிறிஸ் கெய்ல், போலாட் ஆகியோரின் சிறப்பான அதிரடி ஆட்டத்தின் மூலம் நியூசிலாந்து அணிக்கெதிரான முதலாவது ருவென்ரி - 20 கிரிக்கெட் போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி 56 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. மேற்கிந்தியத்தீவுகள், நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட ருவென்ரி - 20 கிரிக்கெட் தொடரின் முதலாவது போட்டி நேற்று முன்தினம் புளோரிடாவில் நடைபெற்றது.



நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணி முதலில் களத் தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி, கிறிஸ் கெய்ல், போலாட் ஆகியோரின் சிறப்பான அதிரடி ஆட்டத் தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி, 20 ஓவர்கள் நிறைவில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 209 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கிறிஸ் கெய்ல் 52 பந்துகளை எதிர் கொண்டு ஐந்து சிக்ஸர்கள், ஏழு பவுண்டரிகள் அடங்கலாக 85 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றதுடன், போலாட் 29 பந்துகளை எதிர்கொண்டு ஐந்து சிக்ஸர்கள், ஐந்து பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 63 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் வில்லியம்ஸன் ஒரு விக்கெட்டை வீழ்த்தினார். பதிலுக்கு 210 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய நியூசிலாந்து அணி 18.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 153 ஓட்டங் களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் நிக்கோல் 32, ஜேக்கப் ஓரம் 27 ஓட்டங் களைப் பெற்றனர். பந்து வீச்சில் சுனில் நரைன் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார். போட்டியின் ஆட்ட நாயகனாக கெய்ல் தெரிவானார். ஐக்கிய அமெரிக்காவில் கிரிக்கெட்டை பிரபல்யப்படுத்தும்வகையில் இத்தொடர் நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வலுவான நிலையில் பாகிஸ்தான்

## 2ஆம் நாள் மழையால் பாதிப்பு



(கொழும்பு)

இலங்கை அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணி வலுவான நிலையைப் பெற்றுள்ளது. இருப்பினும் நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டம் மழையால் பெரும் பாதிக்கப்பட்டது.

இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது போட்டி கொழும்பு எஸ்.எஸ்.சி. மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

ஒரு விக்கெட்டை இழந்து 334 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டத்தை பாகிஸ்தான் அணி தகுதி பெற்றது. இதில் சிறப்பான ஆட்டத்திறனை வெளிப்படுதிய மொகமட் ஹபீஸ், அசார் அலி இணை இரண்டாவது விக்கெட்டுக்காக 287 ஓட்டங்களைப் பெற்றது. இதில் இரட்டைச் சதம் அடிப்பார் என எதிர்பார்க்கப்பட்ட மொகமட் ஹபீஸ் நான்கு ஓட்டங்களால் அந்த வாய்ப்பை இழந்தார். இறுதியில் நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டம் நிறுத்தப்பட்ட வேளை, பாகிஸ்தான் அணி நான்கு விக்கெட்டுக்களை இழந்து 448 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் மொகமட் ஹபீஸ் 331 பந்துகளை எதிர்கொண்டு 20 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக 196 ஓட்டங்களையும், அசார் அலி 295 பந்துகளை எதிர்கொண்டு ஒன்பது பவுண்டரிகள் அடங்கலாக 157 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்தனர். அணித் தலைவர் மிஸ்பா உல்ஹக் ஆட்டமிழக்காது 29 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். பந்து வீச்சில் ரங்கண ஹேரத் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இன்று போட்டியின் மூன்றாம் நாளாகும்.

# முல்லை மாவட்ட மட்ட போட்டி முடிவுகள்

(ஒட்டுசுட்டான்)

முல்லைத்தீவு மாவட்ட மட்ட விளையாட்டுப் போட்டியின் இறுதி நாள் நிகழ்வுகள் கடந்த 28, 29ஆம் திகதிகளில் ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய மைதானத்தில் சிறப்புற நடைபெற்றது.

ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு, கரைதுரைப்பற்று, மாந்தை கிழக்கு, துணுக்காய், வெலிஓயா ஆகிய பிரதேசச் செயலகங்களை உள்ளடக்கியே முல்லைத்தீவு மாவட்ட மட்ட விளையாட்டுப் போட்டி நடைபெற்றது.

இப்போட்டியில் வெற்றிபெற்றோர் விபரம் வருமாறு:

பெண்களுக்கான 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் முதலிடம் : துணுக்காய் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ப. டிலக்சனா, இரண்டாமிடம் அதே பிரதேச செயலகத்தைச் சேர்ந்த த. அம்பிகா, மூன்றாமிடம் மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தைச் சேர்ந்த க. சுயந்தினி.

ஆண்களுக்கான 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் முதலிடம் : கரைதுரைப்பற்று பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எஸ். செந்தூரன், இரண்டாமிம் மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எம். மகிந்தராசா, மூன்றாமிடம் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தைச்சேர்ந்த ரி. குவேரதீபன்.

பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் முதலாமிடம் : கரைதுரைப்பற்று பிரதேச செயலகத்தைச் சேர்ந்த கே. அனுசியா, இரண்டாமிடம் மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ரி. தூதனா, மூன்றாமிடம் அதே பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எம். சுகந்தி.

ஆண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் முதலிடம் : கரைதுரைப்பற்று பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ரி. வினோத் விதுர்சன், இரண்டாமிடம் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ஆர். ஜென்சன், மூன்றாமிடம் துணுக்காய் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ஆர். சுபேன்.

பெண்களுக்கான உயரம் பாய்தலில் முதலிடம் : துணுக்காய் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த கே. றஜிதா, இரண்டாமிடம் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எஸ். சுஜாதிரை, மூன்றாமிடம் கரைதுரைப்பற்று பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ஈ. நளாயினி.

ஆண்களுக்கான உயரம் பாய்தலில் முதலிடம் : கரைதுரைபற்று பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ரி. ராகவன், இரண்டாமிடம், மூன்றாமிடத்தை மாந்தை கிழக்குப் பிரதேச செயலகத்தைச்சேர்ந்த டி. நிமல்ராஜ், வை.நியூட்டன்முறையே பிடித்துக் கொண்டனர்.

பெண்களுக்கான 5000 மீற்றர் ஓட்டப் போட்டியில் முதலிடம் : புதுடிக்குடியிருப்பு பிரதே செயலகத்தைச் சேர்ந்த எஸ். விதுசா, இரண்டாமிடம் கரைதுரைப்பற்று பிரதேச செயலகத்தைச்சேர்ந்த கே. அனுசியா, மூன்றாமிடம் மாந்தை கிழக்குப் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ஏ. ஜமுனா.

ஆண்களுக்கான 5000 மீற்றர் ஓட்டப் போட்டியில் முதலிடம் : புதுகுடியிருப்பு பிரதேச செயலகத்தைச் சேர்ந்த தே. தேவராஜ், இரண்டாமிடம் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த பா. பிரசாந், மூன்றாமிடம் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எஸ். நெல்சன்.

பெண்களுக்கான தட்டெறிதலில் முதலிடம் : கரைதுரைப்பற்றுப் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எஸ். சுதர்சனா, இரண்டாமிடம் துணுக்காய் பிரதேச செயலகத்தைச்சேர்ந்த ரி. சங்கி, மூன்றாமிடம் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எஸ். விநாயினி.

பெண்களுக்கான ஈட்டி எறிதலில் முதல் மூன்று இடங்களையும் கரைதுரைப்பற்று பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எஸ். சுதர்சனா, கே. சாமதி, எஸ். தீபிகா ஆகியோர் முறையே பிடித்துக்கொண்டனர்.

ஆண்களுக்கான குண்டு போடுதலில் முதலிரு இடங்களையும் கரைதுரைப்பற்று பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எஸ். தர்சிகன் மற்றும் ரி. கபிலன் ஆகியோர் முறையே பிடித்துக்கொண்ட அதேவேளை, மூன்றாமிடத்தை துணுக்காய் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த கே. மதன்ராஜன் பிடித்துக்கொண்டார்.

இப்போட்டி நிகழ்வுகளில் வடமாகாண விளையாட்டுத் துறைப் பணிப்பாளர் அண்ணாத்துரை, முல்லைத்தீவு மாவட்ட ஜனாதிபதியின் இணைப்பாளர் கே. கனகரெட்ணம் உட்பட பல அரச அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (42)


# முன்பள்ளி விளையாட்டு விழா

(இணுவில்)

இணுவில் மஞ்சத்தடி விவேகானந்தா முன்பள்ளி மாணவர்களின் விளையாட்டுப் போட்டி இணுவில் மஞ்சத்தடி முருகன் கோவிலுக்கு அருகாமையில் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

வினேகானந்தா முன்பள்ளியின் முகாமைத்துவக் குழுத் தலைவர் க. தர்மநாயகம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுக்கு வடமாகாண கல்வி அமைச்சின் உதவிச் செயலாளர் க. சிவகரன் பிரதம அதிதியாகவும், யாழ். கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் க. விமலநாதன் விசேட அதிதியாகவும், தெல்லிப்பளை கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ். சண்முககுலகுமாரன் சிறப்பு அதிதியாகவும், கிராம அலுவலர் க. முருகையா அடைக்கலநாயகி, முன்பள்ளி முகாமைத்துவக் குழுத் தலைவர் ஜோ. ஜோன்சிங்கம், நல்லூர் கோட்ட முன்பள்ளி இணைப்பாளர் திருமதி மாலதி விவேகானந்தன் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

# கரப்பந்தாட்டப் போட்டி



(கிளிநொச்சி)

கிளிநொச்சி பாதுகாப்பு படைகளின் தலைமையகத்தினால் நடாத்தப்பட்ட கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டிகள் பாடசாலைகள், விளையாட்டு கழகங்கள், இராணுவத்தினர் என மூன்று பிரிவுகளாக நடைபெற்றன. இறுதிப் போட்டி பாடசாலை மாணவர்களுக்கும், இராணுவத்தினருக்கும் இடையே நடைபெற்றது.

தனியார் போக்குவரத்துத்துறை அமைச்சர் சி.பி. ரட்ணாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான நாமல் ராஜபக்ஷ, மு.சந்திரகுமார், வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர்கள் இந் நிகழ்வில் பிரதம அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

அத்துடன் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபாவதி கேதீஸ்வரன், முல்லைதீவு அரசாங்க அதிபர் என். வேதநாயகன் உட்பட மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர்கள், கிளிநொச்சி, முல்லைதீவு வலயக் கல்விப் பணிப்பாளர்கள், வடமாகாண விளையாட்டுத்துறைத் திணைக்களத்தின் உயர் அதிகாரிகள் மற்றும் இராணுவ உயரதிகாரிகள் என பல தரப்பினரும் கலந்து கொண்டனர்.

# தேசிய மட்ட கால்பந்தாட்டம்

(திருகோணமலை)

13 வயதுக்குடபட்ட பாடசாலை அணிகளுக்கிடையிலான தேசிய மட்டக் கால்பந்தாட்டப் போட்டி எதிர்வரும் 6,7,8ஆம் திகதிகளில் திருகோணமலை ஈஸ்டன் போர்ட் சிட்டியில் நடைபெறவுள்ளது.

இப்போட்டித் தொடர் சமபோஷ 13 வயதுக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்ட சம்பியன் தொடர் 2012 என பெயரிடப்பட்டுள்ளதுடன், இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் அனுசரணையுடன் கடந்த ஜூன் மாதம் 2ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டிருந்தது. நாடு பூராகவும் உள்ள தெற்கு, வடக்கு உள்ளடங்கலாக 600 பாடசாலைகளை பிரதிநிதித்துவப்படுத்தி 17,000இற்கும் அதிகமான மாணவ, மாணவிகள் இப்போட்டித் தொடரின் சம்பியன் பட்டத்தை வெல்ல உற்சாகமாக கலந்து கொண்டிருந்தனர். இதில் 11 பெண்கள் அணிகளும் 21 ஆடவர் அணிகளும் இந்தப் போட்டிகளில் பங்குபற்றுவதுடன், மாபெரும் இறுதிப்போட்டி ஜூலை மாதம் 6,7,8 ஆகிய திகதிகளில் கால்பந்தாட்ட ரசிகர்கள் அதிகமுள்ள திருகோணமலை ஈஸ்டன் போர்ட் சிட்டியில் நடைபெறவுள்ளது. இறுதி நாளன்று தொடரின் சிறந்த வீரர் மற்றும் சிறந்த கோல் காப்பாளருக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

சமபோஷ, இளம் பிள்ளைகளின் போஷாக்குக் குறித்து அதிக கவனம் செலுத்தி வருகின்றது. இப்போட்டி குறித்து பிளேன்டி .:. பூட்ஸ் நிறுவனத்தின் பொது முகாமையாளரும், பணிப்பாளருமான ஷம்மி கருணாரத்ன கருத்துத்தெரிவிக்கையில் "நான்காவது வருடமாக மாணவ மாணவிகளின் உற்சாகத்தை ஏற்படுத்தக்கூடியதும், பேஷாக்கு வழங்கக் கூடியதுமான சமபேஷாவினால் 13 வயதுக்குட்பட்ட உதைபந்தாட்டப் போட்டியினை ஏற்பாடு செய்ததுபெருமைக்குரிய விடயம். இதன் காரணமாகவே இளம் சந்ததியினரின் போஷாக்கு குறித்து அக்கறை காட்டும் இப்போட்டிக்கு நாம் ஊக்கமளிக்கிறோம்" என்றார்.



**சமபோஷா நிறுவ்ன அனுசரணையுடன் யாழ். மாவட்டப் பாடசாலைகளின் 13 வயதுப் பிரிவுப் பெண்களுக்கான கால்பந்தாட்டத் தொடரின் இரண்டாமிடத்தைப் பிடித்துக்கொண்ட இளவாலை புனித கன்னியர் மடப் பாடசாலை அணியினரைக் காணலாம். (படப்பிடிப்பு : சுரேஸ்)**

# விளையாட்டுப் பேட்டை திறப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால், 250 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட நாவலப்பிட்டிய, ஜயதிலக்க விளையாட்டுப் பேட்டையைநேற்று பிற்பகல் 02 மணிக்குத் திறந்துவைக்கப் பட்டது.

விளையாட்டை கிராமத்துக்குக் கொண்டு செல்லும் நோக்குடன் விளையாட்டு அமைச்சின் மாகாண விளையாட்டுத் தொகுதித் திட்டத்தின் கீழ் இது அமைக்கப்பட்டுள்ளது.

வட மாகாண கிளிநொச்சி விளையாட்டரங்கம், ஊவா மாகாண விளையாட்டரங்கம், வடமத்தியமாகாணவிளையாட்டு அரங்கம் ஆகியவை நிர்மாணிக்கப்படும். நாவலப்பிட்டி ஜயதிலக்க விளையாட்டரங்கு முதலாவது நிர்மாணித்து முடிக்கப்பட்டதாகும்மற்றையவை இவ்வருட இறுதிக்குள் பூர்த்திபெறும். 25 விளையாட்டுக்களுக்கான வசதிகள் இங்குஉள்ளன. உள்ளக விளையாட்டரங்கும் மற்றும் அநேக வசதிகளும் உள்ளன.

நீச்சல் தடாகமும் அமைக்கப்பட்டு உள்ளது. பார்வையாளர் 500 பேருக்கு ஆசன வசதிகளும் உள்ளன. விசேட பிரமுகர்களுக்கான 300 ஆசனங்களும், பிரமுகர்களுக்காக 500 ஆசனங்களும் உள்ளன.

5000 க்கும் மேற்பட்ட விளையாட்டு ஆர்வலர்கள் பங்குகொள்ளக்கூடிய மக்கள் அரங்கும் உள்ளது. கொழும்பு சுகதாஸ விளையாட்டரங்குக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட தேசிய, சர்வதேச விளையாட்டுப் போட்டிகளை கொழும்புக்கு வெளியிலும் நடத்த இதன் மூலம் வாய்ப்பு கிடைத்துள்ளது.

# வலுவாக உள்ளது மே.தீவுகள்

(லண்டன்)

இலங்கையில் இடம்பெறவுள்ள சர்வதேசக் கிரிக்கெட் சபையின் உலக ருவென்ரி -20 தொடரில் மேற்கிந்தியத் தீவுகள் அணியே கவனிக்கப்படத்தக்க அணியாகக் காணப்படுகிறது என அவுஸ்திரேலிய அணியின் உப தலைவரும் சகலதுறை வீரருமான வட்சன் தெரிவித்துள்ளார்.

இத்தொடரில் தோற்கடிக்கப்பட வேண்டிய அணியாக மேற்கிந்தியத் தீவுகள் அணியே காணப்படுவதாக நான் கருதுகிறேன். மேற்கிந்தியத் தீவுகள் அணி மிகவும் சமநிலையான ஓர் அணியாகக் காணப்படுகிறது. அத்தோடு உலகம் முழுவதும் அவ்வணியின் வீரர்கள் ருவென்ரி - 20 போட்டிகளில் பங்குபற்றியுள்ளதோடு, அழுத்தங்களுக்கு மத்தியில் விளையாடவும் பழகியுள்ளார்கள். மேற்கிந்தியத் தீவுகள் அணியில் காணப்படும் அதிரடி வீரர்கள் ஏனைய அணிகளுக்கு சவாலை வழங்குவார்கள். மேற்கிந்தியத் தீவுகள் அணியில் அவ்வணியின் அதிரடி ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் கிறிஸ் கெயில் மீண்டும் இணைந்துள்ளதை அடுத்து மேற்கிந்தியத் தீவுகள் அணி அதிரடி வீரர்களைக் கொண்டதாகக் காணப்படுகிறது. கிறிஸ் கெயில், கொரான் பொலார்ட், டுவைன் பிராவோ போன்ற அதிரடி வீரர்களோடு சுனில் நரைன் என்ற மாயச் சுழற்பந்து வீச்சாளரையும் அவ்வணி கொண்டு காணப்படுகிறது.மேற்கிந்தியத் தீவுகள் அணி தவிர, எங்களுடைய அணிக்கும் வாய்ப்புக்கள் காணப்படுகிறது. ருவென்ரி -20 போட்டிகளில் எங்களுடைய அணி தொடர்ச்சியாகச் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்து வருகின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



# நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்

## நல்லை ஆதீன குருமுதல்வரின் அருளாசிச் செய்தி

வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயிலில் இன்று தேர்த்திருவிழா. ஆதிபராசக்தியான உமையவள் இந்த நயினையம்பதியிலே ஸ்ரீ நாகபூஷணித் தாயாக எழுந்தருளி வீற்றிருந்து அருள்பாலிக்கின்றாள். அந்த அருள்மொழிக்கும் ஆலயத்தில் இன்று நிகழ்கின்ற தேர்த்திருவிழாச் சிறப்பு சொல்லில் அடங்காது.

வழிபடும் அடியார்கள் குறைதீர்க்க நாகபூசணித்தாய் இன்று தேரிலே ஆரோகணித்து அருட்காட்சி தருகின்றாள். வாழ்ந்த வாயும் நினைக்கமட நெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவியாகிய ஸ்ரீ நாகேஸ்வரி அன்னையின் தேர் விழாக்காண வரும் தமது பக்தர்களுக்கு இன்று திருவருள் சொரிந்து பரிபூரணமான நல்வாழ்க்கையை அருளவேண்டுமென அவளது பத்மமலர்ப்பாதம் பணிந்து அருளாசி நல்கி வாழ்த்துகின்றோம்.

எமது குருநாதர் நல்லைக் குருமணியையும் வணங்கி இந்தத் தேர்த்திருவிழா நன்னாளில் அடியார்கள் அனைவரும் அம்பிகையின் திருவருட் கடாச்சத்துக்கும் பாத்திரமாகி பூவுலகில் நலமே வாழ உளமாரப் பிரார்த்தித்து ஆசி வழங்கி வாழ்த்துகின்றோம். "என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**ஆதீன குருமுதல்வர்**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த**
**பரமாச்சார்ய சுவாமிகள்**
**இரண்டாவது குருமஹா சந்நிதானம்**
**நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்,**
**யாழ்ப்பாணம்.**



## ஆர்ப்பரிக்கும் கடற்தீவில் இன்று ஆனந்தத் தேரோட்டம்

ஆர்ப்பரிக்கும் கடல் நடுவே அருள் வீசும் அமுதமுமாய்ச் சிற்பம் நிறைந்த உயர் சிங்காரக் கோயிலில் வீற்றிருக்கும் அன்னை ஸ்ரீ நாகபூஷணி இந்த நந்தன வருடத்தில் நளின சிங்காரியாத் தன் மைந்தர்கள் புடைசூழ தேரேறி வருகின்றாள். அன்னையின் திருவடிகளைப் பணிந்து இந் நன்னாளில் அவளின் அருள் மோந்த வந்திருக்கும் அடியார்கள் அனைவருக்கும் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபையினரின் ஆசிகளையும் வாழ்த்துக்களையும் வழங்குவதில் அகமகிழ்வெய்துகிறோம். அன்னையின் திருநாளில் கூடும் அடியார்களின் அரும்பசி தீர்க்க அமுதசுரபி அன்னை பூரணியின் ஆசியுடன் என்றும் துணையிருப்பாள்.

**சபையின் சார்பில்**
**மதியாபரணம் அம்பிகைபாகன்,**
**செயலாளர்**
**ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி**
**அன்னதான சபை**
**நயினாதீவு.**

## ஆசிச்செய்தி

**"போற்றி என் வாழ்முதலாகிய பொருளே போற்றி"**

சக்தி பீடங்களின் மகத்துவத்தை உலகறிய வேண்டும் என்று அவதாரம் எடுத்தவர் ஆதி சங்கரர். இவரின் வழியில் அவரால் வெளிப்படுத்தப் பட்ட இடங்கள் தோறும் சென்று சக்தி பீடங்களை மக்கள் அறிய வெளிப்படுத்தியவர்கள் தான் சக்தி உபாசகர்களாகிய பட்டர்கள். இந்த வகையில் நாகநாட்டில் ஸ்ரீ புவனேஸ்வரி பீடம் அமைந்துள்ளதை அறிந்து இலங்கையின் வடபால் அமைந்துள்ள தீவுகளில் ஒன்றான நயினாதீவு என்ற மணிபல்லவத்திற்கு வந்தபோது அதி அற்புத தோற்றத்துடன் அமையப்பெற்ற மணிப்பீடத்தையும் சுயம்பு வடிவான (நாக) குண்டலினி முகூர்த்தத்தையும் கண்டு அதிசயத்து இதுதான் ஸ்ரீ புவனேஸ்வரி பீடம் என்ற முடிபுடன் மீண்டும் தமிழ் நாட்டிற்கு சென்று தாம் கண்ட தெய்வீக தரிசனத்தையும் நாகர்களின் வழிபாட்டு முறைகளையும் அவர்களின் தோற்ற அமைப்புக்களையும் எடுத்துக்கூறியதாகவும் வரலாறுகள் உண்டு.

பல வீதிகளுடனும், மாடங்கள், கோபுரங்கள், நந்தவனங்கள், மடங்களுடன் அமைந்திருந்த இந்த ஆலயத்தை நாடு பிடிக்க வந்த பிறதேசிகளான போத்துக்கீசர், டச்சுக்காரர்கள் என்போர் இடித்து சேதமாக்கி சொத்துக்களையும் சூறையாடிச் சென்ற வரலாறுகளும் உண்டு. இப்படியான சூழ்நிலையில் டச்சுக்காரர்களால் சேதமாக்கிய ஆலயத்தை 1788 இல் எமது மூதாதையரான இராமலிங்கர் இராமச்சந்திரர் என்பவர் மீளக்கட்டி புனரமைத்து பரிபாலனம் செய்து வந்ததாக வரலாற்றுப் பதிவு உள்ளது.

அன்று அம்பாளின் ஆலயம் நாகரீகத்தில் மிக்கவர்களான நாகரின் பரிபாலனத்தில் எவ்விதமான அழகுத் தோற்றம் கொண்டதாக அமைந்திருக்குமோ என்ற எண்ணக்கருவை கருத்திற்கொண்டு இன்று 108 அடி உயர வானுயர் கோபுரத்தையும் கிழக்கு, தெற்கு வீதிகளில் மூன்று கோபுரங்களையும் அழகிய சிற்பங்கள் புற வீதியிலும் உள் வீதியிலும் வெளிமாடங்களில் பண்டிகைகளையும் உள் வீதியில் வர்ணமயமான வரலாற்றுப் படைப்பான ஓவியங்களையும் பக்திமயமான திருமுறைப் பாடல்களையும் அறுபத்து மூவரின் திருவுருவங்களையும் கொண்ட ஒரு தெய்வீக கலைக் கோயிலாக மிளிர்கின்றது என்றால் மிகையாகாது.

இத் திருத்தலத்தில் இன்று (02.07.2012) அம்பாளின் உயர் திரு விழாவின் அதிபக்திமயமான விழாவான தேர்த்திருவிழா நடைபெறும். உலகெங்கும் பரந்த அளவில் வாழும் அம்பிகையின் அடியார்கள் தம் இல்லங்கள் தோறும் அம்பிகையை வேண்டி பிரார்த்தனை செய்தபடி இருப்பார்கள் என்பது உண்மை. இவர்களுக்கு எம் தாயின் அருட் கடாட்சம் கிடைக்க வேண்டி பிரார்த்தித்து ஆசியையும் கூறுகின்றேன் தாயே ஆதி வர்த்தனை போற்றி.



**ஆ. தியாகராஜா**
**தலைவர்,**
**ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்,**
**நயினாதீவு**


**விஷானி நகை மாளிகை**

மங்கையர் மனம் நாடும்
தங்க நகைகளின் உலகம்

021 221 9510
021 221 9511
187, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

C/1612

**L கிருபா லேணர்ஸ் L**

"A" தர சாரதிப் பயிற்சிப் பாடசாலை
விரைவாக சாரதி அனுமதிப்பத்திரம்
பெற நாடுங்கள்

021 222 4353
077 722 5292
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

C/1613

**அம்பிகை களஞ்சியம்**

1 ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

C/1614

**கௌசி கபே**

1 ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

C/16

**நாகசுரபி கிறீம் ஹவுஸ்**

1 ஆம் வட்டாரம்,
நயினாதீவு.


C/1615

**லிங்கம் கிறீம் ஹவுஸ்**

கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

C/16

# அம்மன் ஆலய (இன்று) தேர்த்திருவிழா



உலக மாதாவாக அலைகடல் நயினையிலே கோடான கோடி மக்களுக்கு அருட் கருணை பொழிந்து கொண்டிருக்கும் அன்னை ஸ்ரீ நாகபூஷணிக்கு இன்று தேர்த் திருவிழா. பக்தி பரவசத்துடன் நடைபெறுவதில் அவள் அருளாலே அவள் தாள் வணங்கி வாழ்த்தி களி பேருவகை கொள்கின்றோம்.

வரலாற்று சிறப்பும் அதிசயங்களும் நிகழ்த்தும் அம்பாள் தன்னை நாடிவரும் அடியவர்களின் பிரார்த்தனைகளை நேர்த்திக் கடன்களை தீர்த்து பக்தர்களைப் பரவசப்படுத்துவதில் அவளுக்கு நிகர் அவளே!

கடந்த கால அசாதாரண சூழ்நிலையிலும் அன்னையின் மஹோற்சவங்கள் சிறப்பாகத்தான் நடைபெற்று வந்தது. இருந்தும் அடியார்களின் வருகை குறைவாக இருந்தது. ஆனால், தற்பொழுது ஏற்பட்டுள்ள நிரந்தர அமைதியான சூழ்நிலையில் பக்தர்களின் பெருங்கூட்டம் அம்பாள் சந்நிதானத்தில் அலை மோதுகிறது. இன்றைய இரதோற்சவம் பல்லாயிரக் கணக்கான பக்தர்களின் அரோகரா கோஷத்துடன் பக்தி பரவசமாக கண்கொள்ளாக் காட்சியாக முறையே பிள்ளையார், முருகன், சமேதரராக மூன்று தேரில் அம்பாள் ஆரோகணித்து வீதியுலா வருவது மானிடத்துக்கு பெரும் பேறாகும்.

## அன்னையின் தேரோட்டம் அனைத்து மக்களுக்கே சுபீட்சம் நிறைந்ததாக அமையட்டும்

அம்பாளின் தேருக்கும் ஒரு அதிசய வரலாறு உண்டு. 55 வருடங்களுக்கு மேலாக உருவாக்கப்பட்ட இத்தேரில் அம்பாளின் இத்தகைய வியக்கத்தக்க வரலாற்று அதிசயங்கள் செதுக்கப்பட்டு தற்சொருபமாக காட்சி அளித்துக் கொண்டிப்பது சிறப்பம்சமாகும்.

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையில் 86 ஆம் ஆண்டளவில் நடந்த அனர்த்தத்தில் பிள்ளையார் முருகன் தேர்கள், திருமஞ்சம் என்பன தீயிட்டுக் கொழுத்தப்பட்டன.

ஆனால், அம்பாளின் தேருக்கு தீயிட்டுக்கொழுத்த முற்பட்ட போதும் தீ மூளாது தேர் அப்படியே இருந்தது என்பது வெள்ளிடை மலை. இந்நாளில் அன்னையின் தேர்ப் பவனி கண்டு களித்து மானிடனாய் பிறந்த நாம் பெரும் பேறு பெறுவோமாக.

**நன்றி நலம் பெருகுக.**

**என்றும் அன்புடன்**

**சி.ந.கருணாகர குருமூர்த்தி.**

## தீவகத்தின் இந்திரவிழா நயினை நாகபூஷணியின் பாவ விமோசனம் அளிக்கும் தேர்த் திருவிழா

யாழ்ப்பாணக் குடாநாடும் அதனை அடுத்துள்ள ஒவ்வொரு சிறு தீவும் புராதனப் பெருமை வாய்ந்தனவாகக் காணப்படுகின்றன.

லைடன்தீவு, காரைதீவு, எழுவைதீவு, நயினாதீவு, புங்குடுதீவு, நெடுந்தீவு எனும் சப்த தீவுகளுக்கு நடுநாயகமாக அமைந்துள்ளது.

நயினாதீவு இது யாழ்ப்பாணத்திலிருந்து நெடுந்தீவுக்குச் செல்லும் கடற்பாதையில் தேன்மேற்குத் திசையில் 20 மைல் தூரத்தில் உள்ளது.

நயினாதீவுக்கு வடக்கே மூன்று மைல் தூரத்தில் உள்ளது அனலைதீவு. ஏறக்குறைய ஏழுமைல் சுற்றளவைக்கொண்டது. மூன்ற மைல் நீளமும் ஒரு மைல் அகலமும் உள்ளது. ஒரு மாங்காய் வடிவம் போலுள்ளது. கடுகு சிறிதெனினும் காரம் பெரிதென்ற முது மொழிக்கிணங்க நயினாதீவு அளவாற் சிறிதெனினும் தொல்புகழாற்றலில் இருந்த தீவாக விளங்குகின்றது.

சரித்திர காலத்திற்கு முன்பே பல சிறப்புப் பெயர்களால் அழைக்கப்பட்டு வந்த பெரும் புகழுடையது நயினாதீவு. இத்தீவின் பல்வேறு பெயர்களை அறிந்து கொள்வது அதன் வரலாற்றை அறிந்து கொள்ளுதலில் ஒரு பாகமாகும். இத்தலத்திற்கு நாகதீவு அல்லது நாகத்தீவு, நயினாதீவு, நாகநயினாதீவு. மணித்தீவு, மணிபல்லவத்தீவு, பிராமணத்தீவு, சப்புத்தீவு, நரித்தீவு, நாகேஸ்வரம், நகேச்சரம் முதலிய பல பெயர்கள் உள்ளன.

நாகம் அர்ச்சனை செய்து வழிபட்ட நாயகி: முன்னொரு காலத்தில் நயினாதீவிலுள்ள அம்பிகையை ஒரு நாகம் பூசித்து வந்ததாம். ஒருநாள் அந்நாகம் அர்ச்சனை செய்யும் பொருட்டு பூக்கள் கொய்து கொண்டு புளியந்தீவிலிருந்து மீளும் வழியில் ஒரு கருடன் அதனைக் கொல்லும் பொருட்டு எதிர்த்து வந்தது. கருடனைக் கண்டஞ்சிய நாகம் கடற்கரைக்குச் சமீபத்திலிருந்த கல்லொன்றினைச் சுற்றிக் கொண்டிருந்தது.

கருடனும் அந்த நாகத்தைக் கொல்லாமலும், அதனை விட்டகலாமலும் அதற்கெதிரேயிருந்த கல் ஒன்றின் மீது இருந்தது. இங்ஙனம் இவையிரண்டும் பகைமை கொண்டிருக்கும் சமயத்தில் அக்கடல் வழியே மரக்கலத்தில் சென்ற வணிகன் ஒருவன் (மாநாய்கள் என்பர் சிலர்) அந்நாகம் அஞ்சிக் கொண்டிருந்ததை குறிப்பாலுணர்ந்த வணிகன் மரக்கலத்தை நிறத்தி அக் கருடனை விலகும்படி கேட்டான்.

உனது செல்வம் யாவற்றையும் கொணர்ந்து நாகம்மாள் கோயிலுக்குக் கொடுப்பாயானால் விலகுவேன் என்றது கருடன். வணிகனும் அங்ஙனமே செய்தான். நாகமும் தனது நன்றியைச் செலுத்தி நயினாதீவை அடைந்தது. வணிகனும் தனது நாட்டுக்குத் திரும்பினான். நடந்தவற்றை தன் மனைவியிடம் கூறினாள். அன்றிரவு வணிகனும் மனைவியும் நித்திரைக்குச் சென்று துயின்றனர். அவ்வேளை அங்கு ஒரு பேரொளி தோன்றி அவர்களுடைய கண்களைச் சிறிது நேரம் கூசச் செய்தது. பின்பு அவர்கள் எழும்பிப் பார்த்தபொழுது நாக இரத்தினக் கற்கள் அவ்வறையில் இருப்பதைக் கண்டனர்.

நயினாதீவிலுள்ள அம்பிகையின் திருவருள் இது எனக் கருதி அவர்கள் வியப்புற்று நயினாதீவுக்கு யாத்திரை செய்யப் புறப்பட்டார்கள். அவர்கள் நயினாதீவுக்குச் சென்று வடகிழக்குக் கடற்கரையில் நாகம்பாளுக்கு ஆலயம் கட்டுவித்தார்கள்.

இத்தகு அற்புத வரலாற்றுச் சிறப்புக்களோடு விளங்கும் நயினை நாகபூஷணியம்மையின் நந்தன வருடத்திற்கான உயர் திருவிழா கடந்த (19.06.2012) செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 16 தினங்கள் நடைபெற்று வருகின்றன.

இன்று (02.07.2012) திங்கட்கிழமை நாகபூஷணி இலட்சோப இலட்சம் அடியவர்கள் மத்தியில் அரோகரா கோக்ஷம் வானைப் பிளக்க தேரேறி வருகிறாள். இந்து, பௌத்த, முஸ்லிம்மக்கள் இன்றுநயினை நாகபூஷணியின் ஆலயத்தில் கூடி வழிபாடியற்றுகின்ற காட்சி அற்புதமானது. வேண்டுவன வேண்டும் வரமனைத்தையும் தரும் அன்னையை பூஜித்து அனைவரும் நயினை மண்ணுக்கு வாரீர் வாரீர் என வேண்டுவோமாக.

**வர்ணனைக் கலாநிதி,**
**மதுரகவி,**
**காரை எம்.பி.அருளானந்தன்**
**பணிப்பாளர்**
**சைவத்தமிழ் பண்பாட்டுக் கழகம்.**

நாகேஸ்வரி நீயே! எங்கள் நாகபூஷணித் தாயே!
பாரோர் பார்த்திட நீ தேரேறி வரவேண்டும் அம்மா!

அலைகடல் நடுவே இருந்து அருள்புரியும் அன்னையே!
ஆனந்தமாய்த் தேரேறி அருட்காட்சி தந்திடுவாய்!
நிலையற்ற மாந்தர் நாம் நிம்மதிக்காய் அலைகின்றோம்!
நீயே கதியென்று நின் தாள் சரணடைந்தோம்!
மலைபோன்ற துன்பங்களை மாற்றிவிடும் தாயே!
மரணிக்க வல்லியே! ஸ்ரீ நாகபூஷணி அம்மையே!
கலைகள் யாவும் வளர நீதான் கருணை செய்ய வேண்டும்!
கால்பிடித்தோம் அம்மா! காப்பதுன் கடமையன்றோ?

நாகேஸ்வரியே தாயே! நானிலம் போற்றிடும் அன்னையே!
தேரேறி வந்தெமது துன்பந்துடைக்க வேண்டும்!
யோகேஸ்வரியே! லோக மாதாவே! கடைக்கண் பாரம்மா!
அருட்காட்சி காணவே தோணியேறி வந்தோம்!
பாகேஸ்வரியே! பத்ம பூஷணியே! பாதம் பணிந்தோம் அம்மா!
பாரோர் பார்த்திடவே நீ தேரேறி வரவேண்டும்!
நாகேஸ்வரி நீயே! எங்கள் நாகபூஷணித் தாயே!
நமக்கருள்புரிய ஏன் இன்னும் தாமதமோ?

**நயினை அம்பிகை பக்தன்**
**இராசையா ஸ்ரீதரன்**


...ப

C/1616

**விநாயகர் கட்டடபொருள் வாணிபம்**

6 ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

C/1618

**அன்னையின் அருள் அகிலமெல்லாம் பரவிட வேண்டுதல் செய்யும்**

**பிரான்ஸ், சுவிஸ், கனடா, லண்டன், நோர்வே, ஜேர்மனி வாழ் அம்பாள் அடியார்கள்**

C/1620

...ம் ஹவுஸ்


...தி.

C/1617

**சிவகுமார் வெற்றிலைக் கடை**

சத்திரச்சந்தி
யாழ்ப்பாணம்

C/1619

# பேரிசையின் பின்னணி: தவில் கண்ட மாற்றங்கள்

- ப.கோலப்பன்

**தவில்** மிகு ஒலியை எழுப்பும் ஒரு வாத்தியம். ஒரு காலத்தில் கோயிலில் பூசை தொடங்குவதையும் சுவாமி புறப்பாடு தொடங்குவதையும் மக்களுக்கு அறிவிக்க அதற்கு ஒரு தேவை இருந்தது. 'தொம் தொம்' என்று அலாரிப்புடன் மல்லாரிக்காக தவில் வாசிக்கும் போது, அது இசை இரசிகனிடம் ஏற்படுத்தும் உணர்வுகளை இன்னவென்று சொல்லிவிட முடியாது. கடந்த காலத்து வித்வான்கள் தொடங்கி, இன்று கோலோச்சிக் கொண்டிருக்கும் தவில் கலைஞரகள் வரை எல்லோருடைய வாசிப்பையும் தொடர்ந்து கேட்கும் ஒரு இரசி[illegible], காலந்தோறும் தவில் வாத்தி[illegible]தின் சத்தத்திலும் வாசிப்பிலும் [illegible]பட்டிருக்கும் மாற்றத்தைப் புரிந்து கொள்வான்.

தவில் வாத்தியம் 1960-களில், அதனுடைய வடிவமைப்பில் ஒரு மாற்றத்தைச் சந்தித்தது. அந்த மாற்றம் தவில் கலைஞர்களின் சிரமத்தை பெருமளவில் குறைத்தாலும், ஒலி அமைப்பில் அது கொண்டு வந்த மாற்றம் தொடர்ந்து விவாதத்துக்குரியதாகவே இருக்கிறது. இந்த மாற்றத்தைப் புகுத்தியவர் இன்றும் நம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கும் பொறையார் வேணுகோபால் பிள்ளை.

பெரிய ஞானஸ்தர். கீர்த்தனைகளை இயற்றியிருக்கிறார். பழைய சங்கீத வரலாற்றை சுவாரஸ்யமாக சொல்வார். கிடிகிட்டி வாசிப்பில் புகழ்பெற்றிருந்த தில்லையாடி சீனிவாசம் பிள்ளையின் பேரன் அவர். நந்தனார் திரைப்படத்தில் சேரியில் உள்ள மக்கள் சாமியாடிக் கொண்டிருக்கும் போது கிடிகிட்டி வாசிக்கப்படும். இப்போது இந்த வாத்தியம் வழக்கொழிந்து காணாமல் போய் விட்டது.

இந்த இடத்தில் சிரமம் என்று நான் குறிப்பிடுவது தவிலுக்கு வார் பிடிப்பதுதான். தில்லானா மோகனாம்பாள் திரைப்படத்தில் சவடால் வைத்தியாக நடித்திருக்கும் நாகேஷைப் பார்த்து தவில் வித்வான் பாலையா, 'இந்த நரம்புப் பயலை செமத்தியாக வார் பிடிக்கிறேன்' என்று கோபத்துடன் கூறுவார்.


வார் பிடிப்பது அத்தனை எளிதல்ல. கச்சேரி களை கட்டியிருக்கும் போதும், தவில் வித்வான் கற்பனை பொங்க தனி வாசித்துக் கொண்டிருகரும் போது தவிலின் வார்ப்பிடிகள் தளர்ந்து போனால் கச்சேரி சோபிக்காது. காதலியை ஆரத்தழுவும்போது அவள் எதையோ நினைத்து திடீரென அழுது வடிந்தால், காதலன் நிலை என்னவாக இருக்குமோ அதே நிலை தான் தவில் வித்வானுக்கு ஏற்படும். மீண்டும் வாரை இறுக்கிக் கட்டுவதற்குள் கச்சேரி முடிந்து போகும். அந்த சிரமங்களை நீக்கி, வாருக்குப் பதிலாக இரும்புப் பட்டைகளை அறிமுகம் செய்து தவிலில் மாற்றத்தை உருவாக்கினார் வேணுகோபால்பிள்ளை.

உடல் ரீதியாக தனக்கு ஏற்பட்ட சிரமங்களை சரி செய்வதற்காக பல ஆண்டுகள் உழைத்து வேணுகோபால பிள்ளை இதைச் செய்தார். சிதம்பரம கோயிலில் ஆனி மஞ்சனத்துக்கு இராதாகிருஷ்ணபிள்ளை வாசிக்க, வேணுகோபால் பிள்ளை தவில் வாசித்துக் கொண்டிருந்தார். நின்று கொண்டு தான் வாசிக்க வேண்டும். வாசிப்பு முடியும் வரை தோளில் இருந்து தவிலைக் கழற்றும் வழக்கம் இல்லை. திடீரென வேணுகோபால் பிள்ளைக்கு காய்ச்சலுடன் குளிரும் சேர்ந்து வாட்டியது. ஆனால் கச்சேரியில் இடையே வாசிப்பதை நிறுத்த முடியாது. கடைசியாக வாசித்து முடிந்ததும் துவண்டு விழுந்தார். காலையில் எழுந்து பார்த்தால் பேரதிர்ச்சி காத்திருந்தது. அவருக்கு விரை வீக்கம் கண்டிருந்தது. அதன் விளைவுதான் காய்ச்சல்.

வேணுகோபால் பிள்ளைக்கு உலகமே இருண்டு போய் விட்டது. விரை வீக்கம் வந்த பிறகு இந்த வாத்தியத்தை தொடர்ந்து வாசிக்க முடியுமா? வாரை இழுத்து கட்ட முடியுமா? இசைக் கலைஞரான அவருக்கு வேறு எந்த தொழிலும் தெரியாது. என்ன செய்வது என்று தெரியமால் தவித்துக் கொண்டிருந்தார்.

இந்த காலகட்டத்தில் அவர் ஒரு திரையரங்கில் சகுந்தலை படம் பார்க்க சென்றார். பிருகா சாரீரத்துக்குச் சொந்தக்காரரான ஜி.என். பாலசுப்பிரமணியமும் எம்.எஸ்.சுப்புலட்சுமியும் நடித்த படம். அந்த காலத்தில் தியேட்டரில் இரசிகர்களின் கவனத்தை ஈர்க்க பாண்ட் கச்சேரி ஏற்பாடு செய்திருப்பார்கள். அதில் வாசிக்கப்பட்ட ட்ரம்சைப் பார்த்ததும் வேணுகோபால் பிள்ளைக்கு ஒரு பொறி தட்டியது. ட்ரம்சில் நட்டுகளையும் போல்டுகளையும் போட்டுத்தான் தோல் அல்லது சிந்தடிக் பைபரில் செய்யப்பட்ட தோலை இணைத்திருப்பார்கள். 'தவிலில் இப்படி செய்தால் என்ன?' என்று யோசித்தார்.

துணிகளை பொதி செய்வதற்காக பயன்படுத்தப்படும் மெல்லிய உலோகத்தால் ஆன வார்களை எடுத்துக் கொணடார். தனது நண்பரிடம் எண்ணத்தை சொன்னார். அவரும் இவரும் சேர்ந்து தவில் குத்தியின் நடுவே ஒரு இரும்பு வளையத்தை மாட்டி, வலந்தலையையும் தொப்பியையும் இந்த உலோக வார்களால் இணைத்தார்கள். ஆனால் அதிகமாக இறுக்கிக் கட்டிய போது வார் துண்டாகியது. ஆகவே வாரின் கனத்தைக் கூட்டி பரிசோதனை செய்தார்கள். சரியாக வந்தது. ஆனால் தவிலின் சத்தம் வேறு மாதிரியாகக் கேட்டது. பல நாள் தொடர்ந்து போராடி, நடுவில் உள்ள இரும்பு வளையத்தை இடம் மாற்றி மாற்றி சோதனை செய்து




ஒரு வழியாக தவிலின் சத்தத்தை சரி செய்தார்.

இப்படி உருமாற்றம் செய்யப்பட்ட தவிலை அவர் மட்டுமே வாசித்துக் கொண்டிருந்தார். வெளியே யாரிடமும் சொல்லவில்லை. சுவாமிமலையில் நாச்சியார்கோயில் இராகவபிள்ளையுடன் சேர்ந்து வாசிக்கும் போது இந்தத் தவிலையே பயன்படுத்தினார். அப்போது நடந்த சம்பவத்தை வேணுகோபால் பிள்ளை இப்படி விவரித்தார்.

'இராகவப்பிள்ளையின் காலப்பிரமாணம் பிரசித்தி பெற்றது. ஆணி அடித்து இறுக்கி விட்டாற்போல் அங்கும் இங்கும் நகர முடியாத அளவுக்கு காலப்பிரமாணத்தை அமர்த்தி விடுவார். அவர் காலத்தில் ஸ்பெஷல் இராகவன் என்று அழைக்கப்பட்டார். அன்று துரதிருஷ்டவசமாக இராகவ பிள்ளையின் தவிலின் வார்கள் தளர்ந்து விட்டன. அவர் வாசித் தாலே 'தா தா' என்ற சத்தம் கம்பீரமாக எழும். அன்று அந்த சத்தம் எழவில்லை. ஆனால் என்னுடைய தவில் முழங்கிக கொண்டிருந்தது. இராகவ பிள்ளை என்னுடைய தவிலை உற்றுப பார்த்தார். காலையில் 'மாப்பிளே தவில் நல்லா இருக்குய்யா. என்ன செய்திருக்கிறே' என்று கேட்டார். வீட்டுக்கு வாருங்கள் காட்டுகிறேன் என்றேன். எனக்கு லேசாக பயம். சம்பிரதாயத்துக்கு விரோதமாக இப்படி செய்திருக்கிறாயே என்று அவர் வருத் தப்படக்கூடுமோ என்று அஞ்சினேன். ஆனால் தவிலின் முகச் சீலையை விலக்கிக் காட்டியதும் அவர் ஆச்சரியத்தில் ஆழ்ந்து போனார். நல்லா இருக்கு என்று ஆசிவழங்கி விட்டார்.'

இந்த காலகட்டத்துக்குப் பிறகு இரும்பு வார்கள் பொருத் தப்பட்ட தவில் பிரபலமாகி விட்டது.



தவில்காரர்களின் சுமையைக் குறைத்த இந்த மாற றங்கள், சத்தத்திலும் பெரும் மாற்றங்களைக் கொண்டு வந்து விட்டன. இவ்வளவு இறுக்கமாக இழுத்துக் கட்ட வேண்டும் என்பதற்காக எல்லோரும் மாட்டுத் தோலையே பயன்படுத்துகிறார்கள். முன்பெல்லாம் தொப்பிக்கு ஆட்டுத் தோலையும் வலந்தலைக்கு கன்றுக் குட்டியின் தோலையும் பயன்படுத்தினார்கள். காகிதம் மாதிரிதான் தொப்பித் தோல் இருக்கும். ஆனால் அது எழுப்பும் நாதம் ஈடு இணையற்றது. தொடர்ந்து வாசிக்கும் போது கை மூலம் பரவும் சூட்டில் தவிலின் நாதம் மேலும் அதிகரிக்கும். இப்போதெல்லாம் டிக்கி டிக்கி என்று வலந்தலையில் சத்தம் கேட்கிறது. தொப்பியின் சத்தம் பெரும்பாலும் வலந்தலையின் முழக்கத்தில் மூழ்கடிக்கப்படுகிறது. பழைய தவிலில் உள்ளங்கையால் பொத்தி வாசிக்கும் போது ஜிம் ஜிம் என்ற நாதம் எழும். அதை இப்போது கேட்டு நாளாகிறது. வலந்தலையும் தொப்பியும் பொருததமாக இருப்பதையும் பழைய தவிலில் கேட்கலாம். இப்போது எழும் பேரொலி நாதஸ்வர சத்தத்தை முற்றிலுமாக கேட்க விடாமல் செய்து விட்டது. நாதஸ்வரம் எங்கோ கிணற்றில் வாசிப்பது போல் கேட்கிறது.

இதற்காக இன்றைய தவில் வித்வான்களின் ஞானத்தையோ லயக் கணிசத்தையோ நான் குறைத்து மதிப்பிடவில்லை. ஆனால் நாதஸ்வரத்துக்கு தவிலா, அல்லது தவிலுக்கு நாதஸ்வரமா என்ற கேள்விக்கு அவர்கள் பதில் சொல்லியாக வேண்டும். ஏனென்றால் புல்லாங்குழல், வயலின், சாக்ஸபோன், மாண்டலின் ஆகியவற்றுக்கு வாசிக்கும் போது தவில் வித்வான்கள் அடக்கி வாசிக்கிறர்களே அதை ஏன் நாதஸ்வரத்துக்கு வாசிகரும்போது கடைப்பிடிக்க மறுக்கிறார்கள் என்ற கேள்வி எழாமல் இல்லை.

ஒரு முக்கியமான விசயம் என்னவென்றால், ஒரு காலத்தில் மாபெரும தவில் மேதைகளாகத் திகழ்ந்தவர்கள் கூட, தாங்கள் பக்க வாத்தியம் வாசிப்பவர்கள் என்ற நினைவோடுதான் வாசித்தார்கள். நீடாமங்கலம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை பல ஆண்டுகள் திருவீழிமிழலை சகோதரர்களுக்கு தவில் வாசித்தார். அவரை எல்லோரும் மூன்றாவது நாதஸ்வரம என்றேதான் அழைத்தார்கள். அந்த அளவுக்கு அவருடைய வாசிப்பு நாதஸவரத்தில் இரண்டறக் கலந்து நின்றது.

தவில் வித்வான்கள் நாதஸ்வரத்தில் இராகம் வாசிக்கும் போது லேசாக தட்டிக் கொண்டிருப்பார்கள். அது இராகத்தை ஒருபடி மேலே தூக்கிக் காட்டும். இராகம் வாசித்து முடித்ததும் உருட்டுச் சொல் அடிப்பார்கள். அது நாதஸ்வரம் வாசிப்பவர்களுக்கு ஒரு உத்வேகத்தை அளிக்கும். கீர்த்தனை வாசிக்கும் போது அப்படியே நிழலாகப் பின் தொடர்ந்து வாசிப்பார்கள். உதாரணத்துக்கு காருகுறிச்சி அருணாசலத்தின் நகுமோமு கீர்த்தனைக்கு நீடாமங்கலம் சண்முக வடிவேலு வாசித்திருப்பதைக் கேட்க, வேண்டும். பல்லவிக்கும் அனுபல்லவிக்கும், சரணத்துக்கும் இடையே உள்ள நேரத்தை தவில் வாசிப்பவரகள் நிரப்பும் அழகே அழகு.

இரும்புப் பட்டைகளும் கோல்களும தவிலில் குடியேறிய பிறகு அதனுடைய எடையும் அதிகரித்து விட்டது. ஆகவே நின்று கொண்டு தவில் வாசிப்பதற்கு பெரிய தவில் வித்வான்கள் ஒப்புக் கொள்வதில்லை. தோளில் சுமந்து கொண்டு வாசிப்பதற்கு கடினம என்று அவர்கள் கூறுகிறார்கள். ஒரு காலத்தில் நின்று கொண்டு மல்லாரிக்கு வாசித்து பிரமிப்பை ஏற்படுத்திய தவில் வித்வான்கள், இரத வீதிகளில் உடலெல்லாம் வியர்வை வழிய வாசித்துக் கொண்டு வந்த வித்வானகள், இப்போது இருந்து கொண்டு மட்டுமே வாசிக்க ஒப்புக் கொள்கிறார்கள். இது விரும்பத்தக்க மாற்றமா அல்லது விரும்பத்தகாத மாற்றமா என்று தெரியவில்லை.

கோயிலில் இருந்து சபாக்களுக்கு அரங்கேறிய வாய்ப்பாட்டும், நாட்டியமும் சமூகத்தில் தனக்கென ஒரு அந்தஸ்தைத் தேடிக் கொண்டன. ஆனால நாதஸ்வரத்துக்கும் தவிலுக்கும் தேவையான அந்தஸ்து இன்னும் கிடைக்கவில்லை என்றே தெரிகிறது. ஒரு குறிப்பிட்ட சாதியினர் மட்டுமே இந்த இரண்டு வாத்தியங்களையும் வாசிக கிறார்கள். மற்றவர்கள் இதன் பக்கம் திரும்புவதில்லை.

அதே சமயம், ஒரு கட்டத்தில் தேக்க நிலையை அடைந்த நாதஸ்வரமும் தவிலும் மீண்டும் புத்துயிர் பெறுவதற்கான முயற்சிகளும் நடக்கின்றன. சென்னையில் கிருஷ்ண கான சபையும், பிரம்ம கான சபையும் தனியாக நாதஸ்வர இசை விழா நடத்துகிறார்கள். இரசிகர்கள் நிர்ப்பந்தத்தை உருவாக்கும் போது இந்த இரண்டு வாத்தியங்களும் தங்களுடைய கடந்த கால அந்தஸ்தை எட்டிப்பிடிக்கலாம்.

**புல்லாங்குழல், வயலின், சாக்ஸபோன், மாண்டலின் ஆகியவற்றுக்கு வாசிக்கும் போது தவில் வித்வான்கள் அடக்கி வாசிக்கிறார்களே அதை ஏன் நாதஸ்வரத்துக்கு வாசிக்கும்போது கடைப்பிடிக்க மறுக்கிறார்கள் என்ற கேள்வி எழாமல் இல்லை.**

# குற்றச் செயல்களில் ஈடுபட்ட 24பேர் பொலிஸாரால் கைது

(சிகரம்)

யாழ். குடாநாட்டில் கடந்த வாரம் நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 24 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக யாழ். பொலிஸ் நிலைய சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் எஸ். சிறிகுகனேசன் தெரிவித்தார்.

யாழ்.சிரேஸ்ட பொலிஸ்அத்தியட்சகர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணத்தில் கடந்த வாரம்நடைபெற்ற மூன்று கத்திக்குத்துச் சம்பவங்களும், வீடு உடைத்து பொருட்கள் களவாடப்பட்டது தொடர்பாக மூன்று முறைப்பாடுகள் உட்பட யாழ். பிரதேசத்தில் 8 பாரிய குற்றச்செயல்கள் கடந்த வாரம் நடைபெற்றுள்ளது.

காங்கேசனதுறை பிரதேசத்தில் கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட நான்கு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன், தனியார் பேரூந்தில் பயணம் செய்த இருவரது கையடக்கத் தொலைபேசிகள் களவாடப்பட்டுள்ளது.

இதனைவிட வவுனியா பிரதேசத்தில் ஏழு திருட்டுச்சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன் 800,000 ரூபா பெறுமதியான பொருட்களும் அவர்களிடம் இருந்து மீட்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் அத்தியட்சகர் சிறிகுகணேசன் சுட்டிக்காட்டினார்.

மன்னார் மாவட்டத்தில் வீடுஉடைத்து பொருட்கள் சில களவாடப்பட்டமை தொடர்பாக சந்தேக நபர்கள் நால்வர் கைது செய்யப்பட்டதாகவும், இந்தச் சந்தேக நபர்களிடமிருந்து களவாடப்பட்ட பொருட்கள் அனைத்தும் மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த அவர், முருங்கன் பிரதேசத்தில் 1,70.000ரூபா பெறுமதியான சிறியரக உழவுஇயந்திரம் ஒன்று களவாடப்பட்டதாகவும், களவாடப்பட்ட இயந்திரம் கைப்பற்றப்பட்டதுடன், இந்த உழவு இயந்திரத்தினைக் களவாடியதாகச் சொல்லப்படும் சந்தேகநபரும் கைது செய்யப்பட்டுள்ளார் எனவும் யாழ். பொலிஸ் நிலைய சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் இதன்போது தெரிவித்தார்.

# கப்பல் வாழைப்பழத்தின் விலை அதிகரிப்பு

(சிகரம்)



கப்பல் இன வாழைகளில் ஏற்பட்டுள்ள குருத்தடைப்பு நோய் காரணமாக யாழ்ப் பாணத்தில் கடந்த வாரங்களாக கப்பல் வாழைப்பழத்தின் விலை அதிகரித்துள்ளது.

பொதுவாகவே கப்பல் வாழைப்பழம் மற்றைய வாழைப பளங்களை விட விலை அதிகமாகக் காணப்படுவது வழமை. ஏனெனில் யாழ்ப்பாணத்தில் கப்பல் வாழையினை விரும்பிப் பயிரிடுபவர்கள் மிகக் குறைவு எனக் குறிப்பிட்ட நீர்வேலியைச் சேர்ந்த வாழைப்பழச் செய்கையில் ஈடுபடும் விவசாயி ஒருவர், தற்போது 'குருத்தடைப்பு நோய்' பரவியுள்ளமையே இந்தத் திடீர் விலையேற்றத்திற்குக் காரணம் எனக் குறிப்பிட்டார்.


மேலும், இதரை, கதலி, சீனிக்கதலி போன்ற பழங்களை விரும்பி வாங்குபவர்கள் அதிகரித்துள்ள போதிலும், கப்பல் பழத்தினை யாழ்ப்பாணத்தவர்களை விட தென்னிலங்கை மக்களே அதிகளவில் வாங்குவதாகவும், அவர்கள் இந்த வாழை பயிரிடும் தோட்டங்களுக்கு நேரடியாக வந்து இவற்றைக் கொள்வனவு செய்வதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, 80-100 ரூபா வரையில் விற்கப்பட்டு வந்த கப்பல் வாழைப்பழத்தின் விலை தற்போது 160-200 ரூபா வரை அதிகரித்துள்ளதாகவும், இதன் விலை இன்னமும் அதிகரிக்கும் சாத்தியம் காணப்படுவதாகவும் வாழைப்பழ விற்பனையில் ஈடுபட்டிருக்கும் வியாபாரி ஒருவர் குறிப்பிட்டார்.

தற்போது கப்பல் வாழைகளில் ஏற்பட்டுள்ள குருத்தடைப்பு நோய் மற்றும்வீசி வரும் காற்றினால் வாழைகள எல்லாம் முறிவடைந்துள்ளதாகக் குறிப்பிட்ட அவர், இனி வரும்காலங்களில் வாழைப்பழ விற்பனை அதிகரிக்கும் எனக் கூறினார்.

# கடும் வரட்சியான காலநிலை வீட்டுத்தோட்ட செய்கை பாதிப்பு

(சிகரம்)



கடும் வரட்சியான காலநிலை காணப்படுவதால் மேற்கொள்ளப்பட்டு வரும் வீட்டுத்தோட்டங்களை கைவிட வேண்டிய சூழ் நிலைதோன்றியுள்ளதாக தங்கள் வீடுகளில் சிறியளவில் வீட்டுத்தோட்டங்களை செய்து வரும் தென்மராட்சி பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

நீண்ட நிலப்பரப்புக்களைக் கொண்ட தென்மராட்சிப் பிரதேசத்தின் பல பகுதிகளிலும் வீட்டுத் தேவைகளிற்காக வீடுகளிலேயே மரக்கறிகள் பயிரிடப்பட்டு சிறு சிறு மரக்கறித் தோட்டங்கள் ஒவ்வொரு வருடமும் வழமையாகச் செய்து வருவார்கள். ஆனால் இம்முறை சித்திரை மழை பெரியளவில் பெய்யாத காரணத்தினால் இந்தப் பகுதிகளிலுள்ள குளங்கள் வற்றிக் காணப்படுகின்றன. இதனால் தண்ணீருக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதால் மரக்கறித் தோட்டங்களை இடைநடுவில் கைவிடும் நிலை தோன்றியுள்ளதாக இந்த மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஏராளமான குளங்களைக் கொண்ட தென்மராட்சியின் நுணாவில், மட்டுவில், தனங்கிளப்பு, மறவன்புலோ போன்ற பகுதிகளில் குறிப்பாக கத்தரி, வெண்டி, பயிற்றை, மிளகாய், தக்காளி போன்ற பயிர்களை வருடத்திற்கு இரண்டு தடவைகள் அதாவது ஐப்பசி - பங்குனி மாதம் வரை ஒரு போகமும், சித்திரை மழையினை அடுத்து வைகாசி-ஆவணி வரை இரண்டாவது போகமுமாக வீட்டுத்தோட்டங்களில் செய்கின்றார்கள்.

குறிப்பாகஇங்குள்ள ஆலயங்களின் திருவிழா காலங்களில் கீரை, வல்லாரை, கத்தரி, மரவள்ளிபோன்ற மரக்கறிகளை இந்த மக்கள் ஊர், ஊராகக் கொண்டு திரிந்து விற்பனை செய்வதைக் காணக்கூடியதாக இருக்கும்.

இந்த மரக்கறிச் செய்கை ஏராளமான இலாபத்தினை தமக்குப் பெற்றத் தருவதாகக் கூறிய தோட்டத் தொழிலாளி ஒருவர், தற்போது மழை பெய்யாத காரணத்தினால் குளங்கள் வற்றியுள்ளதாகவும், இதனால் மரக்கறிச் செய்கை பெரிதும் பாதிப்படைந்துள்ளதாகவும் குறிப்பிடுகின்றார்.

'நான் ஒரு ஓய்வு பெற்ற ஆசிரியர்.எனக்கு தோட்டம் செய்வது ஒரு பொழுது போக்கு,நான் தோட்டத்தில் நிற்பதைப் பார்த்தே இங்குள்ள மக்கள் எல்லோரும் தோட்டம் செய்யத் தொடங்கினார்கள்.என்னைப் பார்த்து என்னுடைய பேரப்பிள்ளைகளும் தோட்ட வேலையில் ஈடுபடுகின்றனர்' எனக்கூறியதுடன்,ஒரு போதும் நாங்கள் மரக்கறிகளை காசு கொடுத்து வாங்குவதில்லை எனவும், தோட்டத்தில் பயிரிடப்படும் வேறு மரக்கறிகளைக் கொடுத்தே தமக்குத் தேவையானவற்றைக் கடைகளில் வாங்குவதாகவும் தெரிவித்தார்.



# வேலை வாய்ப்புச் செய்திகள்

யாழ்ப்பாணத்தில் பிரபல கல்வி நிலையம் ஒன்றிற்கு Hospitality Hotel Management கற்பிக்கக் கூடிய விரிவுரையாளர் தேவை. தொடர்புகளுக்கு: 077 914 8753 அல்லது 077 248 7881இற்கு தொடர்பு கொள்ளவும்.

---

யாழ். பிரதான வீதியில் இயங்கும் பிரபல எலக்ரோனிக் கடை ஒன்றிற்கு அனுபவமுள்ள வேலையாள் தேவை. சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும். ஆண்கள் மட்டும். வயதெல்லை 20 - 30 வரை. 021 221 9059 இற்கு தொடர்பு கொள்ளவும்.

---

கிளிநொச்சியில் அமைந்துள்ள வெளிநாடுகளுக்கு பொதிகள் அனுப்பும் நிலையத்திற்கு ஆண் ஒருவர் தேவை. கிளிநொச்சியில் உள்ளவர்கள் மட்டும் 077 381 8799 இற்கு தொடர்பு கொள்ளவும்.

---

கொழும்பு -13 இல் இயங்கும் டிஸ் அன்ரனா கேபிள் T.V உபகரணங்கள் விற்பனை மற்றும் சேர்விஸ் செய்யும் நிறுவனத்துக்கு அனுபவமுள்ள விற்பனையாளர் ஒருவர் (Electronics Items) உதவியாளர் ஒருவர், எலக்ரோனிக்ஸ் ரெக்னிசியன்ஸ் ஒருவர் மற்றும் சட்டலைற் ரிசீவர்கள், கேபிள் T.V. உபகரணங்கள் திருத்தம் செய்யக்கூடியவர்கள் தேவை. (தேவைஏற்படின் பயிற்சி அளிக்கப்படும். உணவு மற்றும் தங்குமிடம் இலவசம். திறமைக்கேற்ப சம்பளம் வழங்கப்படும்) T.குமார் 077 771 0785 இற்கு தொடர்பு கொள்ளவும்.

---

யாழ். நகரில் நட்சத்திர ரக Tilko Jaffna city Hotel இற்கு அறை பராமரிப்பாளர் (Room boy, House keeper கணக்குப் பதிவாளர் பயிலுனர்கள் (Accounts trainees) காசாளர் (Cashier) தேவை. ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பிக்கவும். ஆளணி முகாமையாளர் Tilko Jaffna city Hotel 70/6, K.K.S. Road, Jaffna. தொ.பே. 021 222 5969 இற்கு தொடர்பு கொள்ளவும்.

---

யாழ். நகரில் இயங்கும் பிரபல புத்தக விற்பனை நிலையமான K.V.printers இற்கு பெண் விற்பனையாளர் தேவை. உயர்தரம் வர்த்தகப்பிரிவில் சித்தியெய்தியவர்கள் விரும்பத்தக்கது. ஆரம்ப சம்பளமாக 8000/= வழங்கப்படும். மேலதிக சம்பளம் 3 மாதங்களின் பின் வழங்கப்படும். தொடர்புகளுக்கு: 077 159 1677 அல்லது 386, மணிக்கூட்டு வீதி யாழ்ப்பாணம்.

---

நகைக்கடையொன்றுக்கு O/L ,A/L தகைமையுடைய பெண ஊழியர் தேவை. தொடர்பு: 075 097 2131 இற்கு தொடர்பு கொள்ளவும்.

---

தையல் வேலை தெரிந்த பெண்பிள்ளைகள் தேவை. தொடர்புகளுக்கு: இந்திராதேவி தையலகம், மாலிச்சந்தி, அல்வாய் அல்லது 077 497 2867 இற்கு தொடர்பு கொள்ளவும்.

---

குழந்தையைப் பராமரிப்பதற்கு 40 வயதுக்கு மேற்பட்ட பெண்மணி தேவை. மாலை 5 - 7 மணிக்குள் 077 675 2865 இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

---

யாழ். கிழக்கு அரியாலைப் பகுதியில் தென்னந்தோட்டம் உண்டாக்கி பராமரிப்பதற்கு ஆள்தேவை. தங்குவதற்கு வீடு வழங்கப்படும். சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும். தொடர்பு: 077 337 1824இற்கு தொடர்பு கொள்ளவும்.

---

பராமரிப்பாளர், எழுது வினைஞர், கணக்காளர் ஆகியோர் தேவை. 071 497 7019 இற்கு தொடர்பு கொள்ளவும் அல்லது திருநெல்வேலி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம் என்ற முகவரிக்கு நேரில் தொடர்பு கொள்ளவும்.

---

குடும்பப் பொறுப்புகளற்ற, சுறுசுறுப்புள்ள, நம்பிக்கையாக தங்கி வேலைசெய்யக்கூடிய வீட்டுப் பணிப்பெண் தேவை. மாதச் சம்பளம் 15.000. தொடர்புக்கு: 077 311 3439, 0115 657957.

---

வவுனியா நகரிலுள்ள பிரபல்யமான புடவைக் கடைக்கு அனுபவமுள்ள,அனுபவமற்ற (ஆண்கள்) வேலையாட்கள் தேவை. சம்பளம் பேசித்தீர்மானிக்கலாம். தொடர்பு: 077 2200 635, 024 490 2453.

---

வெளிநாட்டிலும், உள்நாட்டிலும் வீட்டுப்பணிப்பெண்ணாக பணி புரிந்தவர்களுக்கு கொழும்பில் தங்கி வேலைசெய்யக் கூடிய மூவர் அடங்கிய ஒரு சிறிய குடும்பத்திற்கு வீட்டுப் பணிப்பெண் மிகவும் அவசரமாகத் தேவை. சாதாரண சமையல், க்ளினிங் வேலைகளுக்கு தங்குமிட, சகல வசதிகளுடன் குடும்பத்தில் ஒருவரைப் போல் கவனிக்கப்படும். மாத சம்பளம் 13 - 18,000 வரை. திறமைக்கேற்ப் சம்பளம் வழங்கப்படும். தொடர்புக்கு: 011437 3974, 071 288 9143.

# ஆட்கடத்தலில் ஈடுபடுவோருக்கு எதிராக கடும் நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கையில் இருந்து சட்ட விரோதமாக ஆட்கடத்தலில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கு அமைய தற்போதைய குடிவரவு மற்றும் குடியகல்வு சட்டங்களில் மாற்றம் கொண்டு வர வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாக குடி[illegible] மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் சூலானந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

கடுமையான சட்டங்களை அமுல்படுத்துவதன் மூலம், சட்ட விரோத ஆள் கடத்தல் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த முடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

சட்ட வரைஞர் திணைக்களத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட புதிய சட்ட மாற்றம் குறித்த பிரேரணை நாடாளுமன்றத்தில் விரைவில் சமர்ப்பிக்கப்படும் என நம்பப்படுகின்றது.

# ஜப்பான் முதலீட்டாளர்கள் இலங்கைக்கு வருகை

ஜப்பானைச் சேர்ந்த 10 முன்னணி முதலீட்டாளர்கள் எதிர்வரும் நான்காம் திகதி இலங்கை வரவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர்கள் இலங்கையில் கலாசாரம், வர்த்தகம் மற்றும் நட்புறவை மேம்படுத்தும் நோக்கில் ஜப்பான் - இலங்கை நிலையம் ஒன்றையும் ஸ்தாபிப்பர் என்று ஜப்பானிய வர்த்தகக் குழுவின் தலைவர் ஜென்ஜிரோ கனிக்குகோ தெரிவித்துள்ளார்.

பொருளாதர வசதியுள்ள முதியோர் இல்லங்களை ஜப்பானில் ஸ்தாபிக்கும் திட்டம் ஒன்று குறித்து தாம் ஆலோசித்து வருவதாக தெரிவித்த அவர், அந்த இல்லங்களில் ஆயுர்வேத முறைமைகளை அறிமுகப்படுத்துவது குறித்தும் ஆராய்ந்து வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

இதனடிப்படையில், ஆயுர்வேத மருத்துவ உடல்பிடித்து விடும் முறைமையைக் கொண்ட 500 மருத்துவ நிலையங்களை ஜப்பானில் அறிமுகப்படுத்த உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த விடயம் குறித்து இலங்கை வரும் உயர் மட்ட குழுவினர் பாரம்பரிய மருத்துவதுறை அமைச்சர் சாலிந்த திஸாநாயக மற்றும் இலங்கை ஆயுர்வேத மருந்தக கூட்டுத்தாபன அதிகாரிகளுடனும் அவர்கள் விரிவாக பேச்சு வார்த்தை நடத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# குளிக்கச் சென்ற இளைஞனை காணவில்லை

சிகிரியா பொலிஸ் பிரிவிலுள்ள வாவியொன்றில் குளிக்கச் சென்ற இளைஞன் ஒருவர் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளதாக பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வாழைச்சேனை முறக்கொட்டாஞ்சேனை பகுதியைச் சேர்ந்த 18 வயதான இளைஞன் ஒருவரே நீரில் மூழ்கியுள்ளமை தெரியவந்துள்ளது.

# வீசா இல்லாத இந்தியர் கைது

வீசா இல்லாத நிலையில் சட்டவிரோதமாக இலங்கையில் தங்கியிருந்த இந்தியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் வத்தேகம, பிட்டியேகெதற என்ற இடத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட இந்தியரை பன்வில நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டதாக பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வத்தேகம பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# இன்று தேரில் பவனி வரும் பொலிகண்டி கந்தவனம்

இலங்கையிலுள்ள முருகக்கடவுளின் ஆறுபடை வீடுகளில் இக்கோவிலும் ஒன்றானது.

இது மிகவும் புராதனமான ஓர் ஆலயமாகும். இலங்கையில் சண்முகர் சிலா விக்கிரமாக மூலஸ்தானத்தில் அமைந்துள்ளது. இங்கு மட்டுமே இக்கோயில் சுமார் இரண்டாயிரம் வருடங்களிற்கு முன்பே உள்ளதாக வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள்.

இக்கோயில் யாழ்ப்பாணத்தின் வடமராட்சி பகுதியில் பருத்தித்துறையிலிருந்து தொண்டைமானாறு செல்லும் வழியில் பொலிகண்டி என்னும் சிற்றூரில் கடற்கரையோரமாக எழிலுடன் அமைந்துள்ளது. இக்கோயிலை ஸ்கந்தாரண்யம், கந்தவனக்கடவை முருகவனம், கந்தசுவாமிகானகம், வெள்ளரிக்கொல்லை அம்பலவாண முருகேச சுவாமி கோயில், பொலிகண்டி கந்தசுவாமி கோயில் எனப் பல பெயர்களால் குறிப்பிடப்படுகின்றது.

இங்குள்ள மூர்த்தங்கள்(விக்கிரங்கள்) அனைத்தும் சிறப்புப் பெற்றவை இங்கே மூன்று சண்முகர் உண்டு. ஒன்று 'பழையவர்' என அழைக்கப்படும் பழைய மூலவர். இரண்டாவது தற்போதுள்ள மூலவர். மூன்றாவது ஆறுமுக நயினர் என அழைக்கப்படும் எழுந்தருளி சண்முகர். இவற்றில் பழையவர் என்னும் பழைய சணமுகர் விக்கிரகம் சோழர் காலத்தையது. இவ்விக்கிரகம் சோழப் பேரரசு காலத்தல் தென்னிந்தியாவில் வாழ்ந்த சிற்பமுனிவரால் வடிக்கப்பட்டது. இச்சிற்ப முனிவர் முத்தரச சோழமன்னனால் கை வெட்டப்பட்டிருந்த வேளையில் தமது கைக்குழைச்சுக்கள் உளி வைத்து செதுக்கியமையினால் இச்சண்முகரை "கைக்குழைச்சுக்கல்யாணவேலவர்" என்று அழைக்கின்றனர். இச்சிற்பியால் செய்த ஏனைய முன்று விக்கிரகங்கள் தென்னிந்தியாவில் உள்ள சிக்கல், எட்டிக்குடி, எண்கள் ஆகிய தலங்களில் உள்ளன.

மேற்குறிப்பிட்ட சண்முகர் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டு முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள குமாரபுரம் எனும் குகதலத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. பின்னர் இக்கோவிலைப் போர்த்துக்கீசர் இடித்தபோது இவ் விக்கிரகம் கடல் மார்க்கமாக கந்தவனம் கொண்டு வரப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டு வழிபடப்பட்டது. இச்சண்முகர் மூலவராய் இருந்தபோது கோவில் மிகவும் சிறப்படைந்தது. இவ்வேளையில் உடுப்பிட்டியைச் சேர்ந்த சிவசம்புப்புலவர் (இவரிற்கு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரே "புலவர்" எனும் பட்டம் வழங்கினார்.) தமது இரு கண் பார்வையையும் இழந்த வேளையில் கந்தவனம் வந்து இங்குள்ள நறுநீர்க்கேணியில் நீராடி இப்பழைய சண்முகரை வழிபட்டு நான்மணி மாலை பாட இவரிற்கு இழந்த கண்பார்வை கிடைக்கப் பெற்றது.

சுமார் நூறு வருடங்களுக்கு முன் இம்மூர்த்திக்கு அபிஷேகம் நடைபெறும் போது அபிஷேகக்குடம் தவறி வீழ்ந்து சுவாமியின் இடது புற வரத கரத்தை ஊறடையச் செய்தது. அதனால் இதே அமைப்புடைய இன்னோர் சண்முக விக்கிரகம் கும்பகோணத்திலிருந்து கொண்டுவரப்பட்டு மூலவராக வைத்து வழிபடப்படுகிறது. மூன்றாவதாக கூறப்படும் (ஆறுமுகநயினர்) இலங்கைக்கு கிடைத்த ஓர் அரிய பொக்கிசமாகும்.

இச் சண்முகர் தேரிற்கும், சூரசங்காரத்தில் இரு



தடவையுமாக வருடத்தில் மூன்று தடவை எழுந்தருள்வார். இங்குள்ள மூன்று சண்முகர்களும் இந்திர மயிலிலேயே அமர்ந்துள்ளனர். இம்மயில் இடது புறம் நோக்கியதாக நிற்கின்றது. அருகில் இருபுறமும் வள்ளியம்மையும், தெய்வயானையும் நின்ற திருக்கோலத்திலேயே காட்சி தருகின்றனர். இது தவிர இங்குள்ள முத்துக்குமார சுவாமியும், கார்த்திகேயரும் உற்சவ மூர்த்திகளாவார். இத்துடன் திருவிழாக்காலங்களில் விநாயகரும், வேணுகோபாலரும் பரிவார உற்சவ மூர்த்திகளாக வீதிவலம் வருகின்றனர்.

இக்கோவில் அற்புதங்கள், சிறப்புக்கள் பற்றி நோக்கும் போது இங்குள்ள நறுநீர்க்கேணி மிகவும் அற்புதம் வாய்ந்தது. இது வீரபாகு தேவர் தண்டத்தினால் இடித்து உண்டாக்கப் பெற்றது என்பது கர்ண. பரம்பரைக் கதை. இதில் கற்பூரம் விளைந்த சிறப்பு உண்டு. இக்கேணியின் நடுவில்லுள்ள கல் 'கற்பூரமலை' எனப்படுகின்றது. இது கற்பூரமாக இருந்ததாகவும், போர்த்துக்கேயர் வந்து இக்கேணியில் இறங்கியதிலிருந்து அத்தன்மை அற்றுப் போனதாகவும் கூறப்படுகின்றது. இங்கு கற்பூரம் விளைந்ததால் முற்காலத்தில் 'கற்பூரக்கந்தன்' என்ற பெயருடன் இக்கந்தவனக் கந்தன் அழைக்கப்பட்டார்.

இக்கோயிலின் தல விருட்சம் வன்னி மரமாகும். இங்கு மூன்று வன்னி மரங்கள் உள்ளன. அதில் இரண்டு வன்னி மரங்கள் இரண்டாயிரம் வருடங்கள் பழமை வாய்ந்தனவாக கூறப்படுகின்றன.

குழந்தை இல்லாதவர்களுக்கு குழந்தைப்பாக்கியம் கிட்டும் அற்புதத் தலமாக இக்கந்தவனம் விளங்குகின்றது. அதற்கு மூல காரணம் இங்குள்ள 'காஞ்சிமா' என அழைக்கப்படும் மாமரத்திலிருந்து கிடைக்கும் கனியாகும். அதாவது ஏழாம் நூற்றாண்டளவில் காஞ்சிமா நகரிலிருந்து கொண்டுவரப்பட்ட காஞ்சி மாமரம் ஒன்று இக்கோவிலில் நின்றது. அதன் கனியை உண்பவர்களுக்கு குழந்தை வரம் கிடைப்பது ஐதீகமாகும். அவ்வகையில் பிறப்பவர்களுக்கு 'கந்தவனம்', 'கல்யாணவேலன்', 'ஸ்கந்தாரண்யன்', 'கந்தவனநாதன்', 'கஞ்சிமாவடிவேல்' போன்ற இக்கோவில் பெயர்களை வைக்கும் மரபும் முற்காலத்தில் இருந்தது. அவ்வகையில் இத்தலத்தில் நேர்ந்து பிறந்தவரே சைவப்பெரியார் சிவபாதசுந்தரனாருமாவார்.

இக்காஞ்சி மாமரம் சென்ற நூற்றாண்டில் அழிவடைந்த போதும் இதன் கன்று மரம் இன்றும் நின்று பயனளிக்கின்றது.

இங்குள்ள தேர் மிகவும் பிரமாண்டமானது. இத்தேரும மாவட்டபுரம் கந்தசுவாமி கோவிற்தேரும் ஓரளவு கொண்டவை. அது நாகரவடிவமுடையது. இது திராவிடவடிவமுடையது. கந்தவனத்திலுள்ள தேர் சுமார் இருநூறு வருடங்களுக்கு முற்பட்டது. இன்றும் அத்தேரே வலம் வருவது சிறப்புடையது. இங்கு தேர்த் திருவிழா மிகவும் சிறப்புடையது.

இங்கு பெரிய யானைக்குட்டி, சித்தானைக்குட்டி, செல்லப்பாசுவாமிகள், யோகர் சுவாமிகள், அருளம்பல சுவாமிகள், நயினாதீவுச் சுவாமிகள் போன்ற பல சித்தர்களாலும், மகான்களாலும் வழிபட்டும் பல அற்புதங்களும் செய்துள்ளனர். இங்கு நவாலியூர் சேமாசுந்தரப் புலவர் வந்து தங்கியிருந்து தமக்கேற்பட்ட குன்ம நோய் நீங்கும் பொருட்டு நான்மணிமாலை பாடி நோய் நீங்கியுள்ளார். இவருடைய நான்மணிமாலை அரங்கேற்றப்பட்ட வேளை மயில் வந்து தோகை விரித்து ஆடியது. அவ்வேளையிலேயே யோகர் சுவாமிகள் 'ஆடுமயிலே' என்று கந்தவனத்தில் பாடினார்.

இவ்வாறு பல சிறப்புக்களைக் கொண்ட கந்தவனத்திற்கு அண்ணாமலைப் பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் இங்கு வந்து (கா.கோ.வெங்கட்ராமன்) கந்தவனக் கலம்பகம் எனும் நூலைப் பாடி வெளியிட்டுள்ளார்.

இக்கோவிற் பூசைகள் கும்ப கோணத்திலிருந்து வந்து நவிண்டிலில் வசித்து வந்த நவிண்டிற் பிராமண குலத்தவர்களால் ஆற்றப்படுகின்றது. தினமும் ஐந்துகாலப் பூசை நடைபெறுகிறது.

இக்கோவிலைப் பராமரிப்பவர்கள் சைவப் பெரியார் திரு.சி.திக்கம் செல்லையாபிள்ளையின் வழித்தோன்றல்களாவார். இவர் 'துகளறுபோதம்' என்னும் சைவ சித்தாந்த நூலிற்கு உரை செய்தவர். இவரின் சிறப்புக் கருதி திருவாவடுதுறை ஆதீனம் 'ஈசானசிவன்' என்னும் பட்டம் வழங்கியது. இவர் முற்காலத்தில் ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்களின் வேண்டுகோளிற்கிணங்கி இலங்கை நாடாளுமன்றத்திற்கு சென்று எமது சைவசமயத்தின் சிறப்புக்களையும், முக்கியத்துவததையும் விளக்கிக் கூறி சைவசமயத்திற்கு அங்கீகாரம் கிடைக்கச் செய்தவர். இவர் சேர்.பொன்.இராமநாதனின் உற்ற நண்பருமாவார். இப்பெரியாரின் முயற்சியால்தான் வேதாரண்யம் (திருமுறைக்காடு) வரணியைச் சேர்ந்த சைவர்களிற்கும் உரிய வகையில் மீண்டும் கிடைக்கப் பெற்றது. இப்பெரியாரின் குடும்பமே பரம்பரையாக ஆதீன கர்த்தாக்களாய் இருந்து பரிபாலித்து வருகிறது.

தொகுப்பு
பொலிகண்டி விசிந்தன்.

72) ரிஸ்மியா ஒவ்வொரு சனிக்கிழமையும் தனது அப்பம்மாவை பார்க்கப் போவாள். ரிஸ்மியா முந்தநாள் தன் அப்பம்மாவை பார்க்கப் போயிருந்தால், நாளை மறுதினம் என்ன கிழமை?

..............................................................................................

73) ஒரு காற்சட்டையை வெயிலில் உலர்த்த 5 நிமிடங்கள் தேவை எனின், 10 காற்சட்டைகளை உலர்த்த எவ்வளவு நேரம் தேவை?

..............................................................................................

..............................................................................................

**பின்வரும் ஆங்கிலச் சொற்களின் தமிழ்க் கருத்தை எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| 01) Village | : ........................ | 02) Jungle | : ........................ |
| 03) Stones | : ........................ | 04) Train | : ........................ |
| 05) Nest | : ........................ | 06) Carpenter | : ........................ |
| 07) Mosque | : ........................ | 08) Rainbow | : ........................ |
| 09) Net ball | : ........................ | 10) Spoon | : ........................ |

**பின்வரும் சிங்களச் சொற்களின் தமிழ்க் கருத்தை எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| 01) புடுவ | : ........................ | 02) தாத்தா | : ........................ |
| 03) பதுர | : ........................ | 04) கிரிபத் | : ........................ |
| 05) சுதுபாட்ட | : ........................ | 06) ரதுபாட்ட | : ........................ |

**'மாலைக்காட்சி' என்னும் தலைப்பில் சரியான எழுவாய், பயனிலையுடன் அமைந்த 06 வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் குறைந்தது நான்கு சொற்களையாவது கொண்டிருத்தல் வேண்டும்.**

01) ..............................................................................................

02) ..............................................................................................

03) ..............................................................................................

04) ..............................................................................................

05) ..............................................................................................

06) ..............................................................................................



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2012

பகுதி - II

1 மணி 15 நிமி

# கல்வி முரசு


வெளியீடு 87



**இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.**

**தலைப்புக்கேற்ற படத்தைத் தெரிந்து இலக்கத்தை அட்டவணையில் குறிக்க.**

01.



(1) (2) (3) (4) (5) (6) (7) (8) (9) (10) (11) (12)

| தரைப்போக்கு வரத்துச் சாதனம் | தொடர்பு சாதனம் | விமானப்போக்கு வரத்துச் சாதனம் | துணி உற்பத்தி பொருட்கள் | கடல்போக்கு வரத்துச் சாதனம் | தளபாட உற்பத்திப் பொருட்கள் |
|---|---|---|---|---|---|
| 1) .................. | 3) ........... | 5).................... | 7)................. | 9)...................... | 11)...................... |
| 2) .................. | 4) ........... | 6).................... | 8)................. | 10)...................... | 12)...................... |

**பிரசினங்களுக்குப் பொருத்தமான விடையை எழுதுக.**

13. பி.ப. 2.15 இற்குப் பயணத்தை ஆரம்பித்த தில்சான் மீண்டும் வீட்டுக்கு பி.ப. 5.10 இற்கு வந்தான். அவனது பயணத்திற்கு செலவிட்ட காலத்தைக் காண்க.

..............................................................................................

14. தொழுவத்தில் இருந்த 14 மாடுகளினதும், 6 ஆடுகளினதும் கால்களின் மொத்த எண்ணிக்கை யாது?

..............................................................................................


**பாடலை வாசித்து வினாக்களுக்கு விடையளிக்க.**

கொழும்பு நகரம் பெரிய நகரம் - கோல அழகு கொண்ட நகரம்
மாடி மனைகள் நிறைந்த நகரம் - மக்கள் பலரும் விரும்பும் நகரம்

காலிமுகக் கடற்கரையும் - கவின் மிகு பல கட்டடங்களும்
தூர நின்று நாம் பார்த்திடவே - துலங்கும் பெரிய துறைமுகமும்

விரிந்த பரந்த வீதிகளும் எழில் - விளங்கும் கோயில் பள்ளி பலவும்
நிறைந்த நகரம் கொழும்பு நகரம் நிகரில்லாத பெரிய நகரம்

இந்து சமுத்திர ஓரத்திலே - மிக இனிதாய் அமைந்த ஒரு நகரம்
வந்து பலரும் பார்த்திடவே - வாஞ்சை கொள்ளும் பெரு நகரம்



15. இப்பாடல் எதைப் பற்றிக் கூறுகின்றது?..........

16. இப்பாடலில் வரும் கடற்கரையின் பெயர் என்ன?..........

17. இப்பாடலில் வரும் சமுத்திரத்தின் பெயர் என்ன?..........

**பின்வரும் சொற்களுக்குப் பொருத்தமான எதிர்க் கருத்துச் சொற்கள் தருக.**

18. பெரிய .......... 19. நகரம் ..........

20. தூர .......... 21. பரந்த ..........

**பின்வரும் சொற்களுக்கு ஒத்த சொல் தருக.**

22. அழகு .......... 23. முகம் ..........

24. வீதி .......... 25. வாஞ்சை ..........

26. கோயில் .......... 27. பெரிய ..........

28. கொழும்பு நகரம் எந்த மாகாணத்தில் அமைந்துள்ளது? ..........

29. இப்பாடலில் வரும் பெயர்ச் சொற்கள் மூன்று எழுதுக.

1) .......... 2) .......... 3) ..........

30. இலங்கைக்கு மிக அருகில் அமைந்துள்ள நாட்டின் பெயர் தருக..........

**நாடக நிகழ்வுக்காக விற்கப்பட்ட நுழைவுச் சீட்டு தொடர்பான விபரம் தரப்பட்டுள்ளது. அதைக் கொண்டு வினாக்களுக்கு விடையளிக்க.**

| வகுப்பு | நுழைவுச் சீட்டு விலை |
|---|---|
| விசேட வகுப்பு | ரூ. 200.00 |
| முதலாம் வகுப்பு | ரூ. 100.00 |
| இரண்டாம் வகுப்பு | ரூ. 50.00 |
| மூன்றாம் வகுப்பு | ரூ. 30.00 |

31. விசேட வகுப்புச் சீட்டுகள் 150 விற்றிருப்பின் கிடைத்த இலாபம் எவ்வளவு?

..........

32. முதலாம் வகுப்புச் சீட்டுகள் 100 விற்றிருப்பின் கிடைத்த இலாபம் எவ்வளவு?

..........

33. 2 ஆம் வகுப்புச் சீட்டுகள் 200 விற்றிருப்பின் கிடைத்த பணம் எவ்வளவு?

..........

34. 3 ஆம் வகுப்புச் சீட்டுகள் விற்றுக் கிடைத்த மொத்தத் தொகை ரூ.9000.00 எனில், விற்ற சீட்டுக்களின் எண்ணிக்கையைக் காண்க.

..........


35. சீட்டுக்கள் விற்றுக் கிடைத்த மொத்தப் பணத்தைக் காண்க.

..........

36. மொத்தமாக விற்ற சீட்டுக்களின் எண்ணிக்கை யாது?

..........

**தரம் 4 வகுப்பில் உள்ள மாணவர்கள் விரும்பும் காலை உணவின் விபரம் வரைபில் கீழே காட்டப்பட்டுள்ளன. அதனை அவதானித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடைதருக.**




37. மிகக் கூடுதலானோர் விரும்பும் உணவு வகை யாது?

..........

38. மிகக் குறைந்தளவானோர் விரும்பும் உணவு வகை யாது?

..........

39. அதிகமானோர் விரும்பும் உணவுக்கும் மிகக் குறைந்தளவானோர் உண்ட உணவுக்கும் இடையிலான வித்தியாசம் யாது?

..........



40. இடியப்பம் உண்ட மாணவர்கள் எத்தனை பேர்?

..........

41. எத்தனை மாணவர்கள் இட்லியை சாப்பிட்டிருக்கின்றனர்?

..........

42. ஒரு தென்னந்தோட்டத்தில் 1860 தேங்காய்கள் பறிக்கப்பட்டன. அவற்றை 3 லொறிகளில் ஒரே அளவில் ஏற்றப்பட்டன. ஒரு லொறியில் ஏற்றப்பட்ட தேங்காய்களின் எண்ணிக்கை யாது?

..........

**தரப்பட்ட சிங்கள வசனங்களின் தமிழ்க் கருத்தை எழுதுக.**

43. ஸ்துதிய .......... 44. ஆயுபோவன் ..........

**தரப்பட்ட சொல்லுக்கான ஆங்கிலச் சொல்லை எழுதுக.**

45. ஆசிரியர் .......... 46. சாரதி ..........

47. விவசாயி .......... 48. தாதி ..........

49. தபாற்காரன் .......... 50. வைத்தியர் ..........

**தரப்பட்ட சொற்களைக் கொண்டு இடைவெளிகளை பூரணப்படுத்துக.**

**(காசோலை, பூக்கள், வாகனப்புகை, காலநிலை, அணில், சுத்தமான, நன்னீரில், மண்புழு, வெட்டுக்கிளி)**

51. சூழல் ..........காரணமாகவும் மாசடைகின்றது.

52. எமது தொழிலைப் பாதிப்பதில் வானிலையும், ..........யும் காரணமாகின்றன.

53. கொடுக்கல், வாங்கலில் ..........பயன்படுத்தப்படுகின்றது.

54. ..........விவசாயியின் நண்பன் என அழைக்கப்படுகின்றது.

55. மீன்கள் ..........மூலம் சுவாசிக்கின்றன.

56. ..........முட்டையிட்டு இனம் பெருகாத ஒரு பிராணியாகும்.

57. டெங்கு நோயைப் பரப்பும் நுளம்பு ..........நீரிலேயே முட்டையிடும்.

58. விரால் மீன் ..........வாழும் மீனினமாகும்.

**பின்வரும் சுருக்கக் குறியீடுகளை விரித்து எழுதுக.**

59. கூ.மொ.வி.நி .......... 60. இ.போ.ச ..........

61. கி.பி. .......... 62. இ.மி.ச. ..........

63. இ.ரூ.கூ. .......... 64. மு.ப. ..........

**பகுதி A இல் சில அளவைகள் தரப்பட்டுள்ளன. பகுதி B இல் உள்ள பொருத்தமான நியம அலகைக் கோட்டினால் இணைக்க.**

| | A | B |
|---|---|---|
| 65. | கிலோமீற்றர் | g |
| 66. | லீற்றர் | Km |
| 67. | மீற்றர் | ml |
| 68. | சென்ரி மீற்றர் | m |
| 69. | கிராம் | cm |
| 70. | கிலோகிராம் | l |
| 71. | மில்லிலீற்றர் | kg |

# சோனியா பிரதமராக முடியாது ஜனாதிபதி வேட்பாளர் சங்மா உறுதி



இந்தியாவின் பிரதமராக அன்னிய நாட்டவர் ஒருவர் பிரதமராகக் கூடாது என்ற நிலைப்பாட்டில் தாம் சாகும் வரை உறுதியாக இருப்பேன் என்று குடியரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிடும் பி.ஏ.சங்மா தெரிவித்துள்ளார்.

2004ஆம் ஆண்டு தேர்தல் முடிந்த பிறகு சோனியா காந்தி பிரதமராவதைத் தாம் தடுக்கவிலை என்று முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல்கலாம் தமது புத்தகம் ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த சங்மா, என்னுடைய தனிப்பட்ட கருத்து. இப்பவும் சரி நான் சாகும் வரைக்கும் சரி என்னுடைய நிலைப்பாடு ஒன்றுதான். ஒருபோதும் இந்த நாட்டின் பிரதமர் பதவியை அன்னிய நாட்டவர் ஒருவர் ஏற்கக் கூடாது என்பதுதான். இதில் நிச்சயம் நான் உறுதியாக இருப்பேன் என்றார்.

1999ஆம் ஆண்டு சோனியா வெளிநாட்டவர் என்ற பிரச்சினையை முன்வைத்து காங்கிரசிலிருந்து வெளியேறி தேசியவாத காங்கிரஸை உருவாக்கியவர்களில் பி.ஏ.சங்மாவும் ஒருவர். தற்போது குடியரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிட சங்மா விரும்பி சோனியாவை சந்திக்க முயற்சித்தார். ஆனால் சோனியா நேரம் ஒதுக்கவில்லை.

# சோனியா கேட்டிருந்தால் பிரதமராக்கியிருப்பேன்


## கலாம் பரபரப்பு தகவல்




(புதுடில்லி)

கடந்த 2004 லோக்சபா தேர்தல் முடிந்த பின், காங்கிரஸ் தலைவர் சோனியா கோரிக்கை விடுத்திருந்தால், அவரை பிரதமராக நியமிக்க தயாராக இருந்தேன். பல்வேறு கட்சி தலைவர்களிடம் இருந்து, எனக்கு நெருக்கடி வந்தா லும், இந்த விஷயத்தில் உறுதியாக இருந்தேன், என முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம், பரபரப்பு தகவலை வெளியிட்டுள்ளார்.

கடந்த 2004இல், லோக்சபா தேர்தலில், ஐ.மு. கூட்டணி வெற்றி பெற்றது. இதைத் தொடர்ந்து, யார் பிரதமராவார் என்ற பரபரப்பு பேச்சு எழுந்தது. காங்கிரஸ் தலைவர் சோனியா, இத்தாலியில் பிறந்தவர் என்பதால், அவருக்கு அந்த பதவியை கொடுக்கலாமா என்ற சர்ச்சை எழுந்தது. நாடு முழுவதும் இந்த விவகாரம் பரபரப்பாக பேசப்பட்டது. இறுதியில், மன்மோகன் சிங் பிரதமராக பதவியேற்றார். சோனியா பிரதமராவதற்கு, அப்போது ஜனாதிபதியாக இருந்த, அப்துல் கலாம் தடையாக இருந்தார் என்றும் பேசப்பட்டது. இந்நிலையில், அப்துல் கலாம், தான் எழுதியுள்ள டர்னிங் பாயிண்ட்ஸ் என்ற புத்தகத்தில், இதுபற்றிய விவரங்களை தெரிவித்துள்ளார். இந்த புத்தகம் அடுத்த வாரம் வெளியிடப்படவுள்ளது.




# தி.மு.க.விற்குள் புகைச்சல்



ஸ்டாலினால் ஓரங்கட்டி வைக்கப் பட்டிருந்த கட்சி பிரமுகர்கள் சிலரை கருணாநிதி திடீரென அழைத்துப் பேசியுள்ளது தி.மு.க.வில் புகைச்சலை ஏற்படுத்தியுள்ளது. இதை கனிமொழியின் செல்வாக்கை உயர்த்தும் நடவடிக்கையாக ஸ்டாலின் ஆதரவாளர்கள் கருதுகின்றனர்.

உச்சகட்டத்தை நெருங்கி வரும் கோஷ்டிப் பூசலை சமாளிக்க, கட்சியின் மாநில நிர்வாகத்தை அதிரடியாக மாற்றி அமைக்க, கருணாநிதி புதுத்திட்டம் வகுத்துள்ளதாக, தி.மு.க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# சென்னையில் பிரசாரத்தை தொடங்கினார் பிரணாப்!

இந்தியாவின் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் பிரணாப் முகர்ஜி நேற்று தனது பிரசாரத்தை தொடங்கினார். இதன் முதல் கட்டமாக தனது பிரசாரத்தை சென்னையிலிருந்து தொடக்குகிறார். இதற்காக சென்னை அருகே உள்ள தாம்பரம் இராணுவ விமான நிலையத்திற்கு, நேற்று மாலை 4 மணிக்கு விமானம் மூலம் சென்றடைந்தார்.

சென்னை சென்ற அவரை மத்திய அமைச்சர்கள் ப.சிதம்பரம், மு.க. அழகிரி, குலாம் நபி ஆசாத் மற்றும் நாராயணசாமி ஆகியோர் வரவேற்றனர். மேலும், மு.க. ஸ்டாலின் தலைமையில் தி.மு.க. கட்சியினரும், காங்கிரஸ் தரப்பில் ஞானதேசிகன், கிருஷ்ணசாமி எம்.பி. ஆகியோரும் வரவேற்றனர்.

அங்கிருந்து புறப்பட்டு தி.மு.க. தலைவர் கருணாநிதியை கோபாலபுரத்தில் உள்ள அவரது இல்லத்தில் சந்தித்து ஆதரவு திரட்டினார். பின்னர், அடையாறில் உள்ள பார்க் ஷெராட்டன் ஓட்டலில், தி.மு.க. எம்.பி., எம்.எல்.ஏ.க்களையும், ஐக்கிய முற்போக்கு கூட்டணியில் அங்கம் வகிக்கும் ஏனைய எம்.பிஎம்.எல்.ஏ.க்களையும் அவர் சந்தித்து ஆதரவு திரட்டி உள்ளார்.

# 1006 இலவச திருமணத்தில் முறைகேடு அறநிலையத்துறை அதிகாரிகள் மூவர் நீக்கம்



(சேலம்)

இந்து சமய அறநிலையத்துறை சென்னை மண்டல இணை ஆணையர் வாசுநாதன், திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில் துணை ஆணையர் வான்மதி, சென்னை அறநிலைய துறை உதவி ஆணையர் சிவக்குமார் ஆகியோர் நேற்று முன்தினம் இரவு திடீரென பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இதற்கான உத்தவை அரசு செயலாளர் ராஜாராம் பிறப்பித்துள்ளார். 3 உயர் அதிகாரிகள் பணிநீக்கம் செய்யப்பட்டதற்கான காரணம் என்ன? என்பது குறித்து பரபரப்பு தகவல்கள் வெளியாகியுள்ளது. கடந்த வாரம் அறநிலையத்துறையின் சார்பில் சென்னையில் 1006 ஏழை தம்பதிகளுக்கு இலவச திருமணம் நடந்தது. இதை தமிழக முதல்வர் ஜெயலலிதா நடத்தி வைத்தார். இதற்காக தமிழகம் முழுவதிலுமிருந்து 1006 தம்பதிகளை அறநிலையத்துறை அதிகாரிகள் தேர்வு செய்து அனுப்பி வைத்தனர். இவர்களில் ஏராளமான தம்பதிகளுக்கு ஏற்கனவே திருமணம் ஆனதாக தகவல் வெளியானது.

இது தொடர்பாக உளவுத்துறை நடத்திய விசாரணையில், திருமணம் ஆன தம்பதிகளும் முதல்வர் நடத்திய திருமணத்தில் கலந்து கொண்டு மீண்டும் திருமணம் செய்து கொண்டது தெரியவந்தது. இது அதிகாரிகளுக்கு தெரிந்தே நடந்ததாகவும் கூறப்பட்டது. இதன்காரணமாக அவர்கள் மூவரும் பணிநீக்கம்செய்யப்பட்டிருக்கலாம் என கூறப்படுகிறது.

# 6ஆம் வகுப்பு மாணவன் 20 இணையத்தள தேர்வில் வெற்றி



தமிழ்நாடு, திருநெல்வேலியைச் சேர்ந்த சந்துரு(வயது 11 ) என்ற சிறுவன், தமது 10 வயதுக்குள் 20 இணையதள தேர்வுகள் எழுதி வெற்றி பெற்றுள்ளார்.

திருநெல்வேலி மாவட்டம் மகேந்திரகிரியில் உள்ள "இஸ்ரோ" விண்வெளி ஆராய்ச்சிக் கழகத்தில் விஞ்ஞானியாக சந்துருவின் தந்தை கார்த்திக் பணியாற்றி வருகின்றார்.

கார்த்திக், தனது மனைவி லதா மற்றும் மகன் சந்துருவுடன் குடும்பத்துடன் பாளையங்கோட்டையில் வசித்து வருகின்றனர்.

சந்துரு, பாளையங்கோட்டை புஷ்பலதா வித்யா மந்திர் பாடசாலையில் ஆறாம் வகுப்பு படித்து வருகிறார்.

சிறு வயதிலிருந்தே கணினி ஆர்வமுடைய சந்துரு, அமெரிக்க மென்பொருள் நிறுவனங்களான மைக்ரோசாப்ட், சிஸ்கோ, ஆரக்கிள், ஜூனிபெர் போன்றவை நடத்தும் இணையதள தேர்வுகளை எழுதி வெற்றி பெற்றுள்ளார்.

வழக்கமாக கணினி துறையில் பட்டப்படிப்பு படித்தவர்கள் எழுதும் திறன் கொண்ட சி.சி. என்.ஏ வலையமைப்பு தேர்வுகளையும், எம்.சி.பி., எம்.சி.டி.எஸ்., எம்.சி.பி.டி., ஆகிய இணையதள தேர்வுகளையும் தமது 10 வயதுக்குள்ளாக எழுதியுள்ளார்.

இதுகுறித்து சந்துருவின் தாயார் லதா கூறுகையில், சிறுவயதிலிருந்தே சந்துரு கணிதத்தில் ஆர்வமுடையவனாக இருந்தார்.

அபாகஸ் கணிததேர்வின் எட்டு லெவல்களையும் தமது ஒன்பது வயதில் முடித்து தேசிய அளவில் தங்கப்பதக்கம் வென்றார். தற்போது மொபைல் போனில் ஆன்ட்ராய்ட் தொழில்நுட்ப முறைகள் குறித்தும், கிளைவுட் கம்ப்யூட்டிங் குறித்தும் கற்றுவருகிறார்.

சந்துரு இசை, செஸ் விளையாட்டுகளில் ஆர்வத்துடன் உள்ளார். மேற்கத்திய இசையில் லண்டன் இசைப்பள்ளியான டிரினிட்டியின் மூன்றாம் நிலை தேர்வில் வெற்றிபெற்றுள்ளார். தாமாகவே ஆர்வத்துடன் ஜப்பான், சீனா, பிரெஞ்ச் மொழிகளையும் கற்றுவருகிறார் என்றார்.

## ஹிட்லரின்...

(05 ஆம் பக்க தொடர்ச்சி)

ஜுலை 10ஆம் திகதி 1945 இல் ஆர்ஜென்டீனாவை ஸி530 என்னும் நீர்மூழ்கிக் கப்பல் அடைந்தது. அந்த நீர்மூழ்கிக் கப்பல் ஜேர்மனிக்குச் சொந்தமானது. அது பற்றிய விபரங்களை அமெரிக்கா கேட்ட போது, கப்பல் மாலுமிகளை அமெரிக்கா விசாரிக்க ஆர்ஜென்டீனா ஒத்துழைத்தது. அதில் யார் யார் வந்தார்கள் என்ற விபரமே இல்லை. வெறும் மாலுமிகள் மட்டும்தான். அதற்கு ஐந்து வாரங்களுக்குப் பின்னர் ஸி977 என்னும் ஜேர்மனிக்குச் சொந்தமான இன்னுமொரு நீர்மூழ்கிக் கப்பல் தெற்கு ஆர்ஜென்டீனாவை வந்து அடைந்தது. இதற்கும் அதே கதைதான் அமெரிக்காவுக்குச் சொல்லப்பட்டது.


ஆனால் ஹிட்லர் இறந்தார் என்று ஜேர்மனி அறிவித்த அன்றுவரை அதாவது மே மாதம் 2ஆம் திகதி வரை நோர்வே துறைமுகத்தில்தான் ஸி977 என்ற நீர் மூழ்கிக் கப்பல் நின்று கொண்டிருந்தது. மே 2ஆம் திகதி திடீரென நோர்வே துறைமுகத்தில் இருந்து மாயமாக மறைந்தது அந்த நீர்மூழ்கிக் கப்பல். அதன்பின் பல நாட்களாக அது காணப்படவே இல்லை. ஜேர்மனி தோற்றிருந்த வேளையில் அனைவரும் சரணடைந்து கொண்டிருந்த நேரமது.

மொத்தமாக 102 நாட்கள் கடலினடியிலேயே பிரயாணம் செய்த ஸி977 ஆர்ஜென்டீனாவை வந்து அடைந்தது. அதில் யார் வந்தார்கள்? சரணடையும் சாத்தியம் இருந்தும், இவ்வளவு ஆபத்தான நீண்ட நாள் கடலடிப் பிரயாணத்தை அது ஏன் மேற்கொண்டது என்ற கேள்விகளுக்கு ஆர்ஜென்டீனா எந்தப் பதிலும் கொடுக்கவில்லை. பல தலைவர்களுடனும், அளவுக்கு மிஞ்சிய பணத்துடனும், சொத்துக்களுடனும் ஆர்ஜென்டீனாவை வந்தடைந்தான் ஹிட்லர் என்று சொல்கிறார்கள்.

அதன் பின்னர் ஆர்ஜென்டீனாவின் பல இடங்களிலிருந்து இரகசியமான, மிகவும் நம்பகத்தன்மை உடையவர்களிடமிருந்து, ஹிட்லரைக் கண்டதாகச் செய்திகள் FPA வசம் வந்தடைந்தது. ஹிட்லருக்கு இரண்டு பெண்கள் பிறந்ததாகவும், அவர்கள் அங்கேயே வாழ்ந்து வருவதாகவும் தகவல்கள் கிடைத்தன. அந்த பெண்களைச் சந்தித்த பலர் சாட்சிகளாகவும் இருந்திருக்கின்றனர். ஏ.்.பா ஜேர்மனியில் இருந்து தப்பும்போதே கர்ப்பமாக இருந்ததாகவும் சொல்கின்றனர்.

'கிரே வோல்.்.வ்' (Gray Wolf) என்னும் புத்தகத்தை எழுதிய இங்கிலாந்தின் பிரபல பத்திரிகையாளர் ஜெரார்ட் வில்லியம்ஸ் (Gerrard Williams) Sky Newsக்குக் கொடுத்த பேட்டியின் படி நாம் தற்போது ஹிட்லர் இறந்ததாக நம்பும் ஆண்டுக்கு 17 ஆண்டுகள் கழித்து 1962 இல் ஆர்ஜென்டீனாவில் ஹிட்லர் இறந்தான் என்று தெரிய வருகிறது. அதாவது வயது போன நிலையில் இயற்கையாக இறந்தான் ஹிட்லர்.

# மிகப்பெரிய கடற்போர் பயிற்சி
# 22 நாடுகள் பங்கேற்பு



அமெரிக்காவின், ஹவாய் தீவில் உள்ள பேர்ல் ஹார்பரில் நேற்று முன்தினம் மிகப்பெரிய கடற்போர் பயிற்சி ஆரம்பமானது. இது ஆகஸ்ட் 3ஆம் திகதி வரை நடைபெறுகிறது. அமெரிக்க கடற்படை 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை இதுபோன்ற பயிற்சியை நடத்தி வருகிறது.

உலகின் மிகப் பெரிய கடற்படை பயிற்சியான இதில், 22 நாடுகளைச் சேர்ந்த 25 ஆயிரம் மாலுமிகள் மற்றும் இராணுவ அதிகாரிகள் கலந்து கொள்கின்றனர். கடந்த 2010-ல் நடைபெற்ற பயிற்சியில் 14 நாடுகள் பங்கேற்றன. ரஷயா, ஜப்பான் ஆகிய வல்லரசு முதல், சிலி, டோங்கா உளளிட்ட சிறியநாடுகளைச் சேர்ந்த 42 போர்க்கப்பல்கள், 6 நீர்மூழ்கிக் கப்பல்கள் மற்றும் 200 போர் விமானங்கள் பங்கேற்கின்றன.

வெடிகுண்டுகளை செயலிழக்கச் செய்தல், இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்படும் பொது மக்களுக்கு உதவுதல் உள்ளிட்ட பல பயிற்சிகள் வழங்கப்பட உள்ளதாக பசிபிக் போர்க்கப்பல் கமாண்டர் செசில் ஹானே தெரிவித்துள்ளார். இதன்மூலம் ஒத்த கருத்து உடைய நாடுகள் கூட்டாக செயல்படுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

# ஆளில்லா விமானத்தை கடத்திய மாணவர்கள்



அமெரிக்க உள்நாட்டுப் பாதுகாப்புத் துறையின் ஆள் இல்லாத விமானத்தை டெக்சாஸ் பல்கலைக்கழக ஆய்வு மாணவர்கள் கடத்தினர். அந்த விமானத்தை பாதுகாப்புத் துறை அதிகாரிகள் இயக்கிக் கொண்டிருந்தபோதே அவர்களின் கட்டுப்பாட்டில் இருந்து விமானத்தை மாணவர்கள் பறித்து, தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளனர்.

டெக்சாஸ் பல்கலைக்கழக வளாகத்தில் மாணவர்கள் தாங்கள் உருவாக்கிய நவீன தொழில்நுட்பத்தை இந்தவகையில் பரிசோதித்துக் காட்டினர். விமானத்தை தங்கள் கட்டுப்பாட்டுக் கொண்டு வர மாணவர்கள் பயன்படுத்திய தொழில்நுட்பம் மிகவும் கடினமானதல்ல. 1000 டொலர்கள் செலவிட்டால் அதற்கான கருவியை வடிவமைத்துவிட முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

# 'சுன்னத்து' துன்பம் விளைவிக்கக்கூடிய செயல் நீதிமன்ற தீர்ப்பால் ஜேர்மனியில் சர்ச்சை



முஸ்லிம் மற்றும் யூத ஆண் பிள்ளைகளுக்கு மதரீதியில் செய்யப்படுகின்ற சுன்னத்து தொடர்பில், ஜேர்மனியின் நீதிமன்றம் ஒன்று அண்மையில் வழங்கிய தீர்ப்பு சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

ஜேர்மனியின் கொலோன் நகரில் 4 வயது முஸ்லிம் பையன் ஒருவனுக்கு அவனது பெற்றோர் சுன்னத்து செய்து வைத்துள்ளனர்.

ஆனால் அந்த அறுவை சிகிச்சைக்குப் பின்னர் அவனுக்கு தொடர்ந்து ரத்தம் வரவே, பெற்றோர் அவனை மருத்துவமனை கொண்டு சென்றனர். இதனையடுத்து சட்ட நடவடிக்கை அதிகாரிகள் அந்த மருத்துவர் மீது கிரிமினல் வழக்கை தொடுத்தனர், ஆனால் மருத்துவரை நீதிமன்றம் விடுவித்தது.

மேலும் ஒப்புதல் வழங்கக் கூடிய வயது வராத ஒரு பிள்ளைக்கு மதக் காரணங்களுக்காக சுன்னத்து செய்வது அப்பிள்ளைக்கு உடல் ரீதியான துன்பத்தை ஏற்படுத்துகிற செயலாகும் என நீதிமன்றம் தெரிவித்திருந்தது.

எனவே குழந்தைகளுக்கு பெற்றோர்கள், தங்களது விருப்பப்படி சுன்னத்து செய்து வைக்க முடியாது என்றும் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

சுமார் நாற்பது இலட்சம் முஸ்லிம்களும், ஒன்றரை இலட்சம் யூதர்களும் வாழும் நாடு ஜேர்மனி.

நீதிமன்றத்தின் இத்தீர்ப்பு மக்களுடைய மத சுதந்திரத்துக்கு எதிரான ஒரு தாக்குதல் என ஜேர்மனியின் முஸ்லிம் மற்றும் யூத சமூகங்கள் கூறுகின்றன. இந்நிலையில் நீதிமன்றத்தின் தீர்ப்பு தடை அல்ல என்றும், பிள்ளைக்கு ஒப்புதல் வழங்குவதற்குரிய வயதுவரும் வரை பெற்றோர் காத்திருக்க வேண்டும் என்பதாகத் தான் தற்போதைய தீர்ப்பு அமைந்துள்ளது என்றும் சட்ட நிபுணர் ஒருவர் விளக்கமளித்துள்ளார்.

இந்நிலையில் பெர்லின் நகரின் யூத மருத்துவமனை சட்டம் என்ன சொல்கிறது என்ற தெளிவு ஏற்படாதவரை, தாங்கள் செய்யக்கூடிய சுன்னத்துகளை இடை நிறுத்திவைப்பதாக அறிவித்துள்ளது.

இதுகுறித்து ஜேர்மனியின் வெளிவிவகாரத்துறை அமைச்சர் குய்டோ வெஸ்டர்வேலே கூறுகையில், மக்களின் மத ரீதியான உரிமைகளுக்கும் மரபுகளுக்கும் மதிப்பளிக்கிற ஒரு தேசம் ஜேர்மனி என்று தெரிவித்துள்ளார்.

# "சதை தின்னி" பக்ரீரியா

ஏரோமோனஸ் ஹைட்ரோபிலா என்னும் ஒரு வகை சதை தின்னும் பக்டீரியாவால் அமெரிக்காவைச் சேர்ந்த இளம்பெண் ஒருவர் தன் கை, கால்களை இழந்துள்ளார்.

அமெரிக்காவின் ஜார்ஜியா மாநிலத்தில் உள்ள கரல்டன் பகுதியை சேர்ந்தவர் எய்மீ கோப்லேண்ட் (வயது-24). மேற்கு ஜார்ஜியா பல்கலைக்கழக மாணவியான இவர், கடந்த மே 1ம் திகதி அப்பகுதியில் உள்ள ஆற்றின் குறுக்கே அமைக்கப்பட்டிருந்த கயிற்றில் தொங்கியபடி சென்றார்.

அப்போது, எதிர்பாராதவிதமாக கீழே விழுந்ததில் காலில் ஆழமான வெட்டுக் காயம் ஏற்பட்டது. உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட அவருக்கு முதலுதவி சிகிச்சைகள் அளிக்கப்பட்டன.

அவரது, கிழிந்த சதைகளை ஒழுங்குபடுத்தி 22 தையல் போடப்பட்டது. ஒரு சில நாட்களில் காலில் கடுமையான வலி ஏற்பட்டது. காலில் ஏற்பட்ட புண் நாள் ஆகஆக தீவிரமாக தொடங்கியது.

பாக்டீரியா தாக்குதலால் நோய்த் தொற்று அதிகரித்துள்ளதாக மருத்துவர்கள் கூறினர். இதையடுத்து, மேல் சிகிச்சைக்காக அகஸ்டா நகரில் உள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

அங்கு அவரை தீவிரமாகப் பரிசோதித்த மருத்துவர்கள், 'சதை தின்னி' என்றழைக்கப்படும் ஏரோமோனஸ் ஹைட்ரோபிலா வகை பக்டீரியாவால் அவர் தாக்கப்பட்டிருப்பதை கண்டுபிடித்தனர்.

# அதிகாரவரம்பை மீறமாட்டேன் எகிப்தின் ஜனாதிபதி உறுதி



எகிப்தில் கடந்த ஆண்டு மக்கள் புரட்சியின் மூலம் அதிபர் முபாரக்கின் 30 ஆண்டு கால சர வாதிகார ஆட்சி வீழ்ந்தது. அதை தொடர்ந்து சமீபத்தில் நடந்த அதிபர் தேர்தலில் முஸ்லிம் சகோதரத்துவ கட்சியை சேர்ந்த முகமது முர்சி வெற்றி பெற்றார்.

எகிப்தில் இவர்தான் ஜனநாயக முறைப்படி மக்களால் தேர்நதெடுக்கப்பட்ட முதல் அதிபர் என்ற பெருமையை பெறுகிறார். நேற்றுமுன்தினம் அவர் பொது மக்கள் முன்பு உறுதிமொழி ஏற்றுக் கொண்டார்.

முபாரக்கின் ஆட்சிக்கு எதிராக தலைநகர் கெய்ரோவில் உள்ள தக்ரீர் மைதானத்தில்தான் மக்கள் போராட்டம் தொடங்கியது. இந்த போராட்டத்துக்கு புதிய அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்ட முகமது முர்சி தலைமை தாங்கினார். எனவே, போராட்டம் நடைபெற்ற அந்த மைதானத்தில் மக்கள் முன்பு தோன்ற விரும்பினார். எனவே அங்கு சுமார் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் திரண்டனர்.

அவர்கள் முன்பு முகமது முர்சி உறுதிமொழி எடுத்துக் கொண்டார். அப்போது அவர் கூறியதாவது:-

நான் அனைத்து எகிப்தியர்களுக்கும் சிறந்த அதிபராக திகழ்வேன். பணியில் நேர்மையாக நடந்து கொள்வேன். மக்கள் மீது பழங்கால சட்ட திட்டங்கள் புகுத்தப்பட்டது. இராணுவத்தின் அதிகர்ர வரம்பு நாடாளுமன்ற சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு இருக்கும். நான் ஒரு போதும் அதிபருக்கு உரிய அதிகார வரம்பில் இருந்து மீற மாட்டேன். எனது அதிகாரத்தை தவறாக பயன்படுத்த மாட்டேன் என உறுதி அளிக்கிறேன் என்று தெரிவித்தார்.

# 17 இலட்சம் அகதிகள்ள வெளியேறுமாறு உத்தரவு



பாகிஸ்தானில் அகதிகளாக தங்கியுள்ள ஆப்கானிஸ்தானை சேர்ந்த 17 இலட்சம் பேரை வெளியேறும்படி பாகிஸ்தான் அரசு உத்தரவிட்டுள்ளது. அதற்கான கெடு இன்றுடன் முடிகிறது.

பாகிஸ்தானின் இந்த அதிரடி நடவடிக்கை ஆப்கானிஸ்தான் அரசுக்கு கடும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. ஆனால் இந்த விவகாரத்தில் பாகிஸ்தான் அரசு கடுமையாக உள்ளது. இன்றைக்குள் வெளியேறாவிட்டால் சட்ட விரோதமாக குடியேறிய ஆப்கானிஸ்தானியர்கள் கணக்கெடுக்கப்பட்டு கைது செய்யப்படுவார்கள். பின்னர் அவர்கள் மீது சட்டப்பூர்வ நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என எச்சரிக்கை விடுத்துள்ளது.

# 22 ஆண்டுகளுக்குப் பின் மியன்மாருக்கு அமெரிக்கத்தூதுவர்



மியன்மார் நாட்டுக்கான தூதராக டெரிக் மிட்செல் என்பவரை 22 ஆண்டுகளுக்குபின்பு அமெரிக்கா நியமித்துள்ளது. இதை அமெரிக்க நாடாளுமன்ற மேலவை உறுதி செய்துள்ளது.

மியன்மாரில் ஆங் சான் சூகி 1990இல் நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் வெற்றி பெற்ற போதிலும், அவரை ஆட்சி அமைக்க இராணுவம் அனுமதிக்கவில்லை. சூகியை வீட்டுக் காவலில் வைத்தது. இதையடுத்து, அமெரிக்கா தனது மியான்மர் தூதரை திரும்பப் பெற்றது.

இந்நிலையில், கடந்த 2010-ம் ஆண்டு சூச்சி விடுதலை செய்யப்பட்டார். கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற 44 நாடாளுமன்ற தொகுதிகளுக்கான இடைத்தேர்தலில், போட்டியிட்ட 43 தொகுதியிலும் சூச்சி கட்சி வெற்றி பெற்றது. இதையடுத்து, மியான்மர் மீதான பொருளாதார தடையை அமெரிக்கா தளர்த்தி இருப்பதுடன், இருதரப்பு உறவை வலுப்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறது. இதன் தொடர்ச்சியாக, அமெரிக்க அதிபர் ஒபாமா, 22 ஆண்டுகளுக்குப் பிறகு மியான்மர் நாட்டுக்கான தூதராக டெரிக் மிட்செல் என்பவரை நியமித்தார்.

# "அம்மா" என்று அழையுங்கள்



நாட்டின் முதல் பெண்மணி என்று தன்னை அழைக்க வேண்டாம் என எகிப்து ஜனாதிபதியின் மனைவி கேட்டுக் கொண்டுள்ளார்.

எகிப்தில் நடந்த ஜனாதிபதி தேர்தலில் முஸ்லிம் சகோதரத்துவ கட்சியின் தலைவரான முகமது முர்ஸி வெற்றி பெற்று, புதிய ஜனாதிபதியாக நேற்று முன் தினம்பதவி யேற்றார்.

முன்னாள் ஜனாதிபதி முபாரக்கின் மனைவி சுசானே, நவீன பாணியில் தான் உடை அணிவார். ஆனால் தற்போதைய ஜனாதிபதியின் மனைவி நக்லா வெளியிடங்களுக்கு பர்தா அணிந்து தான் செல்கிறார்.

# யாழ்.பல்கலைக்கழக கல்விசார் ஊழியர்களும் தொடர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட முடிவு

(யாழ்ப்பாணம்)

இலங்கை பல்கலைக்கழக கல்விசார் ஊழியர்களின் இணையம் (FUTA) மேற்கொண்ட முடிவை ஏற்று, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்விசார் ஊழியர்களும் 04.07.2012 தொடக்கம் தொடர்ச்சியான வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதென யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது என அதன் செயலாளர் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையின் விபரம் வருமாறு :


◈ இலங்கை பல்கலைக்கழக கல்விசார் ஊழியர்கள் ஒரு விசேட (Special Category) வகையினராகக் கருதப்படல் வேண்டும்.

◈ அரசினால் உயர்கல்விக்குச் செலவிடப்படும் நிதி மொத்தத் தேசிய உற்பத்தியில் குறைந்தது ஆறு வீதமாவது உயர்த்தப்படல் வேண்டும். அத்துடன் இலவசக் கல்வி தொடர்பான கொள்கை பற்றி அரசின் நிலைப்பாட்டை வெளிப்படுத்தி தெளிவான ஒரு விளக்கத்தை அரசு தரவேண்டும். ஏனெனில் அரசு தற்பொழுது உயர்கல்வியைத் தனியார் மயமாக்கும் செயற்பாட்டில் முனைப்புடன் செயற்பட்டு வருகிறது.

◈ உயர்கல்வி தொடர்பான சீர்திருத்தங்களை மேற்கொள்ளும் போது எல்லாப் பங்குதாரர்களையும், பொது மக்களையும் உள்ளடக்கிய முறைமையான ஒரு ஆலோசனைச் செயன் முறை ஒன்றை உருவாக்கும் வரை தற்போது நடைமுறையிலுள்ள உயர்கல்விச் சீர்திருத்தச் செயன்முறைகள் அனைத்தையும் இடைநிறுத்த வேண்டும்.

◈ இலங்கைப் பல்கலைக் கழகங்களை அரசியல்மயமாக்குவதையும் அவற்றை நுண்முகாமைத்துவம் செய்வதையும் நிறுத்தி, பல்கலைக்கழகங்கள் சுயாதீனமான நிறுவனங்களாக எழுச்சி பெற்று இலங்கையின் அபிவிருத்தியில் ஊக்கிகளாகத் தொழிற்பட அனுமதிக்க வேண்டும்.

◈07.07.2011 இல் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்காலப் பிரேரணையில் குறித்துரைக்கப்பட்ட சம்பளப் படியை நடைமுறைப்படுத்த வேண்டும். இதன் அடிப்படையில் கல்விசார் ஊழியர்கள் விரிவுரைகள் நடத்துதல், கூட்டங்களில் பங்குகொள்ளல், ஆய்வுகளை மேற்பார்வை செய்தல், க.பொ.த. உயர்தரப் பரீட்சை சம்பந்தமான கடமைகளில் ஈடுபடல் போன்ற அனைத்து கல்விசார் மற்றும் துறைத்தலைவர், பீடாதிபதி, இணைப்பாளர்கள், பணிப்பாளர்கள் போன்ற தொண்டு அடிப்படையிலான அனைத்துக் கடமைகளில் இருந்தும் இக்கோரிக்கைகள் நிறைவேறும் வரை விலகியிருக்கத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



பூநகரி - மன்னார் வீதியில் இருந்து அத்தாய் கிராமத்திற்குச் செல்லும் புதிய காப்பெற் வீதியில் குறுக்கே பல கிரவல் கும்பிகள் பறிக்கப்பட்ட நிலையில், கடந்த ஏழு நாட்களாக போக்குவரத்துச் செய்ய முடியவில்லை என மக்கள் புகார் தெரிவிக்கின்றனர். (112)

# வீட்டுத் தோட்டத்தில் கஞ்சாச் செடி

உடுப்பிட்டி வீரபத்திரர் கோவிலடிப் பகுதியில் உள்ள வீட்டு வளவினுள் வீட்டுத் தோட்டம் போன்று இரண்டு கஞ்சாச் செடியினை வளர்த்துப் பராமரித்து வந்த நபரை வல்வெட்டித்துறைப் பொலிஸார் கையும் மெய்யுமாகக் கைது செய்துள்ளனர்.

குறித்த நபருக்கு எதிராக பொலிஸார் வழக்குப் பதிவு செய்து பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர்படுத்தினர். குறித்த வழக்கினை விசாரித்த நீதவான் நீதிமன்ற நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் குற்றவாளி குற்றத்தை ஒப்புக்கொண்டமையினால் 12 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன், கஞ்சாச் செடியையும் அழிக்கும்படி உத்தரவிட்டுத் தீர்ப்பளித்தார். (116)

# காரைநகர் - ஆலடியில் புதிய சந்தை திறப்பு



காரைநகர்-ஆலடியில் தற்காலிக சந்தை ஒன்று திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வு காரைநகர் பிரதேச சபை தவிசாளர் வே. ஆனைமுருகன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

மேற்படி தற்காலிக சந்தையானது தவிசாளருடன் காரைநகர் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் காரைநகர் அமைப்பாளருமான வீ.கண்ணன் (றஜனி) இணைந்து நாடா வெட்டி மக்கள் பாவனைக்குத் திறந்து வைத்தனர்.

இந்நிகழ்வில் கருத்து வெளியிட்ட வீ.கண்ணன் எமது பிரதேசத்திற்குப் பொதுச் சந்தை சொந்தமாக இல்லாததால் மக்கள் பெரும் சிரமப்பட்டனர். நாம் எமது பிரதேச சபைக் கூட்டத்தின் தீர்மானத்திற்கு இணங்க, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு காரைநகர் பிரதேச அபிவிருத்தி தொடர்பாகத் தெரியப்படுத்தியிருந்தோம். குறிப்பாக பொதுச்சந்தை மற்றும் தலைமைக் காரியாலயம் அமைப்பதற்கு நிதி உதவியை பெற்றுத் தருமாறு அமைச்சரின் கொழும்பு அலுவலகத்தில் காரைநகர் பிரதேச அபிவிருத்தி தொடர்பான மகஜர்களை அண்மையில் கையளித்ததாகவும் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் பிரதேச சபை உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## வடக்கு...

என்று இலங்கை ஊடகவியலாளர் ஒருவரின் கேள்விக்கு போஸ்னர் பதிலளித்தார்.

இந்த நேரலை காணொளிக் கலந்துரையாடல், அண்மையில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் வெளியிட்ட பூகோள மனித உரிமைகள் நிலை அறிக்கையை மையப்படுத்தியே இடம்பெற்றது.

அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஹிலாரி கிளின்ரனும், தானும் அண்மையில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸுடன் நடத்திய பேச்சுத் தொடர்பாக கருத்து வெளியிட்ட மைக்கல் போஸ்னர்,

கரிசனைக்குரிய பலதரப்பட்ட விவகாரங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டன. அந்த விவகாரங்கள் தொடர்பாக அமெரிக்க அரசாங்கம் தொடர்ந்து அழுத்தம் கொடுக்கும். இலங்கை அரசு அமைத்திருந்த நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பாக நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

ஆனால், வடக்கில் இன்னமும் தொடரும் பாகுபாட்டை தீர்ப்பதற்கும், தமிழ் மக்களை அரவணைத்துக் கொள்வதற்கும் நல்லிணக்க விவகாரங்களை கையாள்வதற்கான செயற்திட்டம் ஒன்றை இலங்கை அரசாங்கம் கொண்டிருக்க வேண்டும்.

இலங்கையை அமெரிக்கா தனிமைப்படுத்தவில்லை எனவும், உலகின் ஏனையநாடுகளுக்கு பொருந்தக் கூடிய சர்வதேச நியமங்கள் இலங்கைக்கும் பொருந்தும் எனவும் அவர்தெரிவித்துள்ளார். உலகின் அனைத்து நாடுகளும் ஒரே விதமாகவே கண்காணிக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## போதனா...

ஊழல்கள் தொடர்பான விசாரணை அறிக்கையின் நான்கு பிரதிகள் எடுக்கப்பட்டு நீதிமன்றத்தின் ஊடாக சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒரு வார காலத்தில் நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 24 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் யாழ்.பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 14 பேரும், காங்கேசன் துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 10 பேரும் கைது செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அத்துடன் யாழ்.பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 8 பாரிய குற்றச் செயல்கள் நடைபெற்றுள்ளது. இதில் 3 கத்திக்குத்துச் சம்பவங்களும், 3 திருட்டுச் சம்பவங்களும், ஒரு கொள்ளைச் சம்பவமும், ஒரு பாலியல் துஷ்பிரயோகமும் பதிவாகியுள்ளதாக அவர் தெரிவித்தார். இந்தச் சம்பவங்களுடன் தொடர்புடைய 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் 1010 கிராம் கஞ்சாவும், 14 மில்லி கிராம் ஹெரோயினும் மீட்கப்பட்டுள்ளதாகவும் மன்னார் மற்றும் முருங்கன் பொலிஸ் பிரிவுகளுக்குட்பட்ட பகுதிகளில் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (02)

## சனத்தொகைப்...

ஓயாப் பகுதி உண்மையில் தமிழில் மணலாறு என முன்னர் அழைக்கப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்தப் பகுதியில் 9000 சிங்கள மக்கள் குடியேற்றப் பட்டதாகக் குற்றம் சுமத்தியுள்ள அவர், அண்மையில் மீளவும் வெலிஓயாப் பகுதி முல்லைத்தீவு மாவட்டத்துடன் இணைக்கப் பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்துடன் வெலிஓயா இணைக்கப் பட்டதுடன் மாவட்டத்தின் சனத்தொகைப் பரம்பலில் திடீர் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

யுத்தத்தின் காரணமாக ஏற்பட்ட உயிரிழப்புக்கள் மற்றும் மக்களின் புலப்பெயர்வு ஆகியவற்றினாலும் சனத்தொகைப் பரம்பலில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக சுரேஷ் பிரேமச்சந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

## கறுப்புப்...

குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தின் நடவடிக்கைகளை புகழ்ந்து பாராட்டும் பொறிமுறை மையுடைய ஊடகங்களுக்கு மட்டுமே சந்தர்ப்பம் உண்டு என்பதனை வெளிப்படுத்துவதாகவே இவ்வாறான கட்டுப்பாடுகள் நோக்கப்பட வேண்டுமென அவர் சுட்டிக் காட்டியுள்ளார். தனிப்பட்ட நபர்கள் மீது சேறு பூசும் ஊடகங்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமாயின், அரசாங்கம் முதலில் அரச ஊடகங்களையே கட்டுப்படுத்த வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரச ஊடகங்கள் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு எதிராக கடுமையான விமர்சனங்களை வெளியிட்டு வருவதாகத் தெரிவித்துள்ள அவர், இணையத் தள முடக்கம் மற்றும் ஊடகவியலாளர் கைது ஆகிய நடவடிக்கைகளை எந்தவொரு நியயாமான தரப்பினரும் அனுமதிக்க மாட்டார்கள் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

## இணையத்தள...

சுதந்திரமான ஊடகத்துறை மீது அச்சுறுத்தும் நோக்கில் முன்னெடுக்கப்படும் எந்தவித நடவடிக்கையோ அல்லது கருத்துச் சுதந்திரம் கட்டுப்படுத் தப்படுவதோ ஐக்கிய நாடுகளின் மனித உரிமைத் தராதரங்களுக்கு முரணானதெனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விருந்தினர்களுக்காக...

திறக்கப்படாதுள்ளது.

இப்பாடசாலையில் 32 ஆசிரியர்கள் பணியாற்றுவதுடன் 700 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கின்றனர். இதில் சுமார் 20 இற்கு மேற்பட்ட ஆசிரியர்கள் வெளிமாவட்டங்களைச் சேர்ந்தவர்கள், அங்கு தங்கி நிற்கும் ஆண் ஆசிரியர்கள் ஒரு வகுப்பறையினுள் முடங்கியிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆண்-பெண் என இரு விடுதிகள் அமைக்கப்பட்ட போதும் இன்னமும் திறக்கப்படாதுள்ளது.

இதேபோல் உயர் அதிகாரிகளின் வருகைக்காக யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலத்தின் ஒரு பகுதிக் கட்டடமும், வவுனியா - ஓமந்தை மத்திய கல்லூரியும் பல காலமாகவே காத்திருந்து பின்னர் திறந்து வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (12)

## துண்டுப்.....

அறிக்கை சமர்ப்பிக்கத் தவ றிய காரணத தில் துண் பிரசுர அறிக்கை சமர்ப் பிக்க ளதாக யாழ். போதனா வைத்தியசாலை அரச மருத்துவ சங்கத்தினர் தெரிவித்தனர். (எஸ்)

## தொடர்கதையாகும்...

அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதில் இலங்கையைச் சேர்ந்த 53 தமிழ் அகதிகள் இருந்துள்ளனர்.

இதேவேளை, ஆயிரம் கிலோ மீற்றர்கள் பயணம் செய்து 70 இலங்கைத் தமிழர்கள் நேற்று முன்தினம் கோகோஸ் தீவுகளைச் சென்றடைந்தனர்.

# மாகாண சபைத் தேர்தல்கள்

## வேட்பாளர் தெரிவில் கட்சிகள் தீவிரம்

(கொழும்பு)

கலைக்கப்பட்ட மாகாண சபைகளுக்கான தேர்தல்களில் போட்டியிடும் வேட்பாளர்களைத் தெரிவுசெய்யும் நடவடிக்கையில் கட்சிகள் மிகத் தீவிரமாக ஈடுபட்டுள்ளன.

கிழக்கு, சப்ரகமுவ மற்றும் வடமத்திய மாகாண சபைகள் கலைக்கப்பட்டதுடன், இவற்றுக்கான வேட்புமனுத்தாக்கல் செய்யும் திகதி எதிர்வரும் 12 இலிருந்து 19 வரையெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் ஆளும் ஐக்கிய முன்னணியின் பிரதான கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, வேட்பாளரைத் தெரிவுசெய்வதற்கான நேர்முகத் தேர்வை எதிர்வரும் ஆறாம் திகதி நடத்தவுள்ளதாகக் கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இதேவேளை தேர்தலில் போட்டியிடுவது தொடர்பான தமது கட்சியின் இறுதித் தீர்மானம் எதிர்வரும் 5 ஆம் திகதி எடுக்கப்படுமென அக்கட்சியின் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார். அத்துடன் இந்தத் தேர்தல்களில் கூட்டணி எதுவுமில்லாமல் ஐ.தே.க. தனித்துப் போட்டியிடுமெனவும் அவர் தெரிவித்தார்.

இதேபோன்று ஜே.வி.பி.யும் தனித்துப் போட்டியிடத் தீர்மானித்துள்ளது. எனினும் ஜே.வி.பி.யிலிருந்து பிரிந்துசென்றுள்ள புதிய சோசலிசக் கட்சி தேர்தலில போட்டியிட மாட்டாதெனத் தெரிவித்துள்ளது.

மாகாண சபைகள் கலைப்புத் தொடர்பாக நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், அவற்றின் முடிவைப் பொறுத்தே அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து ஆராயப்படுமென தமிழ்த்தேசியக் கூட்டமைப்புத் தெரிவித்துள்ளது.

இதேவேளை கிழக்குத் தேர்தலில் தனித்தா, அல்லது கூட்டணியுடனா இணைந்து போட்டியிடுவதென இதுவரை தீர்மானிக்கவில்லையென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

அமைச்சர் றிசாட் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், மற்றும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி ஆகியன ஆளும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியுடன் இணைந்து போட்டியிடவுள்ளன.

# புகையிலைத் துகள்களுடன் 4 இந்தியர்கள் கைது




இந்தியாவிலிருந்து இலங்கைக்கு கடல் மார்க்கமாக கடத்திவரப்பட்ட ஹான்ஸ் எனப்படும் புகையிலை துகள்களுடன், நான்கு இந்தியர்களை இலங்கை கடற்படையினர், கற்பிட்டி கடற்பரப்பில் வைத்து கைதுசெய்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு கற்பிட்டி கடல் பிரதேசத்தில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த கடற்படையினர், மன்னார் கடற்பரப்பை நோக்கி படகொன்று செல்வதை அவதானித்துள்ளனர்.

அதனை தொடர்ந்து, படகை இடை மறித்து சோதனையிட்டபோது, 560 கிலோ எடையுடன் புகையிலை துகள்கள் கடத்தி செல்லப்பட்டதை கண்டு பிடித்ததுடன், படகினையும், சந்தேக நபர்களையும் கைது செய்து நேற்று கற்பிட்டி பொலிஸாரிடத்தில் ஒப்படைத்துள்ளனர்.

கற்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருவதுடன், இவர்களை சுங்க அதிகாரிகளிடம் ஒப்படைக்கவுள்ளதாகவும் தெரிவித்தனர்.

# அரச வைத்திய சங்க நிர்வாக குழு தெரிவு




அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைவராக டாக்டர் அநுருத்த பாதெனிய தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், இதேவேளை சங்கத்தின் செயலாளராக டாக்டர் சந்திக்க எபிட்டகடுவ மற்றும் பொருளாளராக டாக்டர் கே.மில்ரோய் ஆகியோர் தெரிவுசெய்யப் பட்டுள்ளனர். நேற்று முன்தினம் நடைபெற்ற நிருவாகக் குழுத்தெரி வுக்கான வாக்கெடுப்பில் அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் அனைத்து வைத்தியர்களும் தகுதிபெற்றிருந்தனர்.

அத்துடன் சுமார் ஐயாயிரம் வைத்தியர்கள் இதன்போது வாக்களித்துள்ளனர். அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் இம் முறை நிருவாகக் குழு தெரிவிற்க்கான தேர்தலை இடைநிறுத்துமாறு கோரி அண்மையில் வைத்தியர்கள் சிலர் இரண்டு மனுக்களை தாக்கல் செய்திருந்த போதிலும் நீதிமன்றம் அந்தக் கோரிக்கைகளை நிராகரித்தது.

# மிருசுவிலில் குடும்பஸ்தர் மரணம்

தவசிகுளம் மிருசுவில் பகுதியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். கருணாரத்தினம் செபஸ்தீபன் (வயது-33) என்பவரே சடலமாக மீட்கப்பட்ட நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டு பிரேத பரிசோதனையின் பின் நேற்று மாலை உறவினரிடம் சடலம் ஒப்படைக்கப் பட்டது. (153)

# தெல்லிப்பளை சந்திக்கு அருகில் வாய்க்காலில் பாய்ந்தது பவுசர்



தெல்லிப்பளை சந்திக்கு அருகாமையில் உள்ள வாய்க்காலினுள் தண்ணீர் பவுசர் தடம் புரண்ட நிலையில் குறித்த பவுசரின் சாரதி, நடத்துனர் இருவரும் சிறுகாயங்களுடன் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளனர். நேற்றுப் பிற்பகல் 4.45 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

தண்ணீருடன் தெல்லிப்பளை சந்தியில் இருந்து, தெல்லிப்பளை வைத்தியசாலை வீதியால் கட்டுவன் நோக்கிச் செல்லும் வீதியில் இந்த விபத்து இடம்பெற்றது. வீதி அகலிப்புப் பணிக்காக தற்போது புதிதாக கட்டப்படும் பாலத்தை விலத்தி தண்ணீர் பவுசர் செல்ல முறபட்ட வேளையில் அருகில் உள்ள வாய்க்காலில் தடம் புரண்டுள்ளது. வாய்க்கால் ஒரு பகுதி கட்டப்படுகின்ற போதிலும் போக்குவரத்துக்காக விடப்பட்டுள் வீதியின் மற்றைய பகுதி குண்டும் குழியுமாக காணப்படுவதுடன் பாரிய வாகனங்கள் செல்லக்கூடிய வசதியையும் கொண்டிருக்காததுடன் பாதுகாப்பற்ற வாய்க்காலையும் கொண்டுள்ளது.

நாளாந்தம் தெல்லிப்பளை வைத்தியசாலைக்கு அதிக எண்ணிக்கையான பொதுமக்களுடன் பஸ் வண்டிகள், தனியார் பஸ் வண்டிகளும் பெரும் சிரமத்துடன் ஆபத்தான நிலையில் இந்த இடத்தை கடந்து செல்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# இளைஞனுக்கு வாள்வெட்டு

யாழ்ப்பாணம்-கலட்டிப் பகுதியில் நேற்று மாலை 3.00 மணியளவில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவம் ஒன்றில் அதே இடத்தைச் சேர்ந்த எஸ்.லக்கீசன் (வயது-25) என்பவர் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றார். தனிப்பட்ட பிரச்சினை காரணமாக இச்சம்பவம் இடம்பெற்றதாகத் தெரியவருகின்றது. (எஸ்)

# பஸ்ஸில் பயணித்த மாணவி தவறி விழுந்து படுகாயம்

(கொடிகாமம்)

கொடிகாமத்திலிருந்து யாழ்ப்பாணம் சென்று கொண்டிருந்த தனியார் பஸ்சில் இருந்து மாணவி தவறி விழுந்து காயமுற்ற நிலையில் நேற்றுக் காலை சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மீசாலை இராமாவில் பகுதியில் இடம்பெற்ற மேற்படி சம்பவத்தில் திருலேஸ்வரன் லக்சிகா (வயது-12) என்ற மாணவியே காயமடைந்தவராவார்.

குறிப்பிட்ட மாணவி மிதி பலகையில் பயணிக்கும் போதே மேற்படி சம்பவம் இடம்பெற்றது. இது தொடர்பாக நடத்துனர் சாவகச்சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். கடந்த மாதம் சாவகச்சேரிப் பகுதியில் இவ்வாறான சம்பவம் ஒன்று இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (153)

# தேசிய ஒருமைப்பாட்டைக் கருதியே வேட்பாளர் தேர்வு இடம்பெறவேண்டும்

## பவ்ரல் அமைப்பு கோரிக்கை

தேசிய ஒருமைப்பாட்டிற்கு பாதிப்பு ஏற்படாத வகையில் கிழக்கு மாகாண சபைக்காக போட்டியிடும் வேட்பாளர்களை தெரிவு செய்வதற்கு கட்சித் தலைவர்கள நடவடிக்கை மேற்கொள்ள வேணடுமென தேர்தல் கண்காணிப்பாளர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

அனைத்து இனப்பிரிவுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் வேட்பாளர் தெரிவு இடம்பெற வேண்டுமென பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

மூவின மக்களும் வாழ்கின்ற ஒரு மாகாணமாக கிழக்கு திகழ்வதுடன், அதற்கேற்றவாறு தேர்தல் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டுமென அவர் கூறியுள்ளார்.

நாட்டின் தேசியப் பிரச்சினைக்கு தீர்வினை எட்டவேண்டிய தீர்மானமிக்க ஒரு சந்தர்ப்பத்திலேயே மாகாண சபைத் தேர்தல் நடைபெறவுள்ளதால் நடைமுறைச சாத்தியமான வகையில் அனைவருக்கும் சம உரிமை வழங்கும் வகையில் தேர்தல் பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை வேட்புமனு தயாரிப்பிலும் கிழக்கு மாகாண தேர்தல் பிரசாரங்களிலும் தேசிய ஒருமைப்பாடு குறித்து கட்சித் தலைவர்கள் உன்னிப்பாக கவனம் செலுத்த வேண்டுமென நீதியானதும் நியாயமுமான தேர்தலுக்கான மக்கள் இயக்க நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் குறிபபிட்டுள்ளார்.

தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள வேட்பாளர்கள் இந்த மாகாணத்தில் தங்களின் இன ரீதியான உணர்வுகளைப் பிரதிபலிக்கும் வகையிலேயே கடந்த காலங்களில் தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததை அவதானிக்க முடிந்ததாக அவர் கூறியுள்ளார். தேசிய ஒருமைப்பாட்டை உறுதிசெய்யும் வகையில் இம்முறை வேட்பாளர்களைத் தெரிவு செய்வது கட்சிகளின் பாரிய பொறுப்பாகவுள்ளது எனவும் கீர்த்தி தென்னக்கோன் சுட்டிக்காட்டினார்.

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி யேசுதாசன்

நவாலி சென்.பீற்றர்ஸ் வீதியைச் (சங்கையான்) சேர்ந்த **சின்னத்தம்பி யேசுதாசன்** (செல்லர், பிரபல சித்த மருத்துவர்) நேற்று ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் சிவக்கொழுந்துவின் அன்புக் கணவரும், அருளானந்தம், மரியதாஸ், காணிக்கைதாசன் (சிறி), அருமை, இராஜேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிரபல பத்திரிகையாளர் தம்பிராசா பரமலிங்கம் (நாவாலியூர் கவிராயர்) என்பவரின சிறிய தந்தையும் ஆவார். அன்னாரின் இறுதிச் சடங்குகள் நாளை (03.07.2012) செவவாய்க்கிழமை நடைபெறும் என அறிவிக்கப்பட் டுள்ளது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**தகவல்:**

**த.பரமலிங்கம் (பெறாமகன்)**

(C/177)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 யூலை 02 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.